# காலம் கடந்தும் வாழும் கலைஞன்



கலைவாரிதி, கலாபூசணம்

இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

கலையை நேசித்து
கலைஞனாக வாழ்ந்து
காலத்தைக் கடந்தும்
எங்களை வாழ வைத்து
வழிகாட்டும் தெய்வத்திற்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


- நினைவில் நின்றவை – இ.கிருஷ்ணதுரை
- உண்மை – நேர்மை – பயமின்மை – பிள்ளைகள்
- வழிகாட்டிய எங்கள் ஒளிவிளக்கு – சகோதரங்கள்
- விசத்தனை முருகன் துதி – இ.கிருஷ்ணதுரை
- கைதொட்டதெல்லாம் கலையாகும் – வேந்தன்
- அமரர் ஒரு முத்தமிழ் வித்தகர் – ஆ.கனகரத்தினம்
- நமது ஊர் நாடகம் ஒன்று முடிந்தது – செ.பவளகாந்தன்
- பல்ஆளுமை மிக்க பண்பாளன் துரை – துரைசிங்கம் ரகு
- பொன்னாலை வரதராஜா பெருமான் துதி – இ.கிருஷ்ணதுரை
- மேடையில் விளையாடாமல் நடித்தார் – சோம. திருச்செல்வம்
- நான் அவருடைய ரசிகன் – தி.உதயசூரியன்
- செல்வச் சந்நிதி முருகன் துதி – இ.கிருஷ்ணதுரை
- என்றும் நினைவில் வாழும் அத்தான் – தேவலோஜினி சிவசுந்தரம்
- பணியுமாம் பெருமை – ஆ.கதிரைமலைநாதன்
- அழாதவர் யார்..! – வாசு.முத்தழகன்
- விதி சதி செய்துவிட்டது – க.வாமதேவன்
- பண்ணாகம் கலைப் பொக்கிசம் மறைந்தது – கனகரசன்
- செருக்கில்லாச் சீராளன் – நாச்சியார் செல்வநாயகம்
- தலைசிறந்த குடும்பத் தலைவர் நினைவாக – அ.திகம்பரலிங்கம்
- செயற்கரிய வல்லவர் எனதருமைத் தம்பி – செ.வைத்தியலிங்கம்
- சகலகலாவல்லவன் – நடராசா
- எனது அருமை நண்பா... – து.தனேசன்
- என் பெரும் பாசத்திற்குரிய பெரியப்பா... – லக்ஷா
- பல்துறைப் புலமையாளன் கிருஷ்ணதுரை – நாகரஞ்சினி ஐங்கரன்
- எங்கள் நேசத்திற்குரிய கவிமன்னன் – அபிசா, ராதை
- அப்பப்பா இனி வரமாட்டியளா..? – விவேகா
- பழமொழிகள் தொகுப்பு
- அப்பாவின் உள்ளப் பதிவுகளில் இருந்து சில...
- தீதை காட்டும் கடவுள்
- நீத்தார் பெருமை (திருக்குறள் – அறத்துப்பால்)
- வம்சாவழி
- நன்றி நவிலல்



**அட்டை வடிவமைப்பு – கோபி**

**நூல் வடிவமைப்பு – சுதன்**

**அச்சுப்பதிப்பு – திருமொழி அச்சகம் சங்கானை (தொலைபேசி 0213215867, 0212251066)**

**08.05.2015**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலைவாரிதி, கலாபூஷணம்

# இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை

திதி வெண்பா


**செப்பியவாண்டு ஜய மதில் வருமுயர் பங்குனி இருபத்தைந்தில்**
**மாசிலாத் திதி உயர்சதுர்த்திதனில் ஊர்புகழும் - கலாபூஷணன்**
**கிருஷ்ணதுரைப் பெரியோன் விருப்புடனே ஏகி**
**கமலக் கண்ணன் திருப்பாதங்கள் சென்றடைந்தார் விரும்பி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு மலர்கள் பொதுவாக இறந்தவர்களின் நினைவாக அவர்களின் வாழ்வைப் பதிவு செய்யும் முகமாக எழுதப்படுகின்றது. இறந்தவர்களைப் புகழும் வகையில் இந்த நினைவு மலர்கள் அமைவதுண்டு. ஆனால், இந்த நினைவு மலரில் தனது வாழ்க்கையை தானே பதிவு செய்திருக்கின்றார் எங்கள் தந்தை. தன்னைப் பற்றி மற்றவர்கள் எழுதாமல் தானே தனது வாழ்க்கையைப் பதிவு செய்யவேண்டும் என்றே எம் தந்தை அடிக்கடி கூறுவார். அதற்காக தனது நினைவுகளை அவ்வப்போது பதிவு செய்தும் வந்திருக்கின்றார். ஆனால் "இப்ப எதற்கு இதுகளை எழுதுகின்றீர்கள்..?" என எமது தாயாரின் அன்புக் கோபத்தால் எழுதிய பல பக்கங்கள் கிழிக்கப்பட்டுவிட்டன. எஞ்சியிருந்தவைதான் இனி நீங்கள் படிக்கும் இந்தப் பக்கங்கள். அவரது வாழ்க்கையின் முக்கிய பகுதிகள் இதில் அடங்கியிருக்கும் என்றே நாம் கருதுகின்றோம்.

# நினைவில் நின்றவை



*பிறந்தேன் 22.09.1944.*

வளர்ந்தேன் சில வருடங்கள் நாரந்தனையில். அப்போது என்னுடன் பிறந்த தம்பியை ஒரு சிறு மேசைமேல் வைத்து அழுதார்கள். ஏன் அழுதார்கள் என்பது தெரியாது. பலபேர் வந்தார்கள். எனக்கு இனம்தெரியாத மகிழ்ச்சி அவர்களைக்கண்டு. ஆனால் தம்பி இறந்ததிற்காகத்தான் அவர்கள் எல்லோரும் வந்தார்கள் ஏன்பதனை பின்னொரு காலம் உணர்ந்தேன். பின்னர் யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் வாடகை வீட்டில் வசித்தோம். எனது ஆரம்பக் கல்வியும் யாழ் இந்துக் கல்லூரியில் ஆரம்பமானது. தொடர்ந்து பண்ணாகம் வந்து எனது தொடர் கல்வியினை சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் தொடர்ந்து க.பொ.த சாதாரண தரம் சித்தியுடன் நிறைவு பெற்றது. விசேட கல்வியாக மோட்டர் மெக்கானிசம், கில்னர் பில்டிங் யாழ்ப்பாண தொழிநுட்ப கல்லூரி இரண்டு வருடம் சித்தி அடைந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயாவும் அம்மாவும்



தந்தையை ஐயா என்றுதான் அழைப்பேன். அவரைக் கண்டாலே பயம். காரணம் அவரின் அடிகளும் கோபமான பேச்சுக்களும். இவ்வளவுக்கும் நான் குழப்படியானவன் இல்லை. அவரின் அன்பு சில சமயங்களில் என்னை திக்குமுக்காடச் செய்யும். ஆனால் பயம் என்னை அவரிடமிருந்து விலத்தியே வைத்தது. அம்மாவும் அடிப்பா, ஏசுவா. ஆனால் அதை ஜீரணிக்க முடியாவிட்டாலும் அம்மா மீது பயமும் வரவில்லை கோபமும் வரவில்லை.

சக உதிரங்கள் - அதாவது சகோதரங்கள் இரத்தினமாலா (சிவகங்கை), மதியாபரணம், பரமேஸ்வரன், கோகுலராசா, சந்திரா மற்றும் கலாமணி. இவர்கள் எல்லோரும் என் ஏற்றங்களுக்கு ஊன்று கோலாக நின்றவர்கள்.

யாழ் இந்துக் கல்லூரியில் படித்த என் வாழ்வில் பல மாற்றங்கள். கௌரவமான உடுப்பு, கௌரவமான நண்பர்கள், அவர்களுடன் கௌரவமாக நான் வாழ ஐயா உதவினார். படிப்பில் எனக்கு அப்பொழுது ஆர்வமே கிடையாது. ஏதோ ஐயா அம்மாவிற்கு பயந்து படித்தேன். வீட்டிலே வந்து படிப்பிக்கத் தனியான ஆசிரியர். அவர் என் தொடையில் நுள்ளும்போது இந்த உலகே சுற்றும். இருந்தும் நான் ஏழாம் ஆண்டுப் பரீட்சையில் கோட்டைவிட்டேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் எதிரொலி அடிதான். ஆனால் அடுத்த பரீட்சையில் திறமையாக முன்னேறியதற்காக ஐயா அந்த நாளையில் வாழைநார் பட்டு என்ற வேட்டியும் சால்வையும் நல்லூர் திருவிழாவிற்காக வேண்டித்தந்தார்.

புது வகுப்புகளிற்கு போகும்போது புதுப்புத்தகங்கள் வேண்டவேண்டும். பட்டியலை ஆசிரியர் தருவார். ஐயாவிடம் கொடுத்து நானும் சென்று புதிய புத்தகங்களை வாங்கி உறைபோட்டுத் தலைமாட்டில் வைத்துப்படுத்து காலையில் அடுக்கி தோளிலே வைத்து பாடசாலை செல்லுவதில் எவ்வளவு மகிழ்ச்சி (இப்போ புத்தகம் தூக்கிச் செல்லவே ஒரு (பாக்) கோணி (சாக்கு) வேணும்).

ஐந்தாம் வகுப்பு வரை கொப்பி தெரியாது, பேனா தெரியாது, சிலேற்தான். சிலேற் பென்சில்தான் (எவ்வளவு செலவு மிச்சம் என்பதனை இப்ப யோசிக்கின்றேன்). வகுப்பில் இருக்கும்போது கதைக்கக்கூடாது, ஆசிரியர் வராவிட்டால் கதைக்கக்கூடாது. அப்படி கதைத்தால் தண்டனை மேசைமேல் ஏறி நிற்பது. நிறைய தரம் அப்படி நின்று அடிவாங்கி இருக்கின்றேன்.

ஒரு ஆசிரியரை (KVM) கேவி.மயில்வாகனம். பெரிய பெடியன்கள் Kயை கறுத்த Vயை வடக்கன் Mஐ மாடு என்பார்கள். 'கறுத்த வடக்கன் மாடு' என்று கேலி செய்வார்கள். நாங்கள் சிறுவர்கள். மேல் வகுப்பு மாணவர்கள் அந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரைத்தான் கேலிசெய்கிறார்கள் என்று தெரியாமல் "சேர் வடக்கன் மாடுகள் வெள்ளைதானே? ஏன் சார் கறுத்த வடக்கன் மாடுகளும் இருக்கின்றதா?" என்று கேட்டோம். எனது குரல் தான் அவருக்கு காதில் விழுந்தது போலும். அதன் பிறகு நான் வேண்டிய அடி..! ஆனால் பிறகு உண்மையை உணர்ந்த அவர் எனக்கு ரொபி வேண்டித்தந்தது இப்பவும் இனிக்குது.

ஒரு சம்பவம் - பாடசாலை பணம் கட்ட வேண்டிய கடைசி நாள். நானும் இன்னும் இரண்டொரு மாணவரும் கட்டாத படியால் பாடசாலைக்குள் அனுமதியாது வீடு சென்று பணத்தோடு வரும்படி கூறினார்கள். "வீட்டில் பணம் கேட்டால் தந்திருப்பார்கள். நான் கேட்கவில்லை" என்றான் வசதியான ஒருவன். மற்றயவன் "வேண்டி வந்த பணத்தில் இனிப்பு, வடை, சுவிங்கம் என்று தின்று தீர்த்துவிட்டான். நான் "எங்க வீட்டிலே அப்பா கோவிச்சுக்கொண்டு போயிட்டார். அம்மா சாப்பிட்டிற்கே வழியில்லாமல் கஷ்ரப்படுகின்றா, இந்நிலையில் வழியில்லா என்னால் எப்படி பணம் கட்ட முடியும்?" என்றழுத தில்லை நாதனுக்கு நான் கட்டக்கொண்டுவந்த பணத்தைக் கொடுத்துவிட்டேன்.

மூவர் கதையும் ஒரே மாதிரி! வீட்டில் பணம் கேட்காதவன் தவறைவிட எமது தவறால் பணம் கேட்க முடியுமா? பணம் கேட்கவில்லை என்று அவனுக்கு அடி விழும். தந்த பணத்தை என்ன செய்தாய் என்று இவனுக்கு அடி விழும். கொடை வள்ளல் இவர் என்று எனக்கும் சாத்து விழும். என்ன செய்வது அடுத்த நாளும் இதே கதைதான். உண்மையை சொல்லப்பயம். ஆனால் தில்லைநாதன் பணத்தை எப்படியோ கொண்டுவந்து என்னைக் காப்பாற்றிவிட்டான். சப்பாத்து முதன் முதலில் போட்டது சேர் ஜோன் கொத்தலாவ யாழ்ப்பாணம் வந்த பொழுதான்.

பாடசாலையில் யூனியர் சம்பியன், இன்ரர் சம்பியன், சீனியர் சம்பியன், இல்லத் தலைவன், உதைபந்தாட்ட தலைவன், கிரிக்கெட் தலைவன், பாடசாலை விளையாட்டுத் தலைவன், பாடசாலை மாணவ முதல்வன், இலக்கிய விழா செயலாளர்... இன்னும் மறந்தவை பல. எனக்கு தந்த நற்சான்றிதழின்படி "இப்படி ஒரு மாணவன் யாழ். இந்தக் கல்லூரியில் படித்தானா?" என்று கேட்டு நற்சான்றிதழ்களில் அதிபர் தம்பு ஒப்பமிட்டது எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கின்றது.

அப்பொழுது ஒரு நிகழ்ச்சி கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் நடந்த கிரிக்கெட் போட்டியில் அன்பிற்குரிய இராசசுந்தரம் ஆசிரியர் எனது திறமை யைப்பற்றி வெகுவாக விமர்சித்து இருந்தார். ஆனால் நான் பற் (மட்டை) அடிக்க போகையில் முதல் பந்திலேயே அவுட் ஆனேன். அவரின் புழுகுதல் தோல்வி. "ஏன்டா இப்படி அவசரப்பட்டே?" என்று கேட்டார். ரென்சன் அப்படி என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு சொல்ல முடியுமா? அவருக்கு "சேர் அடுத்த இன்னிங்சில் பார்ப்போம்" என்றேன். "போடா போ" என்றார். எமது விக்கட்டுக்கள் சீக்கிரம் சாய்ந்தன. எங்களுக்கு தொடர்ந்து விளையாட பணிப்பு. முதலாவதாக சென்ற இருவரும் மிக அமைதியாக அழகாக விளையாடினார்கள். ஒருவர் அவுட்டாக இரண்டாவ தாக நான். எங்கள் அதிபருக்கும் இராயேந்திர வாத்தியாருக்கும் ஒரு பந்தயம். எப்படிஎன்றால் "இவன்போய் விளையாட துவங்கிய பந்தில் சிக்சர் அடித்தால் பிறகு எல்லாம் அடிதான்". என்று இராயேந்திர வாத்தியார் சொல்ல அதிபர் "பார்ப்போம் "என்றாராம். நான் சென்றவுடன் முதல் வந்த பந்து க்ம்பனை அம்மன் கோவில் விளையாட்டு மைதானத்தை தாண்டி பல துாரம் சென்றது. எவ்வளவு துாரம் சென்றாலும் ஆறு ஓட்டங்கள் தானே. வாத்தியார் அதுதான் இராயேந்திரம் கைதட்ட தொடங்கினார். அடுத்தடுத்து மூன்று ஆறுகள். அந்த ஓவரில் முப்பது ஓட்டங்கள். எதிரணி நிலை குலைந்து அதிரடியாக 84 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தேன். போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிந்தது. அப்போ 'மான் ஒப் தி மச்' அப்படி எதுவும் கிடையாது. கெல்மட் கிடையாது. வசதியற்ற நிலையில் எமது விளையாட்டு. இப்போ இருக்கும் நிலையில் எமது விளையாட்டிற்கு அப்போது கிடைத்திருந்தால் எப்படி?

யாழ் இந்துக் கல்லுாரியில் ஆரம்பித்த என் கல்வியினை எனது தந்தை இறந்த உடனே என்னை சுழிபுரம் விக்டோரியா கல்லுாரியில் தொடரச் சேர்த்து விட்டார்கள். என் நினைவில் வருபவை களைத்தான் எழுதுகின்றேன். அவைகள் என் கடந்த காலங்களாகவும் இருக்கலாம். நிகழ்காலங்களாகவும் இருக்கலாம். இதில் ஆண்டோ திகதியோ இல்லை.



இளம் வயதில் நாடகம் என்றால் அதை ரசித்து பார்ப்பேன். அந்த ஆர்வத்தில் பாடசாலையில் சோக்கிரடீஸ் நாடகத்தில் சோக்கிரடீசின் மனைவி வேடம் தந்தார்கள். நீண்ட நாள் பயிற்சியின்பின் மேடையேறிய அந் நாடகத்தில் சோக்கிரடீஸ், 'சந்தையிலே பொருள்வாங்கும் விந்தை மனிதர்கள்' என்ற நீண்ட வசனத்தை பேசி முடித்த பின்னர் அவர் தலையில் ஒரு குடம் தண்ணீர் ஊத்தவேண்டியது எனது கதாபாத்திரம். அந்த அறிஞ்ஞனின் அறிவுகெட்ட மனைவி யின் பாத்திரம் எனக்கு. அவர் வசனம் முடி யுமுன்னரே குடம் தண்ணீரை கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் சோக்கிரடீசாக நடித்தவரின் தலையில் ஊற்றிவிட்டேன். அவரும் மாணவன் தானே, தனது வசனம் முடிந்த பின்னர்தான் "என்ன தண்ணீரா ஊற்றுகிறாய்?" என்றான். பார்வையாளர்களின் சிரிப்புக்கு... ஆசிரியரிடம் நான் வேண்டிக்கட்டியதைவிட அவன் வேண்டிக்கட்டியதுதான் அதிகம்.

அதன்பின் என்னில் எதைக்கண்டார்களோ பெண் வேடத்தில் நடிக்கவே பழக்கினார்கள். ஓரளவு பாடுவேன் என்பதற்காக பல பரீட்சையின் பின் தம்பி நயினார், வெற்றி உடையார் போன்ற விற்பன்னர்கள் என்னை சோதித்து ஸ்ரீவள்ளி நாடகத்தில் வள்ளியாக (முன்வள்ளி) பழக்கினார்கள். அண்ணாவியார் வெற்றி உடையார் "நாடக மேடையில் ஏறியவுடன் நேரே பார்க்க கூடாது, சாதுவாக கீழேதான் பார்க்கவேண்டும். ஏனெனில் புதுப்பழக்கமுள்ள நீங்கள் அப்படித்தான் பார்க்க வேண்டும்" என்று கூறி பழக்கினார். விசவத் தனை முருகமூர்த்தி கோவில் 8ந் திருவிழா அன்று வாலிபர்களின் நாடகம். நடிகர்கள் எல்லோரும் அநேகமாக இளைஞர்கள் (நம்பி ராசன் அரசன் அரண்மனை வள்ளி வந்து பாடுதல்) அப்பொழுது வரு கைப் பாட்டுடன்தான் நடிகர்கள் மேடைக்கு வருவது வழக்கம். எனக்கும் 'கண்ணெடுத்தாகினும் காணீரோ...' என்ற கீர்த்தனை நான் நிமிர்ந்தே பார்க்கவில்லை. பாடி முடித்துவிட்டேன். தந்தையாகிய நம்பிராசனுக்கு வணக்கம் செலுத் தும்பாடல் 'தந்தையே உன் தாழி னைக்கு வந்தனம் தந்தேன்...' பாடும் பொழுது நேரே பாரத்தேன். ஒரே சனத்திரள். பயந்து வெருண்டேன். அடுத்தவரி பாடல் வரவேமாட்டேன் என்றுவிட்டது. நாலு, ஐந்து தடவை தந்தையே என்று திரும்பத் திரும்ப பாடியதும், அண்ணாவியார்வந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்கப்பாட்டில் முழுப்பாடலையும் பாடி முடித்தார். அத்துடன் அவர் பேசிய பேச்சு, அங்க (நேரே சனத்திரளை) ஏன் பார்த்தாய் என்பதுதான்.

முன் வள்ளியாக நடித்த நான் பின் வள்ளி, பவளக்கொடி என்று பெண் வேடங்களிலேயே நடித்துவந்தேன். பல பெண் பாத்திரங்களை நடித்த எனக்கு நல்லபெயர். ஒரு சிவராத்திரி பவளக்கொடி நாடகம் நான் பவளக்கொடியாக நடித்தேன். நான் அன்னமாக வந்த அருச்சுனனை அருகில் வைத்து நித்திரை செய்வதுபோல ஒரு காட்சி. காட்சி தொடங்கு முன்னரே ஒரு கட்டிலில் படுக்க வைத்துவிட்டார்கள். உண்மையாய் நான் துாங்கி விட்டேன். திரை இழுக்கப்பட்டுவிட்டது. திரைக்கு பின்னால் நின்ற நண்பன் ஓரமாக தட்டி எழுப்பி விட்டான். எழும்பி திகைத்துப் பார்த்தேன். நாடக மேடையில் நிற்பதை உணர்ந்து 'நித்திரையில் வந்து நெஞ்சில் இடம்கொடுத்த உத்தமன் யாரோடி...?' என்ற பாடலை பாடினேன். ஒரே கைதட்டல்தான்.



பெண்வேடம் போட்டுக்கொண்டிருந்தேன். மறைப்புச் சீலையால் ஒருவர் வந்து என்னிடம் "தம்பி இங்கவா! எனது அண்ணரும் நெடுக பெண் வேடம் போட்டுத்தான் நடிப்பார். அவருக்கு ஐந்து பெண் பிள்ளைகள்" என்று சொன்னார். அப்பொழுது எனக்குத் திருமணமாகவில்லை. எனது மனதில் ஒருபயம். பெண் வேடம் போட்டு நடித்த நேரம் எல்லாம் எனக்கு அவர் சொன்னதுதான் ஞாபகம் வரும். காலப்போக்கில் எனக்கு மகனாக கண்ணன் பிறக்கும் வரை அன்று அவர் சொல்லியது ஆளமாக பதிந்தது. பின்னர் சுதனும் பிறந்துவிட்டான். அவர் வார்த்தை காற்றோடுபோனது.

## நான் நடித்த
## மற்றும் எழுதிய நாடகங்கள்

| | |
|---|---|
| *01.* சோக்கிரடீஸ் | - மனைவி |
| *02.* சகுந்தலை | - மீனவன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



03. ஸ்ரீ வள்ளி
- முன் வள்ளி , பின் வள்ளி
- பல தடவை

04. பவளக்கொடி
- பவளக்கொடி, அருச்சுனன், பரிகாரி - பல தடவை

05. கோவலன் கண்ணகி
- முன் கோவலன்

06. பக்த நந்தன்
- நந்தன் - பல தடவை


07. வள்ளி திருமணம்
- வேடன்

08. பண்டார வன்னியன்
- புலவர் புவியழகன்

09. சூழ்ச்சி
- காசியப்பன் (சிறந்த நடிகர் பரிசு)

10. மயான காண்டம்
- அரிச்சந்திரன், விசுவாமித்திரர்

11. முதலாவது கண் தானம்
- புராண நாடகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஆடையின்றி வா - புராண நாடகம்
13. வாழ்வதற்கு வழிசெய் - கதாநாயகன் - பல தடவை
14. விலகவா பழகினோம் - கதாநாயகன்
15. அவன் போட்ட கணக்கு - கதாநாயகன்
16. அவளா சொன்னாள் - கதாநாயகன்
17. மாறாதோ உன் மனது? - கதாநாயகன்
18. மாறியது நெஞ்சம் - கதாநாயகன்
19. வாழு வாழவிடு - கதாநாயகன்
20. அழாதவர்கள் யார் ? - பரிசு பெற்றது (நடிக தளபதி பட்டம்) பல தடவை
21. தந்தைக்காக - பரிசு பெற்றது
22. கொழும்பில் கோவிந்தர் - பரிசு பெற்றது
23. அண்டல் ஆறுமுகம் - பரிசு பெற்றது
24. பாசம் தந்த மோசம் - பரிசு பெற்றது
25. குடும்பி மாப்பிள்ளை - பரிசு பெற்றது
26. இதுதான் முடிவு - பரிசு பெற்றது
27. இரத்த முத்திரை - பரிசு பெற்றது
28. கொஞ்சம் பொறு வாறன் - பரிசு பெற்றது
29. பட்ட மரம் - பரிசு பெற்றது
30. கல்லுக்குள் ஈரம் - பரிசு பெற்றது
31. விடியாத இரவு - பரிசு பெற்றது
32. இதுதான் முடிவா - பரிசு பெற்றது
33. பாசம் தந்த மோசம் - பரிசு பெற்றது
34. ஏன் சிரித்தான்? - பரிசு பெற்றது
35. ஏன் அழுதான்? - பரிசு பெற்றது
36. முற்பகல் செய்யின் - பரிசு பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. அவன் + அவள் = அவர்கள்
38. பந்தமா? பாசமா?
39. முடவன்
40. முள்ளா மலரா?
41. மறந்து போன....
42. இதுதான் பரிசா?
43. நல்லது நடக்கும்
44. காலம்தான் பதில் சொல்லும்
45. மச்சானை பார்த்தீங்களா?
46. பிடி மண்
47. இதுதான்டா உலகம்
48. நன்றும் தீதும் பிறர்தரவாரா
49. பிடி சாம்பல்
50. தங்கம்
51. தரமெது
52. எங்களாலும் முடியும் தம்பி




15th December 2010 at John De Silva Memorial Hall Colombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைச் சேவையில்...

1. நாடகத்துறையில் கலை கலாச்சார நிகழ்வுகளில் பங்குபற்றி பல பரிசில்கள் பெற்றமை. பாடசாலையில் ஆரம்பமான சகுந்தலை நாடகம் முதற்கொண்டு இற்றை வரை.

2. ஸ்ரீ அம்பாள் நாடக மன்றத்தின் செயலாளராகவும், பல நாடகங்களில் கதாநாயகனாகவும், இயக்குனராகவும், கதாசிரியராகவும் செயலாற்றியுள்ளேன். அத்தோடு சங்கானை, பண்டத்தரிப்பு, மாதகல், மானிப்பாய், நாரந்தனை என்பன நான் பங்குபற்றிய நாடக இடங்களாகும்.



வலிகாமம் மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை

கௌரவித்து வழங்கிய சான்றிதழ்

வலிகாமம் மேற்கு பகுதியில்

30-31.05.2003 ஆகிய இருதினங்கள் நடைபெற்ற

கலைவிழாவில்

கலைஞரின் அரும்பெருஞ் சேவையைப் பாராட்டும் வகையில்

திரு. ........................ அவர்களுக்கு

**கலைவாரிதி**

நாடகத்துறை

என்னும்

பட்டம் வழங்கி கௌரவிக்கப் பெற்றது.

தலைவர், கலாசாரப் பேரவை
உதவிப் பிரதேச செயலர் (வலி.மேற்கு)

செயலாளர், கலாசாரப் பேரவை
கலாசார உத்தியோகத்தர், வலி.மேற்கு

திரு.செ.பத்மநாதன்
அரசாங்க அதிபர் (யாழ். மாவட்டம்)
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம்
சங்கானை
30.05.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 1994ம் ஆண்டு நடைபெற்ற பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தின் கலை விழாவில் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் அமரர் திரு.க.சந்திரராசா அவர்களால் இசைத்துறைக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை.

4. 30.05.2003 - 31.05.2003இல் நடைபெற்ற வலிமேற்கு பிரதேச சபையின் கலை விழாவில் கலைவாரிதி பட்டம் சூட்டி கௌரவிக்கப்பெற்றமை.

5. மத்திய அரசினால் 2010ம் ஆண்டில் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக கலாபூசணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை.

6. பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் வெளியீடான சக்கரம் இதழின் 2013 -2014ம் ஆண்டு காலப்பகுதியில் ஏன் அழுதான் நாடகம் தொடராக வெளிவந்தமை.

என் இவ்வளவு பெருமைக்கும் எனக்கு துணையாக நின்ற சக நடிகர்களையும் நினைவு கூர வேண்டும் ரகு, சீவரத்தினம் (தவராசா), ஸ்ரீஸ்கந்தராசா, சிவசுப்பிரமணியம், தனேசன், கறுவல்தம்பி, நடராசா (நடா), பாலகிருஷ்ணமூர்த்தி, மகாலிங்கம், அ.தி.அப்புத்துரை, ஜெயபாலசுந்தரம், பத்மநாதன், கணேசன், இரத்தினராசா, செல்வராசா மற்றும் பக்க வாத்திய கலைஞர்கள். தோளோடு தோள் நின்ற ஆத்ம நண்பர்கள், நலன்விரும்பிகள், ரசிகர்கள் மற்றும் பெயர் குறிப்பிட மறந்த நடிகர்கள், நண்பர்களுக்கு எனது நன்றிகள்.

வன்னியில் வாழ்ந்த காலங்கள் மறக்க முடியாதவை. பட்ட துன்பங்கள் சொல்ல முடியாதவை. அப்படி இருக்கும் பொழுது நான் முன்னர் பார்த்த வேலைகளை நினைத்து பார்க்கிறேன்.

1. உப தபாலதிபர் - பண்ணாகம், நாகேந்திரமடம், சங்கரத்தை, மூளாய், கோவளம், கரிப்பட்ட முறிப்பு, தொடர்ந்து சண்டிலிப்பாய் உப தபாற்கந்தோரில் சில வருடங்கள் பதில் உப தபாலதிபராக கடமையாற்றினேன்.

2. தவச பத்திரிகை குறுப்பில் தினபதி, சிந்தாமணி, ராதா, தந்தி பத்திரிகைகளில் ஒப்புநோக்காளனாகவும், சிறுகதை எழுதுபவனாகவும் கடமையாற்றியுள்ளேன்.

3. சங்கானை ப.நோ.கூ.சங்கத்தில் மின்தறி நெசவாலையில் உதவி தொழில்நுட்ப பணியாளனாகவும், நெசவாசிரியராகவும், தொடர்ந்து புன்னாலைக்கட்டுவன் ராஜன் நெசவு தொழிற்சாலையில் நெசவாசிரியராகவும் கடமையாற்றியுள்ளேன்.

4. கொழும்பு மகாவித்தியாலய மாவத்தையிலுள்ள சர்மிளா இன் இல் விடுதி முகாமையாளராக கடமையாற்றியுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகித்த பதவிகள்

1. சங்கானை ப.நோ.கூ.சங்கத்தில் கூட்டுறவு ஊழியர் சங்கச் செயலாளர், நலன்புரிச் சங்க செயலாளர், கடனுதவிச் சங்க நிருவாக உறுப்பினர், பணிப்பாளர் சபை பிரதிநிதி மற்றும் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் சங்க நிருவாக செயலாளர்

2. எங்கள் ஊரில் தர்மகாத்தா சபை உறுப்பினர், அம்பாள் கலை மன்ற உறுப்பினர், பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்க உறுப்பினர், பண்ணாகம் கிராம முன்னேற்ற சங்க செயலாளர், ஸ்ரீ முருகன் அன்னதான சபை தலைவர், ஸ்ரீமுருகன் சனசமூக சேவா வாலிப சங்க செயலாளர், மூத்தோர் சங்க செயலாளர், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவ சங்க மற்றும் அபிவிருத்தி சங்க உறுப்பினர்.

## திருமணம்



திருமணங்கள் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகின்றன. இதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. எனது திரு மணமும் சொந்த மாமி மகள். பல வருடம் பிள்ளை இல்லாது இருந்த மாமிக்கு நான் பிறந்து ஒருவருடத்தின் பின்னர்தான் என் மனைவி பிறந்தாள். அவளுக்கு மாமி பேசாத திருமணமே இல்லை. 'இவனுக்கு இவளை கொடுக்கிற நேரம், ஒரு நாய்க்கு கட்டிவைப்பேன்' என்றவர். காலத்தின் கோலத்தால் வட்டு பாராளுமன்ற உறுப் பினர் திரு.அ.அமிர்தலிங்கம் உதவியுடன் எனக்கே செய்து வைத்தார்.

காலம் அவரின் மேலான அன்பை எனக்கு கொடுத்தது. இருவரும் (மாமியும் நானும்) நேருக்கு நேர் நின்று கதைத்தது கிடையாது. அது ஒரு சுவையான வாழ்க்கை. என் உழைப்பு விளையாட்டு உழைப்பு. அவவின் வைத்திய உழைப்பே எமது குடும்பத்தை கொண்டு சென்றது. அதுக்கு பெரிய பரிசாக நாங்கள் கொடுத்தது கண்ணன், சுதன், சுசி, அப்பன், சுகந்தன், ரமணன் மற்றும் சாந்தி என்ற முத்துக்களைத்தான். இந்த அன்பு செல்வங்களில் சுசியும் அப்பனும் இடை யிலேயே போய்விட்டார்கள். அது இன்னும் எனக்கு சுமை. தனிமையில் நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி அழுவது யாருக்கு புரியும். எனக்கு இப்படி மனைவியும் பிள்ளைகளும் கிடைத்தது சென்ற பிறப்பில் நான் செய்த புண்ணியம். எனக்கு ஆறுதல் தரக் கூடிய ஒரேயொரு ஜீவன் என் மனைவி தெய்வாவால் மட்டும்தான் முடியும்.

கண்ணன் முதன் முதலில் தந்தை என்ற அடையாளத்தை தந்தவன். மாமியின் சொத்தவன். காலத்தின் கோலத்தால் அவனின் 19வது வயதிலிருந்தே எம்மை விட்டு தூர தேசத்தில் வாழ்கின்றான். கண்ணனின் திருமணம் பெரிய கற்பனையில் இருந்த எனக்கு நாங்கள் இல்லாமலேயே எழுத்து, நாங்கள் இல்லாமலேயே திருமணம். மூத்த பிள்ளையை சந்திக்க மாட்டோமா என்ற ஏக்கமும் தீர்ந்தது. கண்ணன் மனைவி கல்பனா அவனுக்கு கிடைத்த பொக்கிசம். எங்களுக்கு கிடைத்த நல்ல மருமகளல்ல மறுமகள். ஆரணி எங்கள் செல்லப் பேர்த்தி.

சுதன் என் பெயரை நிலை நிறுத்த வந்த பிள்ளை. என்னைப்போல எழுத்தாளன், நடிகன். என் பிள்ளைகளில் என்னைப்போல ஒருவரும் இல்லையே என்ற ஏக்கத்தைத் தீர்த்தவன். அவனின் திருமணமும் கூட நாங்கள் முகம் காணாத ஒரு பெண்ணுடன், நாங்கள் கலந்துகொள்ளாமலேயே நடைபெற்றது. ஆனால் அவன் மனைவி ஞானம் கூட எங்களுக்கு மறு மகளாக இருக்கிறார். சுதனின் எண்ணம் போல வாழ்வாள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்குண்டு. விவேகன், விவேகா மற்றும் கார்த்தி எங்கள் வம்சம் தலைக்க வந்த பேரன் பேர்த்திகள்.

சுகந்தன் எங்கள் வாழ்வின் கஸ்டங்களுடன் வாழ்ந்தவன். எங்களுக்கு ஆறுதலாக இருந்தவன். அவன் பட்ட கஸ்டங்கள் விலகி வாழும்போது, நான் அருகில் இருக்கமுடியாவிட்டாலும் வானிலிருந்து வாழ்த்துவேன். எங்களுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்ந்து அவன்பட்ட கஸ்டங்களை மறக்க வைக்க அவன் மனைவி சர்மிளா மனையாளாக வந்தவள். எங்கள் மறு மகள். நான் மரணித்தால் சில சமயம் நான் கூட மகனாக அவர்களுக்கு பிறக்கலாம்.

துள்ளித் திரியும் பருவத்தில் துடுக்கடக்கி பள்ளிக்கு செல்ல வைக்காத பாவியான தந்தையாக நான் இருக்கவில்லை. சிறுவயதில் பள்ளிக்குச்செல்ல கள்ளமெடுத்தவன் ரமணன். ஒரு நாள் அடி (அவனைத் தவிர யாருக்கும் அடித்ததாக ஞாபகம் இல்லை). அத்தோடு பள்ளி போனவன், பல்கலைக்கழகம் சென்றது எனக்கு பெருமையாக இருக்கின்றது. அவன் திருமணம் எங்கள் வீட்டில் இடம்பெற்றது எங்களுக்கு ஆனந்தம். அவன் குணம்போல அவன் மனைவி. எங்களது நான்காவதும் கடைசியும் மறு மகளுமான ரேணுகா. எங்கள் செல்லப் பேர்த்தி அஞ்சனா.

சாந்தி எங்களின் ஒரே செல்ல மகள். மாமியின் குணம் கொண்டவள். என்னை பின்னாளில் கவனிப்பாள் என்ற அசையாத நம்பிக்கை. எங்களைப் போல காதலித்து கரம் பிடித்தவள். பாரதிகிருஷ்ணா, அபிராமி மற்றும் குபேரன் என் செல்வத்தின் செல்வங்கள். அருகில் வாழும் பேரன் பேர்த்திகள். என் பிள்ளைகள் எல்லோரும் எம்மை ஈன்ற பொழுதும் பெருதுவக்க வைத்தவர்கள்.

இவைகளை ஏன் எழுதுகிறேன் என்றால், என்றாவது ஒருநாள் என் பரம்பரையில் என் தாத்தாவோ, பூட்டனோ இப்படி இருந்தார் என்று அவர்கள் மகிழ்வடையட்டும்.


சிலவேளை நானே மீண்டும் பூட்டனாக பிறக்கலாம் அல்லவா..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திருமண வாழ்வில் இணைந்த
பொன்னான தருணத்தில்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மை நேர்மை பயமின்மை

ஊரெல்லாம் புகழும் அப்பாவை நாம் எப்படிப் புகழப்போகின்றோம்? உறவெல்லாம் நேசித்த எங்கள் தந்தையின் மீதான அன்பை நாங்கள் எப்படி வெளிப்படுத்தப்போகின்றோம்?

தன்னைச் சுற்றியிருப்பவர்களை எப்போதும் தன் ஆளுமையால் கட்டிப்போட்டுவிடும் அப்பாவிடம் இருந்த திறமைகள் தான் எத்தனை! விளையாட்டாக இருந்தாலும், கலையாக இருந்தாலும், எழுத்தாக இருந்தாலும் எல்லாவற்றிலும் அவர் பிரகாசித்தார். சிறு வயதிலேயே தன் தந்தையை இழந்துவிட்டபோதும், குடும்பத்தின் பாரமே தன் தலையின் மீது விழுந்துவிட்டபோதும் தனது நம்பிக்கையை இழக்காமல் எல்லாவற்றிலும் மிளிர்ந்தவர் எங்கள் தந்தை. இப்போது, தன் இடத்தை யாருமே இட்டுநிரப்பமுடியாத அளவிற்கு வெற்றிடமாக்கிவிட்டுச் சென்றிருக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிடமாகிப்போன அப்பாவின் இடைவெளியை இனி யாரையும் வைத்தும் நிரப்பமுடியாதே.

"உங்கள் அப்பா எவ்வளவு உற்சாகமானவராக, நகைச்சுவையானவராக இருக்கிறார்" என எங்கள் நண்பர்கள் ஆச்சரியப்பட்டுச் சொல்லும் போதுதான், எத்தனை பேருக்குக் கிடைக்காத ஓர் அரிய தந்தை எமக்குக் கிடைத்திருக்கின்றார் என்ற உண்மையைப் புரிந்துகொள்ள முடிந்தது. எல்லாப் பிள்ளைகளுக்கும் அவர் தந்தைதான் ஒரு முன்மாதிரி (rool model). உங்களை முன்மாதிரியாகக்கொண்டு எல்லோருமே உயரமுயன்றோம். ஆனால், உங்கள் திறமைகளில் ஒன்றைக்கூட எங்களால் உங்கள் அளவிற்கு எட்டிப்பிடிக்க முடியவில்லையே அப்பா. ஆனாலும், எங்கள் அறிவிலிருந்து வெளிப்படும் ஒவ்வொன்றுமே நீங்கள் சொல்லித்தந்த அறிவுரைதான் அப்பா.

சிறியவர்களாக நாங்கள் இருந்தபோது எத்தனை ஆயிரம் கதைகளை சொல்லித்தந்திருப்பார் எங்கள் தந்தை. கதைகளை இரசித்து ஆயிரம் விளக்கங்களுடன் அவர் சொல்லும்போது அதனைக் கேட்பதில்தான் எத்தனை ஆனந்தப்பட்டிருப்போம். கதைகளாக மட்டுமல்லாது வாழ்க்கைக்கு வழிகாட்டும் அனுபவங்களாக, தத்துவங்களாக இன்றும் எங்களை வழிநடத்துவது அவர் சொல்லித்தந்த அந்தக் கதைகள்தான். அதில் ஒன்றுதான் மூன்று பொம்மைகளின் கதை.

மூன்று பொம்மைகள் இருந்தனவாம். அதில் எந்தப் பொம்மை சிறந்ததென்று கண்டறியமுடியவில்லை. கண்டறிவதற்காக ஒரு பொம்மையின் காது வழியாக கம்பியொன்றைச் செலுத்தியபோது அது மறுகாது வழியாக வெளியே வந்ததாம். இரண்டாவது பொம்மையின் காது வழியாகக் கம்பியைச் செலுத்தியபோது அது உள்ளுக்குள்ளேயே போய் மறைந்துவிட்டதாம். மூன்றாவது பொம்மையின் காது வழியாக கம்பியொன்றைச் செலுத்தியபோது அது வாய் வழியாக வெளியேவந்ததாம். இப்போது இதில் எது சிறந்த பொம்மை? என்று எங்கள் தந்தை கேட்டபோது நாங்கள் ஆளாளுக்கு ஒன்றைச் சொன்னோம். ஆனால் இப்போதும் மூன்றுமே சிறந்த பொம்மைதான் என்று விளக்கினார் எம் தந்தை.

கெட்டவற்றை காது வழியாகக் கேட்டால் அதனை மறுகாது வழியாக வெளியே விட்டுவிடவேண்டும். நல்லவற்றை காது வழியாகக் கேட்டால் அவற்றை மனதுக்குள் பதித்துவைத்துப் பாதுகாக்கவேண்டும். அதேநேரம் நல்ல விடயங்களை காது வழியாகக் கேட்டால் அவற்றை உங்கள் வாயால் மற்றவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். இதனைத்தான் அந்தப் பொம்மைகள் மூன்றும் சொல்கின்றன. இந்த மூன்று பொம்மைகளைப்போன்று வாழ்ந்து விட்டால் வாழ்க்கையில் எப்போதும் சிக்கல்கள் வரமாட்டாது என்பது எங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை எங்களுக்குக் கற்றுத்தந்த நன்னெறிப் பாடம், வாழ்க்கையின் தத்துவம்.

'...தேடிச் சோறு நிதந்தின்று
பல சின்னஞ்சிறு கதைகள் பேசி
மனம் வாடத் துன்பமிக உழன்று
பிறர் வாடப் பல செயல்கள் செய்து
நரைகூடிக் கிழப் பருவமெய்தி
கொடுங்கூற்றுக் கிரையெனப் பின்மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போலே
நான் வீழ்வேனென்று நினைத்தாயோ?'

என்று பாரதியைப் போலச் செருக்காய் வாழ்ந்து மறைந்திருக்கின்றார் எம் தந்தை. பிறந்து, முதுமையாகி, இறுதிக் கணம்வரை தன் தாய்கூடவே வாழும் (சிவ) பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஒருநாள் காணாவிட்டால் துடித்துப்போகும் தன் தாய் கண் முன்னேயே இறுதிவரை அவர் வாழ்ந்து மகிழ்ந்து, மறைந்துபோகும் பாக்கியம் செய்ய, அவர் எத்தனை தூரம் கொடுத்து வைத்திருக்கவேண்டும். மகனின் பிரிவுத்துயர் அந்தத் தாய்க்கு வலி மிகுந்ததாக இருந்தாலும், எம் தந்தைக்கு யாருக்கும் எளிதில் கிடைத்துவிட முடியாத இதுவொரு அற்புதமான சாவு.

எங்கள் அம்மாவுடன் உரிமையோடு சண்டைபோட்டுக்கொள்ளும் அவரது செயல் சிலவேளைகளில் எங்களுக்குக்கூட சினமூட்டுவதுண்டு. ஆனால், அம்மா மீதான அவரது அன்பும் காதலும் எப்போதும் குறைந்ததை நாம் பார்த்தில்லை. எங்கள் தாயான தன் காதலியைக் கரம்பிடிக்க தனது மாமியைச் (எங்கள் அம்மம்மா) சம்மதிக்க வைப்பதற்காக தான் அரங்கேற்றிய நாடகங்களை நகைச்சுவையோடு அவர் எங்களுடன் பகிர்ந்துகொண்டிருக்கின்றார். அப்படிச் சிரமப்பட்டுக் கரம்பிடித்த காதலியோடு இணைபிரியாது இறுதிவரை, அரை நூற்றாண்டுகள் அவர் மகிழ்வோடும் வாழ்ந்திருக்கின்றார். விடைபெறும் இறுதி நேரத்தில்கூட தன் காதலியான எங்கள் அம்மாவின் கரங்களை இறுகப் பற்றியபடியே அவர் விடைபெற்றிருக்கின்றார். இப்படி அமரத்துவமான காதல் எத்தனை பேருக்கு வாய்த்திருக்கின்றது!

எப்போதும், ஒருபோதும் யாரிடமும் அவரை விட்டுக்கொடுக்காதவர்கள் அவரது சகோதரங்கள். "அண்ணை... அண்ணை..." என்று வாஞ்சையோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழைக்கும் அவர்களது குரலில் எப்போதும் பொய்மை இருந்ததில்லை. பாசமலர் திரைப்படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு ஒரு தங்கைதான். ஆனால் நடிகர் திலகமான எங்கள் தந்தைக்கு பாச மலர்களாக நான்கு தங்கைகளும், இரண்டு தம்பிகளும் இருந்திருக்கின்றார்கள். சகோதரங்கள் ஒன்றுக்கொன்று பகைவர்கள்போன்று மோதிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தங்கள் சகோதரனை யாரிடமும் விட்டுக்கொடுக்காத சகோதரங்கள் எத்தனை பேருக்கு வாய்த்திருக்கும்? அப்படி வாய்ப்பது ஒரு வரம். அந்த வரத்தைப் பெற்றவர் எங்கள் தந்தை. அதனால்தான் அத்தனை சகோதரங்களுக்கும் முன்னால் தன் இறுதிப் பயணத்தை அவர் நிகழ்த்தியிருக்கின்றார்.



கிருஷ்ணதுரை மாமாவின் மருமக்கள் நாங்கள் என்று சொல்லிக்கொள்வதில்தான் எங்களுக்குப் பெருமை. யாராவது நீங்கள் யாரெனக் கேட்டால், கிருஷ்ணதுரையின் மருமக்கள் நாம் எனத் தாங்கள் சொல்வதாக அவரது மருமக்கள் (சகோதரியின் பிள்ளைகள்) சொல்லியழுதபோதுதான்தான் தெரிந்தது எங்கள் தந்தை எத்தனை உயர்ந்தவராக அவர்களுக்கும் இருந்திருக்கின்றார் என்பது.

அவரது இழப்புச் செய்திகேட்டு ஓடோடி வந்தும், எங்கிருந்தோ தொலைபேசியில் உரையாடியபோதும் கதறியழுத்த உறவுகளின் அழுகுரல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னது அத்தனை உறவுகளும் அவரை நேசித்திருக்கின்றார்கள் என்பதை. போகவிட்டுப் புறம்கூறமுடியாத அளவிற்கு எப்போதும் நேர்மையாகவும், உண்மையாகவும் வாழ்ந்தவர் எங்கள் தந்தை. அதனால்தான், அவரது நண்பர்கள் எங்களைக் காணும் போதெல்லாம், எங்கள் தந்தையைப் பற்றி உயர்வாகவே எங்களுடன் கதைத்திருக்கின்றார்கள். அவரது பிரிவுத்துயர் கேட்டு தொலைபேசி எடுத்த அவரது நண்பர்கள் கண்ணீருடன் தங்கள் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டபோதுதான், எத்தனை நல்ல நண்பர்களை அவர் வைத்திருக்கின்றார் என்பதும் புரிந்தது.

அவர் மீது எப்போதும் பாசம் காட்டும் தாய், அவர் விரும்பியதுபோன்றே காதல் மனைவி, அவர் எதிர்பார்த்ததுபோன்றே சகோதரங்கள், உறவுகள்,




நண்பர்கள்... என எல்லாம் அமைந்ததுபோன்று, அவர் விரும்பியதுபோன்று பிள்ளைகள் வாய்த்திருக்கின்றார்களா? என்ற கேள்வி எப்போதுமே எங்களுக்கு இருந்ததுண்டு. அந்தச் சந்தேகத்தையும் தனது கடைசி நாட்களுக்கு சில தினங்களுக்கு முன்னர்தான் உடைத்துவிட்டுப் போயிருக்கின்றார். "யாரும் தேவையில்லை, என் பிள்ளைகள் என்னைப் பார்ப்பார்கள்..." என்ற அவரது ஒற்றை வரியில், பிள்ளைகள் மீதான அத்தனை நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்திவிட்டார்.

எம்மை அறிந்தவர் எம் தந்தை. எம்மைப் புரிந்தவர் எம் தந்தை. தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிவாங்கித்தான் வளர்ந்ததாகக் கூறும் அவர், ஒருபோதும் எங்களை அடித்து வளர்த்தில்லை. அவரின் அன்புதான் எங்களைக் கட்டிப்போட்டிருந்தது. இத்தனை கடல் கடந்து வந்தும் வழிதவறிப்போகாத வாழ்க்கைக்கு அவர் மீதான அளவு கடந்த அன்பும், மரியாதையும்தான் காரணம். அதனைவிட எப்போதும் அவர் கூறும் உண்மை - நேர்மை - பயமின்மை என்ற தத்துவமும் முழுமுதற் காரணம்.

உண்மை எப்போதும் கசப்பானது. ஆனால் உண்மையாக இருங்கள். நேர்மை எப்போதும் நெருக்கடியைத்தரும். ஆனால் நேர்மையாக இருங்கள். இப்படி வாழ்ந்தால் எப்போது நீங்கள், யாருக்கும், எதற்கும் பயமில்லாமல் வாழலாம் என்ற உயர்ந்த தத்துவத்தை எங்கள் தந்தை எங்களுக்கு எப்போதும் போதிப்பார். அவரது போதனைதான் உண்மையாக வாழ்வதற்கும், நேர்மையாக நடப்பதற்கும் எங்களைத் தூண்டியவை. உண்மையாகவும் நேர்மையாகவும் வாழ்ந்துவிட்டால் யாருக்கும், எதற்கும் பயமில்லாமல் வாழலாம் என்ற உண்மையை இப்போது நாங்கள் அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கின்றோம். எங்கள் பிள்ளைகளுக்கும் அதனைக் கற்றுக்கொடுத்து வருகின்றோம்.



*'வாழ்க்கை ஓர் ஓவியம் போன்றது. கணக்குப் பார்த்து வாழ்வதற்கு அது கணிதமல்ல, நிறையப்பேர் வாழ்க்கையை கணிதமாக்கி நாசப்படுத்தியுள்ளார்கள். நீங்களாவது அதை ஓவியமாக்கி சந்தோசமான உலகத்தை உருவாக்குங்கள்'*

என்பது தத்துவஞானி ஒருவரின் போதனை.

தன் வாழ்க்கையை கணிதமாக்காமல், ஓவியாமாக்கி மறைந்திருக்கின்றார் எம் தந்தை. அவர் வரைந்த ஓவியங்கள் இன்னும் இன்னும் எங்களுக்கு வழி காட்டிக்கொண்டே இருக்கும்... ஓர் ஒளிவிளக்கைப் போல...

**– பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டிய எங்கள் ஒளிவிளக்கு



எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து வாழவைத்த எங்கள் அருமை அண்ணா. கிருஷ்ணதுரை என்ற பெயருக்கு ஏற்றபோல் தெய்வமாக இருந்து, சகோதரங்கள் எல்லாம் நல்லா வரவேண்டும் என்று ஒரு தகப் பனாக, ஆசிரியனாக நல்ல அறி வுரை சொல்லும் அறிஞனாக வழி நடத்தி வாழ்வழித்த எங்கள் அன் புத் தெய்வம் இன்று எங்களுடன் இல்லை என்று நாங்கள் நினைக்க வில்லை.

நீங்கள் சொன்ன அறிவுரை களும் ஒழுக்கமும் என்றென்றும் அண்ணா என்ற பெயரைச் சொல் லிக்கொண்டே இருக்கும். எங்கள் ஐயா இறந்தது 1958ல். நீங்கள் பிறந் தது 1944ல். உங்களுக்குப் 14 வயதில் எங்கள் தாயிடம் "நான் இருக்கின் றேன் அம்மா. நீங்கள் கவலைப் படா தையுங்கோ" என்று சொன்னதைச் செய்துகாட்டி எங்கள் வாழ்வை உயர்த் திய நீங்கள் என்றென்றும் எங்களு டனேயே இருப்பீர்கள்.

தெய்வங்கள் எல்லாம் சேர்ந்து எங்கள் தெய்வத்தை அழைத்ததைத் தான் எங்களால் தாங்கமுடியவில்லை.

**- சகோதரங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசவத்தனை முருகனை நினைந்து கிருஷ்ணதுரை அவர்கள் எழுதிய துதிப் பாடல்



**விசவத்தனை முருகனுக்கு துதி**

விசவத்தனை முருகா வினைகள் அறுக்கும் வேலா
வரம் ஒன்று எந்தனுக்குத் தா – நீயே
வரம் ஒன்று எந்தனுக்குத் தா

பன்னிருகை இருந்தென்ன உன்னிரு கை போதாதா
எனக் அருள் நீ செய்ய
பக்தரைக் காப்பவனாம் பாவங்கள் தீர்ப்பவனாம்
எங்கள் பண்ணாக முருகனாம்
வரம் ஒன்று எந்தனுக்குத் தா

ஆறு முகமெங்கே ஆற்றும் கரங்களெங்கே
தேறுதல் தருவதற்கு தெய்வமே நீ எங்கே
பன்னீரால் உனைக் கழுவ கண்ணீரால் முகம் கழுவி
நான் உனைத் துதித்தேனே
வரம் ஒன்று எந்தனுக்குத் தா



பன்னிருகை வேலவனே பாவ வினை தீருமையா
பண்பான பண்ணாக பதி வாழும் முருகனே
உன்னை நிதம் துதிப்போர்க்கு வரந்தந்து காப்பாயே
தன்னிகரில்லா அழகன் நீயன்றோ முருகா
வரம் ஒன்று எந்தனுக்குத் தா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை தொட்டதெல்லாம் கலையாகும்!
# கண்ணில் பட்டதெல்லாம் சிலையாகும்!



ஊரார் உங்கள் பெயர்
சொன்னதில்லையே
ஒருவர் கூடப் பெயரைச் சொல்லி
அழைத்ததில்லையே
பெற்றவர்க்கும் தம்பி நீர்,
மற்றவர்க்கும் தம்பி நீர்
அன்றொரு நாள் ஊரில் ஆமி வந்து
ஒத்தபடி ஊராரை ஓடென்று
அடித்துக்கலைத்த பின்னால்...
ஊரை விட்டே நீர் போனதற்கு
அலறித்துடித்ததையா ஊருசனம்.
உலகைவிட்டே போனீரென்று
எப்படிச் சொல்வோம்?

எல்லாமே உங்களைப்போல்
வேண்டுமென்று அடம்பிடிப்பேன்.
கையெழுத்தும் உங்களைப்போல்
முத்து முத்தாய் வேண்டுமென்று
முயற்சிபண்ணிப் பழகினேனே...
மட்டைப் பந்தும் நாங்களும்
மாமனும் மருகனுமாய்
சேர்ந்தாடி மகிழ்ந்தோமே
என் பெரிய மாமாவே...
இனியெப்போ இதெல்லாம்
நான் காண என் பெரிய மாமாவே...

ஊரெல்லாம் உம்பெருமை தானைய்யா
உத்தமனே ஊர்வியக்கும்
கலைஞன் நீ – உம்
கை தொட்டதெல்லாம் கலையாகும்.
கண்ணில்படும்
வேர்கூடச் சிலையாகும்
மிதித்த புல் சாகாதென்று
ஊர் சொல்லும் உத்தமரே
நம் உயிர் மிதித்து
ஏன்தான் போனீரோ..?

நீறணியா நின் நெற்றி நான்
கண்டதில்லை
நித்தமும் கிருஷ்ணரை தொழும்
உத்தமனே
நின்னைத் தனதருகில்
இருத்திப் பார்க்க நினைத்துதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தோடு அழைத்தானோ
அக்கண்ணன்?

எங்கள் குடும்ப விருட்சத்தில்
மூத்தவரே,
உங்கள் சொல் மீறி நாம் ஏதும்
செய்தோமா?
ஒரு சொல்கூட சொல்லாமல்
ஏன் போனீர்?
பெரியமாமா என்றினி நான்
யாரை அழைப்பேன்?

பிள்ளை வளர்ப்பதற்கும்
ஒழுக்கத்துக்கும் நேர்மைக்கும்
உம்மைத்தானே ஊரார்
உதாரணம் காட்டுவார்கள்.
இனி யாரைக் காட்ட?
உங்களைக் கொண்டாடும்
மனைவியைக் கரம்பிடித்தீர்
மக்களைக் கரைசேர்த்தீர்
நன் மருமக்களை பெற்றீர்
பாசம் கொட்டும்
பேரப்பிள்ளைகள் கண்டீர்
நிறைவான வாழ்க்கைதான்
நீர் வாழ்ந்தீர் ஐயமில்லை
போய்வாரும் புகழோடு
என் பெரிய மாமாவே...

– பெரிய மருமகன் வேந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ஒரு முத்தமிழ் வித்தகர்

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'**

என்பது பொய்யா மொழிப் புலவர் வள்ளுவனார் வாக்கு.

அரிது அரிது மானிடராதல் அரிது. நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பில் எல்லாப் பிறவிகளிலும் பார்க்க மேலான பிறவி மனிதப் பிறவியே என்று ஔவைப்பாட்டி அன்று கூறிவைத்தார். ஏனெனில் மற்றைய விலங்கினம் போன்ற ஏனையவைக்கு ஆறாவது அறிவு இல்லை. ஆனால் மனிதனுக்கு மட்டும்தான் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு உண்டு. இந்தப் பகுத்தறிவின் மூலம் தீயவற்றை விலக்கி நல்லவற்றை செய்ய முடியும்.



இதன்படி பார்க்கும் போது மாதா, பிதா, குரு, தெய்வம் காட்டிய வழிப்படி முதலில்தான் பிறந்த குடும்பத்திற்கும், தனது பெற்றோர் சகோதரர்களுக்கும் பெருமைசேர்க்க கூடிய வகையில் இளமையில் கற்கவேண்டியவற்றைக் கற்று அதன்படி ஒழுகி தான் பிறந்த குடும்பத்திற்குப் பெருமை தேடிக்கொடுத்தல். அடுத்து தாய்க்குப்பின் தாரம் என்பதால் தனது மனைவி மக்களைக் கண்ணை இமை காப்பது போல காத்து கல்வியில் வல்லவர்களாக வரச்செய்து, உரிய பருவத்தில் திருமணம் செய்துவைத்தல். மூன்றாவது கடமை சமூகத்திற்கு சேவை செய்தல் ஆகும்.

இந்த வகையில் அமரர் இரத்தின சிங்கம் கிருஷ்ணதுரை அவர்கள் மூன்றாவது கட்டத்தில் செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய சேவையை முதலாவது கட்டத்தில் இருந்தே செய்ய ஆரம்பித்து விட்டார். அமரர் மாணவப் பருவத்தினராக இருக்கும் காலத்திலேயே நாடகம் நடிக்கும் சேவையை கலை உலகத்திற்கும் சமூகத்திற்கும் செய்ய ஆரம்பித்து விட்டார். இவரிடத்தில் நாடகக் கலை மட்டுமன்றி முத்தமிழில் சொல்லப்பட்ட இயல், இசை ஆகிய கலைகளும் சிறப்பாகக் காணப்பட்டது.

இவர் தனது இசைத்தமிழின் மூலம் ஆலயங்களில் திருமுறை ஓதுதல், திருவாசக முற்றோதல் மற்றும் மரணக் கிரியைகள் நடைபெறும்போது திருப்பொற் சுண்ணம் பாடுதல் மற்றும் கல்வெட்டு எழுதுதல், வாசித்தல் போன்றவற்றையும் நாடகத்துறையில் சிம்மக்குரலில் வசனங்களைப்பேசி சிறப்பாக நடித்தல். இயற்தமிழில் சிறுவர்களுக்கான கவிதைகள், கதைகள் எழுதுதல் போன்ற சேவையை மாணவனாக இருந்த காலத்திலிருந்து அமரத்துவம் அடையும் வரை செய்த வந்துள்ளார்.

இவரது கலைத்திறமையை கண்ட கலாச்சார அமைச்சு இவருக்கு 2010ம் ஆண்டு கலைஞர்களுக்குரிய அதி உயர்விருதாகிய 'கலாபூஷணம்' விருது வழங்கி கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது. இவர் சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்க சமாசத்திலுள்ள ஆடை உற்பத்தித் துறையில் நெசவு ஆசிரியராக கடமை யாற்றியபோது தனது கடமையை கண்ணியமாக செய்து பலரது பாராட்டை பெற்றதும் இவரது சிறப்பம்சங்களில் ஒன்றாகும்

அமரரின் இழப்பால் கலை உலகு ஒரு வெற்றிடத்தை நிரப்ப முடியாமல் தவிக்கின்றது. ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பது முக்கியமல்ல. வாழ்ந்த காலத்தில் என்ன செய்தார் என்பதுதான் முக்கியம். ஒரு மனிதன் இவ்வுலகில் என்பத்தொரு வருடங்கள் வாழ்ந்தால் 1008 பிறை கண்ட பூரண வாழ்வு ஆகும். அந்த வகையில் அமரரும் எழுபது வயது வரை வாழ்ந்து 866 பிறை கண்ட சிறப்புக்குரியவராவார். அமரர் இன்னும் ஒரு பத்து வருடங்களாவது உயிர் வாழ்ந்து கலை உலகிற்குச் சேவைசெய்ய கலை உலகு கொடுத்துவைக்கவில்லைப் போலும்.

'இரவல் தந்தவன் கேட்கின்றான்
இல்லையென்றால் அவன் விடுவானா.?'

உலகில் பிறந்தவர் எல்லோரும் ஒருநாள் இறப்பது உண்மை என்ற நியதியை எண்ணி ஆறுதல் அடைவோமாக.



ஓய்வுநிலை ஆசிரியர்,
கலாபூஷணம், சைப்புலவர்,
அமரரின் நண்பர்.

**ஆ.கனகரத்தினம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறவில் மாமா முறையானவரே. ஊர் வரும் போதெல் லாம் நேர் வந்து நலம் விசாரிக்கும் நல்லவரே. தந்தை யாரோடு சிந்தை கலந்த சிநேகிதரே வீடு வரும் போதெல்லாம் தந்தையாரோடு கண்ணதாசனின் பாடல்களை பாகு பிரித்து பொருளறிந்து பொழுது கழிப்பீர்கள். கம்பராமயணத்தின் கவி சுவைப்பீர்கள். இலக்கிய இரசனை நிரம்பியவரே. என் கவிதைப் புத்தகத்தை வாசித்துவிட்டு அடுத்த நாளே வீடு வந்து பாராட்டி. விட்டுவிடாதே தம்பி, தொடர்ந்து எழு தென்றீர்கள். போன கோடை விடுமுறைக்கு நான் வடித்த கண்ணீர்ப் பாக்களை பார்த்து கட்டி அணைத்தீர்கள்.

இதோ உங்களுக்கும் எழுதியாச்சு கண்ணீர்ப்பா! வாசித்து பாருங்கள்....


## நமது ஊர் நாடகம் ஒன்று முடிந்தது!



நமது ஊரில் பிறந்த
நடிகர் திலகம்
நற்றமிழ் சிறந்த
கலைஞர் திலகம்
அவதார புருசர்களை எல்லாம்
அழகு அரிதாரம் தரித்த கலைஞன்
அண்ணாந்து பார்த்து
வானம் வியந்த கலைஞன்!
அழகு நடை காண
அக்கினி தலை குனியும்!
நளின முகம் காண
அருவி தலை நிமிரும்!
அரங்கத்தில் திரை விலகி
அறிமுகம் தந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலை கரவோசத்தில்
அடை மழையாய் அதிரும்
விசிலின் ஒசைகள் விண்ணைப் பிளக்கும்
உயிர் சாய்ந்த உடலுக்குள்ளே உயிரேவியமாய்
எத்தனை காவிய நாயகர்கள்
ஒழிந்து கிடக்கின்றார்கள்
அழகு வதனம் வாடப்போதே
அன்ன நடை அழியப்போதே
சுருள்முடி கருகப்போதே
கதைகள் புனைந்த விரல்கள்
கட்டை விறகுக்குள் நசியப்போதே
வட்டுக்கோட்டை தொகுதி யாவும்
எட்டுக் கட்டையில் கானமிசைத்த குரல்
காட்டுத் தீயில் வேகப் போதே
பண்ணாகத்து பண்ணிசை வேந்தன்
பறையிசை கேட்டு உறங்குகிறான்
இதுவும் மரணமென்ற நாடகத்துக்கு
இமை மூடி ஒத்திகை தானோ என்று
இரசிகன் கிறங்குகின்றான்
மேடையில் நடித்தது போல்
பாடையிலும் நடிக்க வேண்டுமா?
வரும் எட்டாம் திருவிழாவுக்கு
வள்ளி திருமணம் நாடகமாம்
வரட்டாம் வெற்றி உடையார்
வாருங்கள் எழுந்து...



– செ.பவளகாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்ஆளுமை மிக்க பண்பாளன் துரை




பலப்பலர் பிறக்கின்றனர், வாழ்கின்றனர், இறக்கின்றனர். ஆனால் எல்லோருக்கும் எல்லாவித திறமைகளும், விற்பன்னத்துவமும், விளையாட்டும், இயலும், இசையும், நாடக நடிப்பும், எழுத்தும், நயமாக உரையாடும் இயல்பும், மற்றவர் மனதை புண்படுத்தாத பக்குவமும், பண்புடன் பழகும் பாங்கும் அமைந்துவிடவதில்லை. ஆனால் எமது மேன்மைமிகு நண்பன், கிருஷ்ணதுரைக்கு 'கண்ணன்' என புனைபெயர்கொண்டவருக்கு இவை யாவும் அமைந்தவிட்டதே. அதனால்தான் இத்துணை அவசரமாக விடைபெற்றாரோ..? விடை காண முயன்றால் அது முடிவுறக்கூடிய காரியமா, கடவுளிடமே விடை இருக்கும்.

பாடசாலை நாட்களில் இவரின் சாதனைகள் கணக்கிட முடியாதன. விளையாட்டுத்துறையில் இவரது சாதனைகள் இன்னமும் கணக்கில் இருக்கின்றது. உதை பந்தாட்டம், துடுப்பாட்டம், குறுந்தூர ஓட்டம் இவையாவற்றிலுமே புகுந்துவிளையாடிய நாட்கள் இன்னமும் நினைவில் இருக்கின்றது. இவர் புரிந்த சாதனைகள் மறக்கமுடியாதவை. இதுவே இவருக்கு வேலை வாய்ப்பையும் ஏற்படுத்திக்கொடுத்தது. அவ்வேலையில் பெற்ற அனுபவமும், இவரது நுண்ணாற்றலும் ஒரு தலைசிறந்த தொழில்நுட்பவியலாளராக மாறுவதற்கு காரணமாயின. இதனால் மின்தறி ஆடை தயாரிப்பு துறையில் விற்பன்னராக விளங்கினார்.

அறுபதுகளின் நடுப்பகுதியில் நாம் எல்லோரும் இணைந்து அம்பாள் நாடக மன்றத்தினை உருவாக்கினோம். அல்லது இவரால் உருவாக்கப்பட்ட மன்றில் இணைந்துகொண்டோம் எனக்கூறுவது இன்னும் பொருத்தமாக இருக்கும் என்றே எண்ணுகின்றேன்.

கோவில் திருவிழா காலங்களில் இவர் மேடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யேற்றும் நாடகங்களுக்கு என்றே ஒரு கூட்டம் சேரும். எம் ஊர் கோவில் களிலும் இரவுவேளையில் எமது நாடகம் மேடை ஏறும். கதை, வசனம், நெறியாள்கை, நடிப்பு, பாடல் என இவர் சாதனை தொடர்ந்துகொண்டே இருந்தது.

காலப்போக்கில் பாடசாலைக் கல்வி நிறைவு. மந்தைகள் ஒன்றாக பட்டியில் படுத்துறங்கி பின் காலையில் இரைதேட காட்டில் நாலு திசையும் பிரிவது போல, நாமும் தொழில்தேடி அல்லது தொழில் பெற்று பிரிந்தோம். எமது மாவட்டத்தைவிட்டு பிறதூர வெவ்வேறு மாவட்டங்களிற்கு வேலை வாய்ப்பு கிடைத்து சென்றிட நேர்ந்தது. ஆனாலும் எமது இள மைக்கால நினைவுகளிலும் உறவின் தொடர்பிலும் எந்த மாற்றமும் ஏற்பட வில்லை.


தனது சொந்த உரித்துள்ள மச்சாள் அவர்களையே கரம் பிடித்தார். இனிய இல்லற வாழ்க்கை. பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்தனர். அவர்களை ஆளாக்கினார். உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் அவர்கள் தங்களை நிலைநிறுத்த தோணிபோன்று தோன்றும் துணையாக இருந்தார். காலம் கடந்தது. ஐரோப்பிய நாடுகள் உட்பட பிறதேசங்கள் பலவற்றிற்கு பறந்து சென்றார். வாழ்க்கையை அனுபவித்தார்.

சில வருடங்களிற்கு முன் இலங்கை அரசினால் 'கலாபூஷணம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவருக்கு இப்பட்டத்தினால் பெருமையா? அல்லது பட்டத்திற்கு இவரால் பெருமையா? இது ஆராயப்பட வேண்டிய விடயம். எதுவாயினும் ஒரு பல் ஆளுமை கொண்ட வேங்கை இன்று எம் மத்தியில் இல்லை. ஆனால் அவர் நிலைநிறுத்திய அவரது நற்பெயர் என்றும் நீடித்துக் கொண்டே இருக்கும்.

எனது தந்தையார், தாயார், எனது மூத்த சகோதரன் இவர்கள் மீது இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த அந்த பாசப்பிணைப்பு என்றுமே எம்மனதில் இருக்கும். இதனால்தான் இவருக்கு 'கலாபூஷணம்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட உடனேயே மற்றவர்களை முந்தி நானே எனது பிறந்த இல்லத்தில் ஒரு பாராட்டு விழா, தேநீர் விருந்துதோடு சேர்த்து ஒழுங்கு செய்திருந்தேன். அங்கு இவரும் இவர் மனைவியும் மணமக்கள் கோலத்தில் பட்டுடுத்தி பகட்டாக வந்ததை என்னால் என்றும் மறக்க முடியாது.




இந்த இனிமையான நினைவுகள் என்றும் எம்முன்னே இளமையாக இருக்கட்டும். இதுவே நண்பன் கிருஷ் அவர்களை மனதில் நிலை நிறுத்தி வைத்திருப்பதற்கு வாய்ப்பாக அமைகின்றது.

நண்பனின், அன்பனின் ஆத்மா சாந்தியடைய என்றும் நாம் வணங்கும் தெய்வத்தை வேண்டி நிற்கின்றேன்.

வழக்கம்பரை,
சுழிபுரம்

நண்பனின்
நினைவுடன்
**துரைசிங்கம் ரகு**
இளைப்பாறிய
மக்கள் வங்கி
உதவி முகாமையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைஞர்களுக்கான அதியுயர் விருதான
கலாபூஷணம் விருதைப் பெற்ற தருணத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை வரதராஜ பெருமானை நினைந்து கிருஷ்ணதுரை அவர்கள் எழுதிய துதிப் பாடல்



**பொன்னாலை வரதராஜப் பெருமானுக்கு துதி**

பொன்னாலை நாதனே
பொழுதெல்லாம் நின் நினைவே
உன்னாலை தானையா
உலகமே உருளுதப்பா
என்னாளும் உன் நினைவே
உயிர் வாழ நீ துணையே
கண்ணான கண்ணனே
கடைக் கண் பாருமையா

சில நாள் உனைத் துதித்தால்
வினை எல்லாம் தீருமையா
பல நாளும் பணிகின்றேன்
பாராயோ நீ என்னை
கல கலவென சிரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல கதைகள் நான் சொன்னேன்
சீலனே உன் கதைகேட்டு
சிறுத்தையும் பூனையாய் ஆனதையா

அதிகாலையில் எழுந்து
மனம் வாடி உனை நினைத்து
இதுதான் என் விதியோ என
ஏங்கி நிதம் தவித்து
கதிதான் நீ என்று
காலமெல்லாம் நினைத்து
விதிதான் இதுவென்றால்
மாற்றிட நீ மாட்டாயோ

சங்கெடுத்தூதி சண்டையை மூட்டி
விட்டாய்
மாண்டவர் பல பேர்கள்
பாண்டவர் தன் தர்மம்
தளைத்திட வழிசமைத்தாய்
ஆலமுண்ட கண்டனின்
அன்பு மிகு மைத்துனனே
எம் பாவ வினைகள் தீர்க்க
கல்கியாய் வாருமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேடையில் விளையாடாமல் நடித்தார் மைதானத்தில் நடிக்காமல் விளையாடினார்!

அண்மையில் மீளாத்துயில் கொண்டு எம்மை ஆழ்த்திய அருமை மைத்துனர் அவர்களின் மறைவு குறித்து எனக்கு அனுதாபம் தெரிவித்த ஓர் அன்பு உள்ளத்துக்கு இவ்வளவு விரைவில் அஞ்சலி செலுத்த நேர்ந்ததை எண்ணி நெஞ்சம் வருந்துகிறேன். எந்தச் சிக்கலான வசனத்தையும் விசனமின்றி மேடைகளில் முழங்கும் இவரது பேச்சடங்கியபின் மூச்சே அடங்கிய நிலை அறிந்து முழுமனதாக அதிர்ந்தேன்.

அமரர் இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை அவர்களுக்கு 'கண்ணன்' என்றதொரு புனை பெயர் உண்டு. இந்தக் கண்ணனுக்கு ஒரு கண் கலை என்றால் மறு கண் விளையாட்டு எனலாம்.



கலைத்துறையிலே பல நாடகங்களை அரங்கேற்றிய கண்ணனின் வாழ்வே ஒரு நாடகமாக நடந்து முடிந்ததை உணர முடிகின்றது. இளமையிலே பொறுமையுடன் சந்தித்த சோதனைகளைத் திறமையுடன் சிந்தித்துச் சாதனைகளாக்கிய சரித்திர நாயகன் இவர்.

சமூகக் குற்றச்சாட்டுக்களையும் சமயக் குறைபாடுகளையும் கண்டு இவர் வாடினார். அதற்கு சரியானதை வேண்டித்தேடினார். அதன் பொருட்டு நாடகத்துறையை நாடினார். அந்தத் துறை வாயிலாக இந்தத் 'துரை' சமுதாயச் சீரழிவுகளுடன் கலாச்சார பேரழிவுகளையும் சாடினார். முற்போக்குக் கருத்துக்களைப் பாடல் வடிவிலே பாடினார். ஆடல் உருவில் ஆடினார். கலை நயமிக்க நாடகம் நிலையறிவு நிறைந்த ஊடகமாக இவர் கையில் ஓங்கி நின்றது, என்றுமே வென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது நெறியாள்கையில் வெற்றிவாகை சூடிய 'வாழ்வதற்கு வழி செய்' என்னும் நாடகத்தின் கதாநாயகனாக 'ஜீவா' பாத்திரம் இவரது நடிப்பாற்றலில் ஜீவா பாத்திரமாக புகழ்பெற்றது. வில்லன் பாத்திரமான வக்கீல் வரதராஜ னாகவே வாழந்து காட்டியதாக மறைந்தும் மறையாத இதய அன்பர் என் இனிய நண்பர் அமரர் அ.தி.அப்புத்துரை அவர்கள் பாராட்டு பெற்றார்.

கிருஷ்ணதுரை அவர்களின் அளப்பரிய சேவையின் விளைவான கலை வளர்ச்சியையும் அதன் வாயிலான சமுதாய மலர்ச்சியையும் கருத்திலே கொண்ட இலங்கையரசு 'கலாபூஷணம்' விருது வழங்கி இவரைக் கௌரவித்தமை இவரது குடும்பத்துக்கு மட்டுமல்ல, எங்கள் கிராமத்துக்கே தரப்பட்ட பெருமை என்பதே உண்மை. இப்பெருமையிலே குளித்த நான், 'கலைப்பயிர் விளையும் தமிழ்த்தரை கலாபூஷணம் விருதுபெறும் கிருஷ்ணதுரை' என அன்று வாழ்த்தியதை எண்ணி இன்று மனம் மகிழ்கிறது. நெஞ்சம் நெகிழ்கிறது.

விளையாட்டுத்துறையில் இவரது பாரிய பங்களிப்பு மிக விசாலமானது, விசேடமானது. சுழிபுரம் விக்டோறியா கல்லூரியின் விளையாட்டு வரலாற்றில் இவர் ஒரு சகாப்தம் எனச் சொல்லலாம். அன்புத் தம்பி திரு.ஆறுமுகம் பத்மநாதன் (சின்னராசு, இங்கிலாந்து) என்றும் தனது இன் பந்துடன் இணைந்து ஆடிய உதைபந்து விளையாட்டு வெறும் வியைாட்டு அல்ல பெரும் பாராட்டு.

மேடையில் விளையாடாமல் நடித்தார். மைதானத்தில் (விளையாட்டில்) நடிக்காமல் விளையாடினார். இவரது வெற்றியின் இரகசியம் என்பதற்கு மேல் வரலாற்று அதிசயம் என இதனை வர்ணிக்கலாம்.

முத்தமிழ் சொத்தான நாடகத்துறையை அணிசெய்யும் மறைந்த அமரர் அவர்களின் மறையாத கலைப்படைப் புக்களையே கண்ணீர்ப் பூக்களாக்கி நெஞ்சம் நிறை நான் செலுத்தும் அஞ்சலி.




'விலகவா பழகினோம்?' என வீரமாக முழங்கி, விரும்பிக் காதலித்தவரையே விவேக மாக விவாகம் புரிந்து 'வாழ்வதற்கு வழி செய்'து, 'அவன் போட்ட கணக்கு'ப்படி மறைந்த அமரர் கலாபூஷணம் கிருஷ்ணதுரை அவர்களை எண்ணி 'அழாதவர்கள் யார்?'

**சோம திருச்செல்வம்,**

பண்ணாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அவருடைய ஒரு ரசிகன்



என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர் கிருஷ்ணதுரை அண்ணர் அவர்கள். அமரர் கிருஷ்ணதுரை அவர்களுக்கும் எனக்கும் இடையே நீண்ட காலத் தொடர்பு உண்டு. அவர் மட்டுமல்லாது அவரது குடும்பத்தினரும் அவ்வாறு தொடர்புகளை பேணி வந்துள்ளனர். இவர் ஒரு சிறந்த ஆடை தயாரிப்புத் துறையின் தொழில்நுட்பவியலாளராக சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றி வந்தார். இவரது துறைசார்ந்த பாண்டித்தியம் மற்றும் அனுபவம் அக்காலத்திலே சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவியதுடன், நல்லதொரு பெயரையும் ஏற்படுத்திக்கொடுத்தது. அத்துடன் 1970களில் நாட்டில் நிலவிய பொருளாதார கொள்கை காரணமாக அவரின் மேற்பார்வையில் உற்பத்தி செய்யப்பட்ட துணி வகைகளுக்கும் பெரும் கிராக்கியும் ஏற்பட்டது. மக்களுக்கு அப்போதிருந்த துணி வகைளின் தட்டுப்பாடும் நீங்க ஏதுவாக இருந்தது. இளைப்பாறிய பின்னர் சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினராகவும், பணிப்பாளர் சபையிலும் தெரிவு செய்யப்பட்டு சிறப்பாக செயற்பட்டார். நீதிக்காக எம்முடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து பெருச்சபைக் கூட்டங்களில் குரல் கொடுத்து வந்தவர்களில் அமரர் அவர்களும் ஒருவர். இவர் வலிமேற்கு பிரதேச கலாசார பேரவையிலும் எம் முடன் நிர்வாக சபை உறுப்பினராக செயற்பட்டு சேவையாற்றியமையை நான் நன்கு அறிவேன்.

இதற்கு மேலாக அமரர் அவர்களின் கலைத்துறை பற்றி இங்கு சொல்லியே ஆகவேண்டும். நான் அவருடைய ஒரு ரசிகன். அன்றைய நாட்களில் அவர்களு டைய கலைமன்றங்களினூடாக மேடையேறிய நாடகங்கள் இன்றும் என் மனதை விட்டகலாதவையாக உள்ளன. 'அவன் போட்ட கணக்கு', 'வாழ்வதற்கு வழிசெய்' போன்ற சமூக சீர்திருத்த நாடகங்கள் வாழ்நாளில் மறக்க முடியாதவை. அவருடன் எனது கிராமத்தைச் சேர்ந்த பலரும் இணைந்து நடித்து புகழீட்டினர்.

இவருக்கு கலாபூஷணம் விருது அரசாங்கத்தினால் வழங்கப்பட்டபோது இவருடன் இணைந்து நடித்தவர்களில் ஒருவரும், மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளராகிய திரு.ரகு அவர்களினால் தனது இல்லத்தில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் பாராட்டுரை வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மனமகிழ்வடைந்தேன். இதில் பெருமகிழ்ச்சி யாதெனில் அமரர் அவர்களுடன் இணைந்து நடித்த பலர் அன்றைய நிகழ்வில் கலந்து பாராட்டுரை வழங்கி கௌரவித்தமையேயாகும். நாடகத்துறையில் கதை, வசனம், இயக்கம் ஆகியவற்றை செவ்வனே பல சகாப்தங்களாக செய்து வந்த அமரர் அவர்களுக்கு அரசு பட்டமளித்து கௌரவித்தமை பொருத்தமானதே.

அமரர் அவர்களின் இறுதி நாட்களில் சுகயீனமுற்று இருந்தமை நாம் அறிவோம். அவரது இழப்பு குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது, அவரது கிராமத்திற்கும், கலைத்துறையினருக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவரது பல நாடகங்களை தனது திருவீதியிலே மேடையேற்றிய எல்லாம் வல்ல தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாளை வேண்டி அனைவருக்கும் ஆறுதல்கூறி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

'The way to change others. mind is with affection, and not anger.
Dream what you want to dream; Go where you want to go.
Try to be who you really are. Because life is short, and often
only gives one chance to do thing.'

**தி.உதயசூரியன்,**
**சமாதான நீதவான்,**
**தொல்புரம் கிழக்கு,**
**சுழிபுரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதி முருகப் பெருமானை நினைந்து கிருஷ்ணதுரை அவர்கள் எழுதிய துதிப் பாடல்



### சந்நிதி முருகனுக்கு துதி

சஞ்சலம் எல்லாம் தீரப்பாய்
சந்நிதி வாழ் முருகா
பஞ்சமும் பசியும் இன்றி
பலபேர்க்குணவளிப்பாய்
கெஞ்சியுனை போற்றுகிறேன்
பசி எமை நாடவிடாதே
அஞ்சி அஞ்சி அகதிகளாய்
வாழும் எமக்கு வழிகாட்டு

முறையோ இது நீதியோ
முதல்வா தமிழ் முதல்வா
குறையுன்னை சொல்வதனால்
ஆவதென்ன அருள் முருகா
மறையும் உடல் தன்னை
மனம் வருந்தி வளர்க்கின்றோம்
இறையே தமிழ் மறையே
இன்று தமிழன் முடிவென்ன


காவடிகள் ஆடிவந்தோம் கந்தா
ஏன் அடியார் துயர் தீர்க்கவில்லை
சேவடியை நாடி வந்தோம் கந்தா
செவிகளிலே எம் குரல் கேட்கலையோ
மோசடிகள் செய்யும் வெற்றிகள்
நிலைக்குமோ நீ சொல்லு கந்தா
பாசமுடன் நாம் வணங்கும் கந்தனே?
எம் பாவ வினை தீர்க்க மயிலேறி வாருமையா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நினைவில் வாழும் அத்தான்



கையில் பேனா எடுத்தேன்
என் அத்தான் பற்றி எழுதுவதற்கு...
என் கண்கள் குளமாகி என்னை
எழுதவிடாமல் தடுக்கின்றது!
பள்ளியில் படித்த காலத்திலும் சரி
பருவமடைந்த வேளையிலும் அத்தான்
எங்கள் வீட்டிலும் ஒரு பிள்ளை
அம்மாவிடம் தொலைபேசியில் கதைத்தேன்
"கொத்தான் என்னைக் கொண்டுபோய்ச் சுடுவான்
என எண்ணியிருந்தேன் என்னை ஏமாற்றிவிட்டு
போய்விட்டார்" எனக் கதறி அழுதா...
நீங்கள் எங்கள் தமிழ் மொழி மீது
எவ்வளவு பற்று வைத்திருக்கின்றீர்கள் என்பதை
எனக்கு பாடசாலைக்கு கட்டுரை எழுதித் தரும்போது
'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு
முன்தோன்றிய மூத்தது எங்கள் தமிழ்' என
எழுதித் தந்தபோது உணர்ந்துகொண்டேன்.
உங்கள் எழுத்தும் நாடகமும்
என் கண்முன்னே உலா வருகின்றன.
அழாதவர்கள் யார் என்ற நாடகம் எழுதினீர்கள்
இன்நாளில் உங்களை நினைத்து
அழாதவர்கள் யார் அத்தான்..?



அத்தானை இழந்து தவிக்கும் என் அக்கா,
பிள்ளைகள், மாமி, மச்சாள்மார்,
மச்சான்மார் எல்லாருக்கும் என் ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.
அத்தான் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

உங்கள் அன்பு மச்சாள்
தேவலோஜினி சிவசுந்தரம் (சிறி) கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியுமாம் பெருமை



அப்போதுதான் 1960க்களின் தொடக்க காலம் யாழப்பாணத்திலிருந்து, இங்கு குடியிருப்பதற்காக தற்காலிகமாகசச் சிறிய தந்தையார் அமரர் இ.சின்னத்துரை (இ.போ.ச பரிசோதகர்) அவர்கள் வீட்டில் தங்கியிருந்தேன். அமரர் இ.கிருஷ்ணதுரை அவர்களின் வீடு எதிர்புறத்தில் பிரதான வீதிக்கு அப்புறம் இருந்தது.

சுழிபுரத்தில பிரசித்திபெற்றிருந்த சுழிபுரம் விக்டோறியா கல்லூரியில் படிப்பைத் தொடரும் விருப்பைச் சிறிய தந்தையாரிடம் கூறினேன். அப்போது அக் கல்லூரியில் ஓரளவு பிரபல்யமாயிருந்த ஆசிரியர் அமரர் ஏ.இராஜசுந்தரம் அவர் களுடன் தொடர்புகொண்ட சிறிய தந்தையார், அவரது சம்மதத்தினையும் பெற்றிந்தார்.

அக்காலப்பகுதியில் கல்லூரி விளையாட்டுப் போட்டிகளில் முக்கியம் பெற்றிருந்த அமரர் கிருஷ்ணதுரை அவர்களிடம் 'பண்ணாகத்தான் ஒருவன் இக்கல்லூரிக்கு வரவிரும்புகின்றானாம் சேரத்துக் கொள்ளமட்டுமா?' எனக் கேட்டாராம். அமரரும் 'ஆம்' எனச் சம்மதம் தெரிவித்தாராம். (பல வருடங் களின் பின்னர் ஒருநாள் இந்நிகழ்வுகளை அவரே கதையோடு கதையாக எடுத்துக் கூறிச் சிரித்தார்)

அனுமதிக்காக கல்லூரி சென்றவேளை 'ஒரு சிறிய பாடசாலையிலிருந்து வந்தவரை எவ்வாறு சேர்த்துக்கொள்ளுவது' எனக் கல்லூரி அதிபர் சற்றுப் பின்வாங்கினார். எவ்வாறாயினும் எனக்கு அனுமதி கிடைத்தது.

பிற்காலத்திலே உயர்தரப் பரீடசையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லத் தயாரானவேளை, முறையாக அனுமதித்தவர்கள் எதுவுமே செய்யாத போது, எனது சிபாரிசினால் அனுமதிக்கப்பட்ட மாணவன்தான் எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிக்கு பேர் எடுத்துக் தந்துள்ளான் என எல்லோரிடமும் சொல்லி அமரர் இ.கிருஷ்ணதுரை பெருமைப்பட்டுக்கொண்டார்.

இந்த வகையில் எனது உயர் கல்விக்கு ஊன்றுகோலாயிருந்த இம் மூவரையும் என்றுமே மறக்க முடியாது. ஒருவேளை இவர்களது ஒத்துழைப்பு கிடைக்காதிருந்திருந்தால் என் நிலை என்னவாயிருக்கும் என அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.

"கிருஷ்ணதுரையிடம் பந்தைக் கொடுத்து விடாதீர்கள்" என எதிர்த்தரப்பினர் சப்தமிடுவது இப்போதும் காதில் ஒலிக்கின்றது. அவ்வகையில் துடுப்பாட்டம், கரப்பந்து, கால் பந்து, கலைப் போட்டிகள் எல்லாவற்றிலும் முதன்மை வகித்தார்.

கல்லூரி வாழ்க்கை முடிந்ததும் சில காலம் 'தினபதி' பத்திரிகையில் ஒப்பு நோக்காளராகவும், பண்ணாகம் உப தபாலதிபராகவும் கடமையாற்றினார்.



சங்கானை ப.நோ.கூ.சங்க மின்தறியாலையில் சாதாரண தொழிலாளியாகச் சேரந்த இவர் தனது திறமையினால் தொழில்நுட்பவியலாளர் பதவியை பெற்றுக்கொண்டார். அத்துடன் அவ் ஆலையின் தொழிற் சங்க செயலாளராகவும் பதவி புரிந்து நிர்வாகத்துடன் போராடி, தொழிலாளர்களுக்குரிய சகல உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொடுத்தார்.

இதன்பின் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் அமைந்திருந்த ஒரு தனியார் நெசவாலையில் தொழில்நுட்பவியலாளராக கடமையாற்றி தனது தொழில்சார் சேவைகளை முடிவுறுத்திக்கொண்டார்.

இந்த வகையில் பல்வேறு வேலைகளைச் செய்திருந்தாலும், கிராமத்திலுள்ள பொது நிறுவனங்கள் யாவற்றிலும் பங்குகொண்டு முக்கிய பதவிகளையும் வகித்துச் சிறப்பித்துள்ளார். பண்ணாகம் முதியோர் சங்கம் 2008இல் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் செயலாளராயிருந்து ஏறக்குறைய 125ற்கு மேற்பட்டவர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் பெறத்தேவையான நடவடிக்கைகளையெல்லாம் செய்திருந்தார்.

இவ்வேளைகளிற்கூட அவர் நாடகத்துறையைக் கைவிடவில்லை. பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களை எழுதி, நெறி ஆழ்கையையும் செய்துவந்தார். அவ்வகையில் அவர் எழுதித் தயாரித்த 'அழாதவர்கள் யார்' நாடகம் பார்த்தோர் யாவருமே அழவைத்து விட்டதனைக்கூட குறிப்பிட்டே ஆகவேண்டும். இக்குறித்த நாடகத்தின் மூலம் பெறப்பட்ட நிதி மூலம் விசவத்தனை கேணி புனரமைக் கப்பட்டதும் ஞாபகப்படுத்த வேண்டியதே.

புகழ் அவரைத்தேடி வந்தது என்றே சொல்ல வேண்டும். இடம்பெயர்ந்து வன்னியில் இருந்தபோது கூட இவர் தனது கலைச்சேவையைத் தொடர்ந்திருந் தார். வலிமேற்கு (சங்கானை) பிரதேச செயலக கலாச்சார பேரவையினால் 2003ஆம் ஆண்டு 'கலைவாரிதி' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2010இல் இலங்கை அரசாங்க கலாச்சார அமைச்சினால் 'கலாபூஷணம்' விருது வழங்கி பெருமைப்படுத்தப்பட்டார்.

இவ்வளவு நிலையிலும் அவர் ஒரு நல்ல குடும்பத் தலைவராகவும் இருந்தமை தான் மெச்சத்தக்கது. ஒரு ஆணின் வெற்றிக்கு பின்னாலும் ஒரு பெண் இருக்கின்றாள் என்ற வகையில் அவரது பெருமைகளுக்கெல்லாம் மனைவிக்கும் பங்கு போகிறது.

அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினருக்கும் எல்லாம் வல்ல விசவத்தனைப் பதியுறையும் வள்ளி, தெய்வானை சமேத முருகன் இணையடி துணைநிற்பதாக.

பண்ணாகம் சுபம்


என்றும் மறவாத
ஆ.கதிரமலைநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழாதவர் யார்..!



வானமும் பூமியும் வணங்கி விடைகொடுக்க
பழகிய நாளெல்லாம் கலங்கித் தவித்திருக்க
காலனவன் கடமையிலே கண்ணியமாய் நின்றிருக்க
பாசமிகு மச்சாளின் அண்ணன் பரனுலகம் சென்றாரே!
பொட்டழகும் பொன்னுடலும் பூத்துச் சிரித்த முகமும்
கட்டவிழ்ந்து வீழ்ந்து கதறிப்புலம்புதையா! (உன் காதல் தேவதை)
நித்திலமும் சோடியாய் நின்றுலவும் கோலமதை
கட்டவிழ்த்துபோக காலனவன் வந்தானோ?
கதறி அழுகின்றோம் காலமெல்லாம் நாங்கள்.
குழந்தையின் உள்ளம் கொண்டு குதூகலம் பொங்கும் பேச்சால்
குலவிய மனைவியோடு குடும்பமாய் இருந்து வாழ்ந்து
விருந்தினை விரும்பி அழைத்து விருப்புடன் உறவுகொண்டு
உற்ற நற்பண்பினாலே உறவினைப் போன்று வாழ்ந்து



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




களங்கங்கள் அற்றுக் காலத்தை வென்று வாழ்ந்து
பிள்ளைகள் பெற்றுப் பெருவாழ்வு வாழும் வேளை
முடிந்ததோ உன் வாழ்க்கை! இல்லவே இல்லை இல்லை
வாழ்ந்த நற்காலமெல்லாம் வந்து வந்து நினைவு காட்டி
ஊன்றுதே மனத்துள் உந்தன் உருவமும் செயலும்
என்றுமே அழியாதய்யா எம்முடன் வாழ்ந்த காலம்.
அருகிருந்து அன்பும் அறனும் அறிவும்
அள்ளி தந்த காவியக் கலைஞன் என் அண்ணன்
அன்று அவனது வெற்றி மேடை அழாதவர் யார்?
இன்று எங்கள் துரையை நினைத்து
அழாதவர் யார்?
ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆர் ஒருவர் அடங்கா தாரே
வையத்து வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுமென நம்பும் நாம்
தெய்வமே! அன்னாரின் பிரிவால் அல்லற்படாமல்
வையத்து வாழ்வாரைக் காத்தே அருள்வாய்.

அன்னாரின் ஆத்மா இறைவனடி சேரவும் இறைவனை வேண்டும்

அயலவன்

**வாசு.முத்தழகன்**

ஜேர்மனி ஆலன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விதி சதி செய்துவிட்டது



கலாபூஷணம் அமரர் இ.கிருஷ்ணதுரை அவர்கள் பண்ணாகம் விசவத்தனை முருக மூர்த்தி கோவில் முன்பாகவுள்ள கேணியை தனது நண்பர்களின் உதவியோடு அழகாக விளங்க திருத்தம் செய்து நீச்சல் தடாகமாக பயன்பட வைத்த பெருமைக்குரியவர். கல்வி விளையாட்டுக்களில் மேம்பாடுடையவராக வாழ்ந்து காட்டியவர்.


முறிவு, நெறிவு நோய் தீர்க்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது மனைவியார் தற்போது தமது முன்னோர் தொட்ட பணியை தொடர்ந்து செய்து பலரது நோயை குணப்படுத்தி வருவதை நான் அறிவேன். அமரர் இ.கிருஷ்ணதுரை வாழ வேண்டிய காலம் நிறைய இருந்தும் விரைவாக மரணத்தை தழுவிக் கொண்டுள்ளார். இவர் பண்ணாகம் விசவத்தனை முருகன்மேல் அளவிறந்த பக்தியுடையவர். திருவெம்பாவை, சண்முக அர்ச்சனை உபயங்களின் பங்காளராக விளங்கியதை நான் நன்கு அறிவேன். வருடந்தோறும் இவற்றை நிறைவுசெய்ய முன்னின்று உழைத்து வந்தவராவார்.

இவரது தாயார் திருமதி இரத்தினசிங்கம் சிவபாக்கியம் வயது 91 சுகமாக உயிர்வாழ்ந்து வருகினறார். நிறைவான பிள்ளைகளைப்பெற்று பேரப்பிள்ளைகளின் சிறப்பைக் கண்டுள்ளார். இவரது தம்பிமார் பரமேஸ்வரன் (கிட்டு), கோகுலராசா சகோதரிமார்கள் காணும்தோறும் எங்கள்மேல் அன்பைச் சொரிந்து சந்தோசம் செய்வதை எனது வாழ்வில்பெற்ற பெரும்பேறாக கருதுகின்றேன். தம்பி கோகுலராசா நாங்கள் வெளியீடு செய்த அபிராமி அந்தாதி கருத்துரை நூலுக்கு பக்கதுணையாக விளங்கியதை மறக்கமுடியாது.

அமரர் கலாபூஷணம் கிருஷ்ணதுரை தனது பிள்ளைகளை கல்வியில் மேன்மையுற வைத்து பெருமையுற்றுள்ளார். உலக நாடுகளுக்கு தனது மனைவியுடன் சென்றுவந்து மகிழ்வுடன் வாழும் பாக்கியம் பெற்றவர். இவருக்கு நோய் ஏற்பட்ட காலத்தில் வீடுசென்று பார்த்து ஆறுதல் கூறிவந்தேன். கண் சத்திர சிகிச்சையில் குணமானதுபோல் குணமாவார் என்று எதிர்பார்த்தேன். விதி சதி செய்துவிட்டது. இவ்வேளை யாவருக்கும் ஆறுதல்கூறி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவன் பாதத்தை வணங்கி பிரார்த்திப்போம்.

**- க.வாமதேவன்** சமாதான நீதவான் பண்ணாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்ணாகம் கலைப் பொக்கிஷம் மறைந்தது

அமரத்துவமான இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை எனது பாலிய நண்பர். எனக்கு இவருடன் நெல்லியான் வைரவ கோயிலடியில் கிரிக்கட் விளையாடியதிலிருந்து ஏற்பட்ட நட்பு பலவாறாக வளர்ந்து இன்றுவரை தொடர்ந்தது. இவர் தனது கல்வியை யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல யாழ் இந்துக் கல்லூரியில் கற்றார். கற்கும் காலத்தில் கல்வியில் மிகுந்த ஆர்வமும் கெட்டித்தனமுள்ளவராக இருந்தாலும் விளையாட்டிலும் தீவிரமாக ஈடுபட்டு எல்லோராலும் பாராட்டப்பட்டார். கிரிக்கட் விளையாட்டில் ஈடுபட்டு சாதனைகளை நிலை நாட்டினார்.



இவரை கலைப் பொக்கிஷம் என்று கூறியதன் காரணம், இவர் தனது இளமைக்காலத்தில் கிராமத்தில் பல சமூக நாடகங்களை நடித்து பல பாத்திரங்களை ஏற்று அவற்றிலெல்லாம் சிறப்புப்பெற்று பலராலும் பாராட்டப்பட்டார். சினிமா பாடல்களை மிகவும் அழகாக உரியபாணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடி மகிழ்வதும் மற்றையோரை மகிழ்விப்பதிலும் மிகவும் சிறந்தவர். இவரின் கலை ஆர்வத்தையும் கலைத்திறமையையும் கண்ட வலிகாமம் மேற்கு கலாச்சாரப் பேரவையினர் 'கலைவாரிதி' விருது வழங்கச் சிபார்சுசெய்தனர். இதன்பின் இவர் இலங்கை அரசால் 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டார்.

இவர் தனது வாழ்க்கைக் காலத்தில் கிராமத்திலுள்ள பல பொது அமைப்புக்களில் ஈடுபட்டு அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார். இதனால் கிராமத்தில் பலரது நட்புக்கும் அன்புக்கும் பாத்திரமாகி வசித்தார். இவரது கலைப் பங்களிப்பால் மேலும் பட்டங்களையெல்லாம் பெற்று தனது குடும்பத்திற்கும் கிராமத்திற்கும் பெருமை தேடித்தந்தார்.

திருமண வைபமொன்றில் நான் இவரை சந்தித்தேன். என்னை அவர் கண்டவுடன் JP என்று அன்பாக அழைத்தார். நான் "நீங்கள் கலாபூஷணம் அல்லவா அது மிகவும் பெறுமதியானது கிடைத்தற்கரிய பட்டம்" என்பதனைக் கூறினேன். அவர் மட்டற்ற மகிழ்வடைந்தார்.

அமரர் அவர்கள் அன்பு உள்ளம் படைத்தவர். அவர் தனது முறை மச்சாளை காதலித்து மணந்து மிகவும் சந்தோசமாகவும் முன்மாதிரியாகவும் வாழ்ந்து வந்தார். தனது வாழ்க்கையில் ஏழு பிள்ளைச் செல்வங்களை பெற்று அவர்களில் அகால மரணமேற்பட்ட இருவரைத் தவிர மற்றையோர் மேற்குலக நாடுகளில் தொழில் புரியும் சிறப்பையும் தன்னைப் பார்க்க பட்டதாரியான ஒரு மகனை (ரமணன்) ஆசிரியராக்கி, அவர் இப்போது தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கற்பிக்கின்றார். பேரப்பிள்ளைகளை மெய்கண்டான் பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் ஏற்றிவந்து கூட்டிச்செல்லும் காட்சி கண்முன் நிற்கின்றது.

பேரப்பிள்ளைகளுடனும் கொஞ்சிக்குலாவி சந்தோசமாக வாழ்ந்த கிருஷ்ணதுரையை காலன் குறுகிய காலத்தில் கவர்ந்தமை எம் எல்லோருக்கும் பேரிழப்பாகும் கவலையுமாகும். இவரின் இழப்பால் கவலையுறும் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர், சுற்றத்தினர் அனைவருக்கும் எனது கவலையை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா விசவத்தனை முருகன் பாதாரவிந்தங்களை சென்றடைந்து பேரின்ப வாழ்பனுபவிக்க இறைஞ்சுகிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பண்ணாகம், சுழிபுரம்

**ச.கனகரசன்** (JP)

**ஓய்வுநிலை பிரதி நிலஅளவையாளர் நாயகம்**

**வலிமேற்கு பிரதேச சபை உறுப்பினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செருக்கில்லாச் சீராளன்

புன்னகை தவழும் முகம், சுருண்ட கேசம், மென்னையான இனிய குரலினை சப்திக்கும் வாய், அங்க அபிநயத்தால் கருத்தை வெளிப் படுத்தும் சரீரம்... இவ்வாறு அண்ணர் கிருஷ்ணதுரை ஒரு நடமாடும் கலைஞனாக வாழ்ந்தவர். அவர் அழகன் பெரும் கலைஞன். நன்றாகப் பாடுவார், நன்றாக நடிப்பார். அது மட்டுமல்லாமல் நாடகங்களை எழுதக் கூடிய ஆற்றலும் உள்ளவர். தானும் சிரித்து மற்றவர்களையும் சிரிக்க வைக்கும் அழகன் கிருஷ்ணதுரை அண்ணர் எப்போதும் மற்றவர்களை கண்டவுடன் சிரிக்கும் வழக்கத்தை தன் பண்பாகக் கொண்டு வாழ்ந்தவர்.

காதல் இருவர் கருத்தொரிமித்து ஆதரவுபட்டதே இல்வாழ்க்கை என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க இல்லறம் நடாத்திய சிறப்புக்குரியவர். தன் மக்கட் செல்வங்களை அவயத்து முந்தி இருக்கும் வகையில் அவர்களைச் கல்விச் செல்வம் பெற வைத்த தந்தையார். தன் பெற்ற தாயைத் தெய்வமாகப்போற்றி மதித்தவர். மேலும் சகோதரங்களுடன் நெஞ்சார அன்பு கொண்டு வாழ்ந்து அவர்களின் நெஞ்சத்தை இடமாகக்கொண்டவர். தன்னுடைய மைத்துனர், மைத்துனிமார்களுடனும் பெறா மக்கட் செல்வங்களுடனும் மருமக்கட் செல்வங்களுடனும் மிகவும் அன்புடன் பழகும் இனிய சுபாவத்தைக்கொண்டவர்.

விக்டோரியாவில் நான் கல்வி கற்கம்போது அமரர் கிருஷ்ணதுரை அண்ணரும் கல்வி கற்றார். அக்காலத்தில் பாடசாலை நிகழ்வுகளில் பாடுவதும் நடிப்பதும் இவரின் செயற்பாடாக காணப்பட்டது. ஒரு முறை ஒரு நிகழ்வில் இவர் பாடிய 'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு, ஒரு கோல மயில் என் துணையிருப்பு...' என்ற பாடல் இவரின் இசைச் சிறப்பை எல்லோரும் மெச்சும் வகையில் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பாடலை இசைத்த வகையால் எனக்கு அப்பாடலில் விருப்பும் அண்ணர் கிருஷ்ணதுரையிடம் ஒரு ஈடுபாட்டையும் ஏற்படுத்தி இருந்தது. பண்ணாகக் கிராமத்திற்குச் சிறப்புச் சேர்த்த கலைஞர்களில் அமரர் முக்கியமானவர்.

சுற்றத்தவர்களின் நன்மை தீமைகளில் பங்கு கொள்ளுவதில் அவர் ஒருபோதும் தவறுவதில்லை. தான் பிறந்த ஊரில் பற்றுக்கொண்டவர். அவர் ஒரு கலைஞனாக இருப்பதால் கலைஞர்களைத்தேடி அவர்களுடன் நெருக்கமாக பழகும் தன்மையுடையவர். செருக்கில்லாச் சீராளனே கிருஷ்ணதுரை எனும் கலைஞன். என் நோக்கில் அவர் குழந்தையாகவே எந்நேரமும் புன்னகைத்த வண்ணம் வாழ்ந்து மறைந்தார். அவர் மறைந்தாலும் அவருடைய இனிய புன்னகையையும் அவரின் கலைத் தொண்டையும் நாம் மறக்கவே முடியாது. அமரரின் ஆத்மா சாந்தயடையவும் அமரரின் குடும்பத்தினர் சாந்தி பெறவும் அன்புருவாம் சிவ பரம்பொருளை பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
விரிவுரையாளர் (இந்து நாகரீகம்)
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

---

| இலக்கம் | கிரகம் | அதிஸ்ட நவரத்தின கற்கள் |
|---|---|---|
| 1 | சூரியன் | மாணிக்கம் |
| 2 | சந்திரன் | முத்து |
| 3 | வியாழன் | புஸ்பராகம் |
| 4 | இராகு | கோமேதகம் |
| 5 | புதன் | வைரம் |
| 6 | வெள்ளி | மரகதம் |
| 7 | கேது | வைடூரியம் |
| 8 | சனி | நீலக்கல் |
| 9 | செவ்வாய் | பவளம். |

## ஆங்கில எழுத்தின் இலக்கம்

1 - A I J Q Y
2 - B K R
3 - C G L S
4 - D M T
5 - E H N X
6 - U V W
7 - O Z
8 - F P


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைசிறந்த குடும்பத் தலைவர் நினைவாக...



இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை சிறு பராயத்திலிருந்து நான் அயலவராக நன்கு அறிவேன். விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கிணங்க அன்னார் நற்குணங்கள் அமைந்த ஒரு இளைஞராக வாழந்து அவருடைய தெய்வானைப்பிள்ளையை (ஆச்சியை) காதல் திருமணம் முடித்து சிறப்பாக வாழ்ந்தார். பண்ணாகத்தில் புகழ்பூத்த 'சீனிப் பரியாரியார்' குடும்பத்தில் உதித்த இவ் இருவரும் எல்லோராலும் பாராட்டக்கூடிய முறையில் இல்லற வாழ்க்கை நடாத்தியதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். அன்னாரின் திருமணத்தின்போது காதலில் வெற்றிபெற்ற ஒளி வீசும் முகங்களுடன் இருவரும் வீற்றிருந்த காட்சி சிவனும் உமையும் போல் இருந்ததை என்னால் மறக்க முடியாது.

அன்னார் விசவத்தனையிலுள்ள அன்னதான சபைத் தலைவராக இருந்து பெரும் தொண்டாற்றி சிற்றுரை ஆற்றிய காட்சிகளை கனடாவில் வீடியோவில் பார்த்தோம். அவர் தபால் அதிபராக மூளாயில் வேலை செய்த போதும் நான் பல தடவைகள் சந்தித்தேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற இலட்சியங்களை வாழ்வில் குறிக்கோள்களாக்கொண்டு தான் ஈடுபட்ட அனைத்து துறைகளிலும் சாதனை புரிந்தவர்.

அன்னார் மறைவுச் செய்திகேட்டு கனடாவில் நாம் அதிர்ச்சி அடைந்தோம். இரு ஆண்டுகளுக்கு முன் நாங்கள் ஊரில் சந்தித்தபோது அண்ணை என இன்முகத்துடன் கதைத்த நினைவு எங்களை நெகிழச் செய்தது. அன்னாரது மறைவால் அவரது மனைவி ஆச்சிக்கும் பிள்ளைகளுக்கும் நிவர்த்தி செய்ய முடியாத பேரிழப்பாகும். அவர்கள் துக்கத்தை தாங்குவதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் என்று அவர்களுக்கு நாம் தேறுதல் கூறுகின்றோம். அன்னாரின் நினைவும் புகழும் என்றும் எம்மோடு நிலைத்திருக்கும். அவருடைய அபிலாசைகளை அவருடைய பிள்ளைகள் மனதில் இருத்தி நிறைவேற்றுவார்கள் என நம்பி அவர்களையும் மனதைத் தேறுதல் செய்யும்படி வேண்டுகின்றோம்.

பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் அவர்களுடைய அன்பை நாம் மறப்பதற்கில்லை. மீண்டும் ஒரு முறை அவரது பாரியார் ஆச்சிக்கு மனத்தைரியத்துடன் அவர் வாழ்க்கைக் குறிக்கோளை நிறைவேற்றுமாறு வேண்டி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுடன் அவர் நினைவாக வாழ வாழ்த்தி இவ் நினைவுரையை முடிக்கின்றேன்.

**– திரு.திருமதி.அ.திகம்பரலிங்கம்** (ஆசிரியர், கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கரிய வல்லவர் எனதருமைத் தம்பி

பண்ணாகத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து அமரத்துவம் அடைந்த என தருமைத் தம்பி அமரர் இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை ஆவார்.

இவர் எமது ஊரில் உள்ள மன்றங்கள், ஆலயம், பாடசாலை ஆகியவற்றின் நிர்வாகத்தில் இருந்து தனது சேவையை திறம்படச் செய்தவர். சிரித்து சிரித்து அன்பாகவும் பாசத்துடனும் எம்மோடு பழகியவர். சிறந்த நாடக நடிகனாக நடித்து அனைவரையும் தன்பால் கவர்ந்தவர். இவரின் குரல் வளத்தால் இவருக்கு கலாபூஷண விருது கிடைத்தது. இது அவருக்கும் எமது கிராமத்திற்கும் கிடைத்த பெரிய கௌரவாமாகும் சுய கௌரவம் மிக்கவர். மனிதர்களை மதிக்கத் தெரிந்தவர். நல்ல ஆளுமை மிக்கவர்.

நல்ல மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்களுடனும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் இவரது இழப்பு குறிப்பாக தாயை சோர்வடையச் செய்துள்ளது. எல்லாவற்றிற் கும் மேலாக விதியின் செயலை யார்தான் மறுப்பர். இவரது ஆத்மா விசவத்தனை வேலவனின் பாதாரவிந்தங்களை சென்றடைய பிரார்த்திப்போமாக.

பண்ணாகம்

**செ.வைத்தியலிங்கம்,**

**ஆயுர்வேத வைத்தியர்,**

**சமாதான நீதவான்**




**இலங்கையின் தலைசிறந்த சத்திரசிகிச்சை நிபுணரும் பண்ணாகத்தைச் சேர்ந்தவருமான மருத்துவர் காந்திஜி அவர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தபோது...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லவன்

1969ம் ஆண்டு நான் சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றினேன். அந்தக் காலத்திலை இருந்து கிருஷ்ணதுரை அவர்கள் என் நண்பர். இலங்கை வானொலியில் பணியாற்றிய தியாகராஜா அவர்கள் ஒரு வானொலி நாடகம் போட்டபோது, கிருஷ்ணதுரை அவர்கள் எழுதிய அந்த வானொலி நாடகத்தில் நானும் பங்குபற்றியிருந்தேன். பின்னர் வழக்கம்பரை சிறீ அம்பாள் நாடகமன்றத்தில் கிருஷ்ணதுரை அவர்கள் என்னை இணைத்துக் கொண்டார். அதன் பின்னர் பல நாடகங்களில் நான் அவருடன் நடித்திருக்கின்றேன். குறிப்பாக 'தந்தைக்காக, வாழ்வதற்கு வழி செய், சரியா தப்பா, அவளா சொன்னாள்?, பண்டராவன்னியன்' போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம்.


அன்று

தனது வாழ்க்கை அனுபவத்திற்கு ஏற்ப நாடகங்களை எழுதி அவர் இயக்கினார். அவை மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. இதில் பல நாடகங்களில் அவருக்குத் துணைவியாக நான் நடித்திருக்கின்றேன். இதில் ஏராளமான அனுபவங்களைப் பெற்றேன்.

நாடகத்தில் நடிக்கும்போது மனைவிக்கு அடிக்கின்ற கட்டம் வரும். நாடகம் பழகும்போது "நான் அடிக்கிற மாதிரி நடிப்பேன். நீ அடிபட்ட மாதிரி நடிக்க வேண்டும்" என்றுதான் கிருஷ்ணதுரை அவர்கள் சொல்லுவார். ஆனால் மேடையில் அவர் ஏறியபின் அந்தக் கதாபாத்திரமாகவே அவர் மாறிவிடுவார். அடிக்கிற மாதிரி எல்லாம் அவர் நடிக்கமாட்டார். நிஜமாகவே அடிதான் விழும். எங்கை விழும் எப்படி விழும் என்று தெரியாதளவிற்கு அவரிடம் அடிவாங்கியிருக்கின்றேன். ஒருமுறை அடித்த அடியில் தலைக்கு வைத்திருந்த கொண்டை பறந்துபோய் மேடைக்கு பின்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே விழுந்துவிட்டது. அந்தக் காட்சியில் நான் நின்று அழவேண்டும். ஆனால் கொண்டை விழுந்த வேகத்தில் நான் உடனே மேடையை விட்டு கீழே இறங்கிவிட்டேன். அந்த நேரம் இன்னொரு நடிகர் என்றால் மேடையைச் சமாளிக்கமாட்டார். ஆனால் கிருஷ்ணதுரை அவர்கள் மேடையைச் சமாளிக்கத் தெரிந்தவர். அவர் உடனே "கோபத்திலை ஓடிப்போயிட்டாள். திரும்பி வரட்டும் அவளுக்கு இருக்கு..." என்று சொல்லி, நான் கொண்டையை தேடியெடுத்து மாட்டிக் கொண்டு வரும் வரைக்கும் சமாளித்துவிட்டார். அதுதான் கிருஷ்ணதுரை.

இன்னொரு முறை அவரது வாழ்வதற்கு வழிசெய் நாடகத்தில் வில்லன் என்னை வன்முறைக்கு உட்படுத்துவதுபோல் காட்சி. கத்தியை வைத்துக் கொண்டு என்னை வெருட்டிக் கொண்டிருந்தவன். நடிப்பு வேகத்தில் உண்மையிலேயே கத்தியால் என் கையில் வெட்டிவிட்டான். உட்சட்டையைக் கிழித்து கையையும் கத்தி கிழித்துவிட்டது. காயம் பலமாக இருந்ததால் அந்த ஆடையுடனேயே மருத்துவமனைக்கு கொண்டுசென்றுவிட்டார்கள். என்னை உண்மையிலேயே ஒரு பெண் என்று அங்குள்ள தாதிகள் நினைத்தது, எங்கள் நடிப்புக் கிடைத்த வெற்றிதான்.


இன்று

அதேபோல் கிருஷ்ணதுரை அவர்களின் புயலுக்குப் பின் என்ற இன்னொரு நாடகத்தில் மனநிலை பாதித்தவனாக நடித்தேன். இரண்டு மணிநேரமாக மனநிலை பாதித்தாகவே நடிப்பதால் அந்தக் கதாபாத்திரமாகவே நான் மாறியிருந்தேன். ஆனால், நாடகம் முடிந்து மேடையைவிட்டு இறங்கிய பின்னரும் அந்த மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் சிரித்தபடியே இருந்த என்னைப் பார்த்து மற்றவர்களும் சிரிக்க, என் நிலைமையை அறிந்து, என்னை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டுசென்று சிகிச்சை அளிக்குமாறு கூறினார் கிருஷ்ணதுரை அவர்கள். மருத்துவமனைக்கு கொண்டுபோய் ஊசி ஒன்றைப் போடுவதற்கு வந்தபோதே அதனைப் பார்த்த பயத்தில் நான் சுயநினைவுக்கு வந்தேன். அதன் பின்னர் காதாபத்திரத்திற்குள் ஆழமாக உள்நுழையாதே, நீ அந்தப் பாத்திரத்திற்குள் கூடக் கவனம் செலுத்துகிறாய் அதனைக் குறை என்று என்னை எச்சரிக்கை செய்தார்.

அவருடன் எத்தனையோ நாடகங்களில் நடித்து எனக்கு புகழும் பெயரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்து சேர்ந்தது. இந்த நாடகங்களின் மூலம் எங்களுக்கு நிறையப் பாராட்டுக்கள் கிடைத்தன. பாராளுமன்ற உறுப்பினர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் (பின்னர் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தவர்) அவர்களின் கைகளினாலும், அவர் மூலமாக ஏனைய பலராலும் பாராட்டப்பட்டு அதற்கான பத்திரங்களையும் பெற்றிருக்கின்றோம். அந்தப் பத்திரங்கள்தான் இந்தப் பிரான்ஸ் மண்ணில் நான் நிரந்தரமாக வாழ்வதற்கு விசாப் பெறுவதற்கு பெரிதும் காரணமாக அமைந்தது.



சங்கானை யூனியனில் பணியாற்றியபோது அவருக்கு கீழே நாங்கள் பலரும் வேலை பார்த்தோம். அவரது ஒழுங்கமைப்புக்கள் அவரது செயல்கள் எங்களைக் கவர்ந்தது. தொழில்நுட்பதில் அவர் ஒரு விற்பன்னராகவே இருந்தார். ஜப்பானில் இருந்து வரும் நெசவு இயந்திரங்கள் அத்தனையையும் அவரே பொருத்தி இயங்கவைக்கும் திறமையைக் கொண்டிருந்தார். விளையாட்டுக்களில் திறம்படச் செயற்பட்டார். கிரிக்கெட், கால்ப்பந்தாட்டம், ஓட்டம் என எல்லாவற்றிலும் அவரே முதன்மை வகித்தார். படங்கள் வரைவதாக இருக்கட்டும், சிற்பங்கள் செதுக்குவதாக இருக்கட்டும் அவருக்கென்றே ஒரு தனித் திறமையைக் கொண்டிருந்தார். உண்மையிலேயே அவர் ஒரு சகலகலாவல்லவன் என்றுதான் நான் சொல்வேன்.



நாடகங்களை அரங்கேறிய நாட்களில் அவர்கூட அவரது வீட்டில் பல நாட்கள் தங்கியிருக்கின்றேன். என் தனிப்பட்ட வாழ்க்கையிலும் அவர் எப்போதும் அக்கறையாக இருந்திருக்கின்றார். அவரது வார்த்தைகள் அர்த்தமுள்ளவையாக, தீர்க்கதரிசனமாக இருந்திருக்கின்றது. என் திருமணத்தின்போது எதற்காக 13ம் திகதியில் திருமணத்தை வைத்திருக்கின்றாய்? இது உனக்கு சரிவராது என்று சொன்னவர். 'எதோ நீ வைத்துவிட்டாய். நிறைய செலவழித்துவிட்டாய், செய். ஆனால், எனக்கு இது நல்லதாகத் தெரியேலை' என்று சொன்னவர்.


அவர் சொன்னதுபோல் என் வாழ்க்கை தொலைந்ததென்பது உண்மை. அவர் சொல்கின்ற வார்த்தைகள் உண்மையாக இருக்கும்.

நடராசா (நடிகன் நடா)

லாகூர்நெவ் பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு இருமை நண்பா...



எங்கள் நட்பு 1964ம் ஆண்டில் இருந்து நீ இறக்கும் வரையும் தொடர்ந்து இருந்தது. உனக்கு ஒரு சிந்தனை தோன்றி நான் இன்னும் வேறு நண்பர்களும் சேர்ந்து அம்பாள் நாடக மன்றம் தொடங்கி பல நாடகங்களை அரங்கேற்றி இருந்தோம். அதில் உன்னோடு சேர்ந்து நடித்ததை என்றும் என்னால் மறக்க முடியாது. நானும் நீயும் சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் விசைதறி ஆலையில் 1970இல் இருந்து 12 வருடங்கள் தொடர்ந்து வேலை செய்ததை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன். அத்துடன் எனது பிள்ளைகளுக்கு பெயர் சூட்டியதை நான் என்றும் மறக்கமாட்டேன். நாங்கள் தொலைபேசியில் கதைக்கும் போதும் நான், நீ, டேய் என்று கதைப்பது கூட எங்கள் அன்பின் வெளிப்பாடுதான். இன்று கூட நீ இறந்ததாக என்னால் நம்ப முடியவில்லை. இப்பவும் நான் உன்னுடன் தொலைபேசியில் கதைக்கவேண்டும் என்ற எண்ணம்தான் என் மனதில் உள்ளது. என் உயிர் உள்ள வரைக்கும் என்னாலும் எனது குடும்பத்தாலும் உன்னை மறக்க முடியாது நண்பா. என்றும் உனது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.


என்றும் உமது பிரிவை நினைத்து வாடும்

**து.தனேசன் குடும்பம்**

டென்மார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பெரும் பாசத்திற்குரிய பெரியப்பா...



வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் ஒவ்வோர் வகையான அரிய மனிதர்களுடன் பழகும் வாய்ப்புக்கள் அமையும்... அவ்வாறே என் வாழ்வில் பெரும் உரிமைக்குரிய, அன்பிற்குரியவராக வந்தமைந்தீர்கள். உண்மையில் இதுவரைக்கும் எனக்கு நீங்கள் என்ன முறையில் பெரியப்பா என்பது கூட சரியாக தெரியாத நான், நெருங்கிய என் உறவுகளைவிட அதிக பாசமும், பரிவுகளும், பகிர்வுகளும் கொண்டு உண்மையான நேசத்திறகுரியவர்களாகி விட்டீர்களே பெரியப்பா!

நாங்கள் 2002இல் நீர்கொழும்பில் இருந்து இங்கு வந்தபோது - எதுவுமே தெரியாது, புரியாத நிலையில் நின்றபோது, எப்போதும் எமக்கு ஆதரவாகவும், அழைத்தவுடன் எமக்காக முதல் வந்து நிற்பீர்களே...

இத்தனை வயதாகியும் எனது சக வயது நண்பரைப் போல ஒரு பண்டிகை, ஒரு பிறந்தநாள் தவறவிடாது முதலில் SMS மூலம் வாழ்த்துத் தெரிவித்துவிட்டு, அதில் நான் பதில் போட்டதை சொல்லி பூரிப்பீர்களே. எப்படி மறப்பேன் பெரியப்பா!

எனக்கு பரீட்சைகளில் நற்பெறுபேறு வந்தபோதும் வேலை கிடைத்த போதும் உண்மையான உள்ளத்துடன் புகழுவீர்கள். என் வாழ்வின் ஒவ்வொரு முக்கியமான தருணத்திலும் அசைக்கமுடியாத அங்கமாக முன்நின்று முழுமூச்சாக எல்லாவற்றையும் முன்னெடுத்தீர்களே! எப்படி என்னால் மறக்க முடியும்...

எவ்வளவோ விடயங்கள் கலை, அரசியல், கல்வி, கலாச்சாரம், நாட்டுநடப்பு என அநேகம் பகிர்ந்து கொண்டீர்கள். எல்லா உங்கள் அலங்காரங்களையும் காட்டி பூரிப்பீர்கள்.

உண்மையில் உங்கள் பிரிவுதான் இதுவரையில் என்னை மிகவும் பாதித்த விடயமாகிவிட்டது. எனக்காக நீங்கள் சொன்ன அறிவுரைகள் பகிர்ந்து கொண்டவை யாவுமே எனக்கான வாழ்நாள் படிப்பினைகள். என்றென்றும் மறக்க நினைத்தாலும் மறக்கப்பட முடியாத எண்ணற்ற நினைவுகளை தந்துவிட்டீர்கள்...

நன்றி பெரியப்பா.


உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

என்றும் அன்பிற்குரிய

லக்ஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறைப் புலமையாளன் கிருஷ்ணதுரை அவர்களின் இழப்பு ஈடுசெய்ய இயலாதது



*வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்*
*வானுறையும் தெய்வத்தினுள் வைக்கப்படும்*

என்ற பொய்யாமொழிப் புலவன் வாக்கிற்கிணங்க வாழ்ந்த பெருந்தகை அமரர் இரத்தினசிங்கம் கிருஷ்ண துரை என்பது மிகப்பெருத்தமான ஒன்றாகவே காணப் படும். எனது நினைவுகட்கு எட்டிய காலப் பகுதியினை மீட்டுப் பார்க்கும்போது, மிக நீண்ட காலம் பழகிய ஓர் உயர்ந்த மனிதராக ஒரு நாடகக் கலைஞனாக நான் அறிந்திருந்தேன். அவரது முகத்தின் புன்னகை என்பது அவரது உள்ளத்தின் களங்கம் அற்ற தன்மைக்கு மிகுந்த ஓர் எடுத்துக்காட்டாகவே இவ் இடத்தில் கூற முடியும். அமரது இல்லத்திற்கு சென்ற வேளையில் எல்லாம் அன்போடும் தமிழ் பண்போடும் வரவேற்கும் அந்த நிலை மிக மிக உயரிய ஒன்றாகும். மிக அண்மையில் அமரது நாடகங்கள் தொடர்பில் பிரதேச சபையில் அழைத்து கௌரவிக்க இருந்த போது அமரர் அவர்கள் சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்ற செய்தி அறிந்து வேதனை அடைந்தேன்.

அமரர் அவர்களது வாழக்கையில் பல துறைகளிலும் பல நிலைகளிலும் பணியாற்றியதற்கு மேலாக பண்ணா கம் கிராமத்தில் இருந்த சகல சமூக மட்ட அமைப்புகளி லும் பல பதவிகளை வகித்து கிராமத்திற்கு பல சேவை களை வழங்கியுள்ளமை யாவரும் அறியக் கூடிய ஒன்றாகும். இன்று அமரர் அவர்கள் எம்மோடு இல்லாத நிலையிலும் அவரால் உருவாக்கப்பட்ட நாடகங்கள் என்றும் அமரர் அவர்களது நீங்காத நினைவுகளை சமூ கத்தில் பறைசாற்றி நிற்கும் என்பது வெளிப்படையான உண்மையாகும். மேலும் முறிவு நெறிவு வைத்தியம் சம்பந்தமாக அவரது பாரியாரின் வைத்தியத் தொழிலுக்கு பக்க துணையாக இருந்தது இப்போதும் என் கண் முன் நிற்கின்றது. இதேவேளை இவ் பல்துறைப் புலமையா ளனின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அம ரது ஆத்மா சாந்தி அடைய விசுவத்தனை முருகப்பெரு மானை வேண்டுகின்றேன்.

**திருமதி. நாகரஞ்சினி ஐங்கரன்,** (R.I.M.P)
**தவிசாளர், வலி மேற்கு பிரதேச சபை.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நேசத்திற்குரிய கவிமன்னன் கிருஷ்ணதுரைத் தாத்தா



என் கண்ணீர்த் துளிகள்
சிந்தனைகளாக மாறி
கவித்துளிகளாக
கடதாசியில் வடிந்தன
பள்ளியிலே போட்டி என்றால்
பல பிள்ளை கூடிவரும்
பேச்சு, கட்டுரை, கவிதை என
போட்டித் தலைப்புடனே
புகுந்திடுவோம்
ஆக்குவாரி தனதறிவால்
அத்தனையும் வெற்றியாகும்
நாமும் வல்லவர் போல் எடுத்து வந்து
வாய்ப்பாடம் செய்து சொல்லிடுவோம் சபையிலே
கைதட்டும், பாராட்டும்
கேடயமும், கன பரிசும்
பெற்று வந்தோம் பேரின்பத்திலே!
நின்றுபோனதா உம் பேச்சு
இத்தனையும் நீறாகிப் போச்சுதையா
என்று வரும் எமக்கு ஆக்கம்
போட்டி ஒன்று வந்தால் யாரிடம் போவதையா..?

உம் ஆத்மா சாந்தியடைய விசவத்தனை
முருகனை பிரார்த்திக்கின்றோம்.



அபிசா
ராதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பப்பா இனி வரமாட்டீயளா..?



அப்பப்பா யாராலும் நம்பமுடியாத ஒரு மிகத் திறமைசாலி. எல்லாத்திலும் அவர் முதலிடத்தில் இருந்தார். அவர் இல்லாத வாழ்க்கை கடினமானது. அவர் பிரான்சுக்கு வந்துபோது சந்தோசமாக இருந்தது. அவர் என்னைக் கட்டிப்பிடித்து தூக்கியபோது எனக்கு இன்னும் சந்தோசமாக இருந்தது. எப்போது அவர் எங்கள் வீட்டிற்கு வந்தாலும் பரிசிலுள்ள முக்கிய இடங்களுக்கு கூட்டிக்கொண்டுபோய் சுற்றிக்காட்டினோம். அப்பப்பா எங்களுக்கு ஒரு பாட்டுப் பாடிக்காட்டினவர். அந்த பாட்டுக்குப் பெயர் 'சின்னப் பாப்பா... எங்கள் செல்லப்பா...' ஓயாமல் நான் அந்தப் பாட்டைப் பாடச்சொல்லி அப்பப்பாவிடம் கேட்பேன். அவரும் ஓயாமல் பாடுவார். எங்களுக்கு அவர் மரத்தினால் ஒரு சிற்பம் செய்து தந்தவர். எனக்கு விவேகா என்று அப்பப்பா தான் பெயர் வைத்தவர். என்ரை அண்ணா விவேகன், தம்பி கார்த்திகனுக்கு மட்டுமல்ல தங்கள் எல்லாருக்கும், ஊரிலை கனபேருக்கு அப்பப்பாதான் பெயர் வைத்தது என்று எங்களுடைய அப்பா சொன்னவர். என்ரை சாமத்தியவீட்டிற்கு வருவேன் என்று சொல்லிப்போட்டுப் போனவர். ஆனால் இப்ப அவர் வரமாட்டார் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை.

**– ஜெய்சந்தர் விவேகா**



தன்னைப்போல் ஒரு
வரைகலைஞனாக
வருவான் கார்த்தி
என்று அடிக்கடி
அப்பப்பா
வாழ்த்துவார்.
அப்பப்பாவின்
படத்தைப் பார்த்து
8 வயதான கார்த்திகன்
வரைந்த ஓவியம் இது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பழமொழிகள்

ஒற்றை வரியில் ஒரு கதையைச் சொல்லிவிடும் தன்மை பழமொழிகளுக்குண்டு. உலகெங்கும் நாடுகளுக்கு நாடு, இனங்களுக்கு இனங்களிடையே வெவ்வேறுபட்ட பல்லாயிரம் பழமொழிகள் பயன்பாட்டில் உள்ளன. அவ்வாறான பழமொழிகளைப் சந்தர்ப்பத்திற்கு ஏற்றதுபோல் பயன்படுத்திக் கொள்வது சிலருக்கு கைவந்த கலை. அடிக்கடி பழமொழிகள் பயன்படுத்திக் கொள்வதில் எங்கள் தந்தையும் திறமைசாலி. 'சாது மிரண்டால் காடு கொள்ளாது', 'மழைக்கால் இருட்டென்றாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது' என்பன அவர் அடிக்கடி பயன்படுத்தும் பழமொழிகள்.

அவரது நினைவாக பழமொழிகளின் தொகுப்பொன்றை இங்கே தருகின்றோம். நீண்ட நாட்கள் தேடிச் சேகரித்த இப்பழமொழிகள் உங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
- அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
- அம்மியும் குழவியும் மோதிக்கொள்ள மிளகாய்க்குத் திண்டாட்டம்.
- அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்.
- அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்.
- அழுதாலும் பிள்ளை அவள்தானே பெறவேண்டும்.
- அழுதழுது பெற்றாலும் அவள்தானே பெற வேண்டும்?
- அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
- அற நனைந்தவனுக்குக் குளிரென்ன கூதலென்ன.
- அறுக்க முடியாதவ இடுப்புல, ஆயிறத்தெட்டு அரிவாள்.
- அடிக்கும் பயந்து குரங்கும் ஆடும்.
- அடுப்பேறிய சட்டிக்கு காய்வதைத் தவிர வேற வழியில்லை.
- அப்பன் புளி தின்றால் பிள்ளைக்கு பல் கூசுமா?
- அடியாத மாடு படியாது.
- அவளுக்கு குடும்பம் நடத்த ஆசை,
  இடுப்பில் குடந்தூக்குவதுதான் பிடிக்கவில்லை.
- அரக்கப்பறக்க சம்பாதிச்சாலும் படுக்கப் பாய் இல்லே.
- அரைப்படி அரிசி அன்னதானம், விடிய விடிய மோள தாளம்.
- அணை கடந்த வெள்ளம் அழுதாலும் நில்லாது.
- அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா.
- அடி மத்தளத்திற்கு, பெயர் வித்துவானுக்கு.
- அழுதுக்கிட்டு இருந்தாலும் உழுதுகிட்டு இருக்கணும்.
- அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
- அகப்பை இருக்க கை வேகலாமா?
- அட்டையைப் பிடித்து கட்டிலில் போட்டால் அது படுக்குமா?
- அத்தி பூத்தாற்போல்
- அரைக்காசுக்கு மொட்டை போட்டாளாம் அடுத்த வீட்டம்மா




பத்து மிளகு இருந்தால்
பகைவன் வீட்டிலும் உண்ணலாம்..

இந்த பழமொழி மிளகின் மகத்துவத்தை உணர்த்துவதற்காக கூறப்பட்ட பழமொழி..

அப்படி என்ன மகத்துவம் இந்த நல்ல மிளகில்...?

உலகின் தலைசிறந்த எதிர் மருந்து (Antidote) தான் இந்த மிளகு. இந்த மிளகு இந்தியாவில் மிக அதிகமாக பயிரிடப்படு கிறது என்று தெரிந்துதான் ஆங்கிலேயர்கள் படையெடுத்து இந்தியாவைப் பிடித்தார்கள்.

மிளகில் உள்ள வேதிப் பொருட்கள் அனைத்தும் நம்மை நோயிலிருந்து காக் கும் வேலையைச் செய்கிறது மேலும் உட லின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அழுகிற பிள்ளைதான் பால் குடிக்கும்
- அகல இருந்தால் நித்தம் உறவு, கிட்ட வந்தால் முட்டப் பகை.
- அகல உழுகிறதை விட ஆழ உழு
- அகல் வட்டம் பகல் மழை
- அசைந்து தின்கிறது யானை, அசையாமல் தின்கிறது வீடு.
- அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்
- அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
- அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
- அடக்கமே பெண்ணுக்கு அழகு
- அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார்.
- அடாது செய்தவன் படாது படுவான்.
- அடி நாக்கிலே நஞ்சும், நுனி நாக்கில் அமுதமும்
- அணில் கொம்பிலும், ஆமை கிணற்றிலும்
- அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வாராது.
- அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு
- அந்தி மழை அழுதாலும் விடாது.
- அப்பன் அருமை மாண்டால் தெரியும்
- அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர்
- அரிசி ஆழாக்கானாலும் அடுப்புக் கட்டி மூன்று வேண்டும்
- அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது
- அளக்கிற நாழி அகவிலை அறியுமா?
- அதிகம் பேசுபவன் அதிகம் பொய் பேசுவான்
- அப்பன் புளி தின்றால் பிள்ளைக்கு பல் கூசுமா?
- அப்பன் வெட்டிய குளம் என்று அதில் விழுந்து சாகலாமா?
- அரச மரத்தைப் பிடித்த சனி பிள்ளையாரையும் பிடித்ததாம்
- அண்ணன் அரசாண்டால் தம்பி சண்டப் பிரசண்டன்!
- அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்
- அறத் தோய்ந்தவனுக்குக் குளிரேது, கூதலேது
- அன்னமிட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா
- அதிஷ்டம் தபாலில் வந்தால், தரித்திரம் தந்தியில் வருகுது
- அக்கரைக்கு இக்கரை பச்சை
- அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
- அரசனை நம்பி புருஷனை கைவிட்டார்
- அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்
- அரண்மனையை பகைத்தாலும் அண்டை வீட்டை பகைக்காதே
- அகப்பையில் குறைந்தால் கொழுப்பும் குறையும்
- அவசரம் ஆபத்தில் முடியும்
- அடிக்கிற கைதான் அணைக்கும்
- அரண்மனையைப் பகைத்தாலும் அண்டைவீட்டை பகைக்காதே

மிளகிற்கு வீக்கத்தைக் குறைக்கும் பண்பும் (Anti-inflamattory) வாதத்தை அடக்கும் பண்பும் (Anti vatha) பசியைத் தூண்டும் பண்பும் (Appetizer), வெப்பத்தைக் குறைக்கும் பண்பும் (Antypyretic), கோழையை அகற்றும் பண்பும் (Expectorant), பூச்சிக்கொல்லியாக செயல்படும் பண்பும் (Anti-helmenthetic) உள்ளது.

நரம்புத்தளர்ச்சி, கை கால் நடுக்கம், உதறல், ஞாபக சக்தி குறைபாடு, முதுமையில் உண்டாகும் மதிமயக்கம், இவற்றிற்கு நல்ல மிளகு சிறந்த மருந்தாகும். வீரியத்தை அதிகரிக்கும் தன்மையும் இதற்குண்டு.

நல்ல மிளகில் பொட்டாசியம், கால்சியம், ஜிங்க், மாங்கனீசு, இரும்புச்சத்து மற்றும் மெக்னீசியம், வைட்டமின் சி, சத்துக்கள் அதிகம் உள்ளது. வைட்டமின் சி சத்து அதிகம் உள்ளதால் ஆண்டி ஆக்ஸிடென்டாக செயல்பட்டு நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கிறது.

நல்ல மிளகில் piperine என்ற ஆல்கலாய்டு இருப்பதால் பசியைத் தூண்டுகிறது. வயிற்றில் சுரக்கும் என்ஸைம்களை தூண்டி சுரக்கச் செய்கிறது. மேலும் உமிழ்நீரை சுரக்கச் செய்கிறது. இதனால் ஜீரணத் தன்மை அதிகரிக்கப்படுகிறது.

உணவு சரியான முறையில் செரிக்கப்பட்டால் தான் வாயுத் தொந்தரவு இருக்காது. மேலும் நச்சுக் கழிவுகள் உடலில் தங்காது. இந்த நச்சுக் கழிவுகளை வெளியேற்றும் தன்மை மிளகில் அதிகம் இருப்பதால்தான் நம் முன்னோர்கள் இந்த பழமொழியை பயன்படுத்தினார்கள்.

இதனாலேயே நம் முன்னோர்கள் வெளியிடங்களில் சாப்பிட்டு வரும்போது பத்து மிளகை வாயில் போட்டு சுவைத்து சாப்பிட்டுவிடுவார்கள். வெளியில் தயாரிக்கப்படும் உணவினால் ஏற்படும் நச்சுத்தன்மை அனைத்தையும் இந்த பத்து மிளகு முறித்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அகப்பையில் குறைந்தால் கொழுப்பும் குறையும்.
- அடிக்கிற கைதான் அணைக்கும்.
- அருகங்கட்டையும் ஆபத்தில் உதவும்.
- அதிர்ஷ்டம் வந்தால் கழுதைகூட ஆகாசத்திலேயே பறக்குமாம்.
- அம்மாவைக் குளிக்குமிடத்தில் பார்த்தால் மகளை வீட்டில் பார்க்கவேண்டியதில்லை.
- அரிசி வாங்கலாமென்று அக்கா வீட்டுக்குப் போனாளாம்.
  அக்காக்காரி ஈச்சம்பாயை இடுப்பிலே சுற்றிக்கிட்டு எதிரே வந்தாளாம்.
- அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால் அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் இலாபம்.
- அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.
- அயலூரானுக்கு ஆற்றோரம் பயம், உள்ளூரானுக்கு மரத்திடியில் பயம்.
- அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன, கழுதை மேய்ந்தாலென்ன?
- அழுகிற ஆணையும், சிரிக்கிற பெண்ணையும் நம்பக்கூடாது.
- அதிஷ்டம் கெட்ட திருடன் திருடப்போனால் நாய் குலைக்கும் அல்லது பொழுது விடியும்
- அம்மாவுக்கு கந்தல்துணி தைக்க நூல் இல்லை. பிள்ளையின் காலில் பளபள செருப்பு.
- அகப்பட்டவனுக்கு அட்டமத்துச் சனி, ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் குரு.
- அடுத்தவன் முத்தைப் பறிக்கப் போய், தனது மண்டைக் கயிறை விட்டானாம்.
- அம்மா அடித்தால் அப்பாவிடம், அப்பா அடித்தால் அம்மாவிடம்.
- அறப்படித்தவன் சந்தைக்குப் போனால் விற்கவும் மாட்டான் வாங்கவும் மாட்டான் .
- அன்னாசி சொன்னதாம் பலாப்பழத்தைப் பார்த்து, இருந்தாலும் நீ ரொம்ப சொரசொரப்பு.
- அறிந்தறிந்து செய்த பாவத்தை அழுதழுது தொலைக்க வேண்டும்.

- ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.
- ஆடையில்லா ஊர்ல கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன்.
- ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.
- ஆபத்திற்கு பாவம் இல்லை.
- ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.
- ஆழமறியாமல் காலை விடாதே.
- ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால்.
- ஆடத் தெரியாதவள் தெரு கோணல் என்றாளாம்.
- ஆடிப் பட்டம் தேடி விதை.
- ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
- ஆட்டைக் கடித்து, மாட்டை கடித்து, மனுசனையா கடிக்கத் தொடங்கி விட்டான்
- ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கக் கூடாதா?
- ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
- ஆறு வயசுல அண்ணன் – தம்பி. பத்து வயசிலே பங்காளி.
- ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்.
- ஆசையிருக்கு தாசில் பண்ண, அம்சம் இருக்கு கழுதை மேய்க்க.
- ஆலையிலா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை.
- ஆண்டியும் ஆண்டியும் கட்டிப்புரண்டால் சாம்பல்தான் ஒட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆடுகிற பல் விழுந்து விடுகிறதே மேல்.
- ஆட்டுக்கு வால் அளந்து வைத்திருக்கிறது.
- ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்.
- ஆற்றில் குளிக்கப் போய் சேற்றை பூசிக் கொண்டான்.
- ஆபத்தில் அறியலாம் அருமை நண்பனை.
- ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாய் இரு.
- ஆசைப்பட்டு மை போட்டக் கொண்டாளாம் கண் குருடாகிப்போனதாம்.
- ஆட்டின் விருப்பத்துக்கு குழம்பு வைக்கமாட்டார்கள் .
- ஆந்தை எறும்பிடம் சொல்லிச்சாம் தள்ளிப்போ சப்பை மூஞ்சி.
- ஆமை நீரில் இருந்தாலும் அதன் கவனம் கரையிலுள்ள தனது முட்டை மீதுதான்.
- ஆண்டியின் சொல் அம்பலம் ஏறாது.
- ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
- ஆலும் வேலும் பல்லுக்குறுதி. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
- ஆலை இல்லாத ஊரிலே இலுப்பைப் பூச்சக்கரை.
- ஆழம் அறியாமல் காலை விடாதே.
- ஆவும் தென்னையும் ஐந்து வருடத்தில் பலம் தரும்.
- ஆளனில்லாத மங்கைக்கு அழகு பாழ்.
- ஆள் கொஞ்சமானாலும் ஆயுதம் மிடுக்கு.
- ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
- ஆறின கஞ்சி பழங் கஞ்சி.
- ஆறு கடக்கிறவரையில் அண்ணன் தம்பி, ஆறு கடந்தால் நீ யார் நான் யார்?
- ஆரால் கேடு, வாயால் கேடு.
- ஆகட்டும் போகட்டும், அவரக்காய் காய்க்கட்டும், தம்பி பிறக்கட்டும், அவனுக்கு கலியாணம் ஆகட்டும் உன்னை கூப்பிடுறன்.
- ஆடும் புலியும் ஒண்ணாப் படுத்தால் ஆட்டுக்குத் தூக்க வராது
- ஆடத் தெரியாதவள் மேடை பிழையென்றாளாம்.
- ஆடிக் காற்றுக்கு அம்மியும் பறக்கும்.
- ஆடுற மாட்டை ஆடிக் கற, பாடுற மாட்டைப் பாடிக் கற.
- ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
- ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் ஒரு சந்திரன் ஆகாது.
- ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை.
- ஆழம் தெரியாமல் காலை விடாதே.
- ஆற்றிலே கரைத்தாலும் அளந்து கரை (அ) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
- ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
- ஆனைக்கும் அடிசறுக்கும்.
- ஆற்றில் வெள்ளம் போனாலும் நாய் நக்கித்தான் குடிக்கும்.
- இளகின இரும்பைக் கண்டால் கொல்லன் ஓங்கி அடிப்பான்.
- இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இடிப்புரை இல்லா ஏமரா மன்னன், கெடுப்பார் இலானும் கெடுவான்
- இருட்டறையில் கறுப்புப் பூனையைத் தேடும் குருடன்
- இரவில் கொசுவின் தொல்லை, பகலில் ஈயின் தொல்லை
- இலந்தை மரத்தை உலுக்கத்தான் செய்வார்கள்.
- இலை திருடினான், கொடி திருடினான், கடைசியில் ராஜாவின் பிள்ளையையும் திருடிவிட்டான்.
- இன்ற தின்றுவிட்டு குதிக்கிறான் பரதேசி, நாளைபாட்டுக்கு கடவுள் இருக்கிறார்?
- இருக்கை தட்டினால்தான் ஓசை வரும்
- இளமையில் குற்றம் கண்ணுக்கு தெரியாது.
- இல்லை என்கிற விட்டில் பல்லி கூட சேராது
- இட்டதெல்லாம் பயிராகுமா.
- இளமையில் முயற்சி முதுமையில் காக்கும்
- இரக்கமற்றவன் இதயம் இரும்பினும் கொடியது.
- இளமையில் கல்.
- இளங்கன்று பயமறியாது.
- இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து.
- இளமையில் கல். முதுமையில் காக்கும்.
- இன்பத்திற்குத் தேன். அன்புக்கு மனைவி.
- இரவல் சேலையை நம்பி இடுப்புக் கந்தையை எறிந்தாளாம்.
- இதயம் ஏற்கிறது, தலை மறுக்கிறது.
- இன்று செய்யும் நன்மை நாளைய இன்பம்.
- இரவில் குறைந்த உணவு நீண்ட வாழ்வு.
- இருட்டுக்குடி வாழ்க்கை திருட்டுக்கு அடையாளம்.
- இறங்கு பொழுதில் மருந்து குடி.
- இந்த உலகில் மூன்று நண்பர்கள் துணிவு, புத்தி, நுண்ணறிவு.
- இறந்த சிங்கத்தைவிட உயிருள்ள சுண்டெலி மேல்.
- இன்று இலை அறுத்தவன் நாளை குலை அறுக்க மாட்டானா?
- இளமையில் நல்லறிவு முதுமையில் ஞானம்.
- இதயம் இருக்கும் இடம்தான் உன் வீடு.
- இன்பம் சிறகடித்துப் பறக்கும் பறவை.
- இலக்கியம் இல்லாத வாழ்வு சாவு.
- இன்பம் – துன்பம் மாறி மாறி வரும்.
- இளமையில் சூதாடிகள், முதுமையில் பிச்சைக்காரர்கள்.
- இளமையில் தெரியாது, முதுமையில் நினைவிருக்காது.
- இரவும் பகலும் யாருக்கும் காத்திராது.
- இடுக்கண் வருங்கால் நகுக.
- இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
- இங்கே தலை காட்டுகிறான், அங்கே வால் காட்டுகிறான்.
- இஞ்சி இலாபம் மஞ்சளில்.
- இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இட்ட உறவு எட்டு நாளைக்கு நக்கின உறவு நாலு நாலைக்கு.
- இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை.
- இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்.
- இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
- இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
- இரண்டு ஓடத்தில் கால் வைக்காதே.
- இரவற் சீலையை நம்பி இடுப்புக் கந்லதயை எறியாதே.
- இராகு திசையில் வாழ்ந்தவனும் இல்லை, இராச திசையில் கெட்டவனுமில்லை
- இராசா மகளானாலும் கொண்டனுக்கு பெண்டுதான்.
- இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இராது.
- இராமனைப்போல் இராசா இருந்தால் அனுமானைப்போல் சேவகனும் இருப்பான்.
- இருவர் நட்பு ஒருவர் பொறை.
- இல்லாது பிறாவது அள்ளாது குறையாது.
- இழவுக்கு வந்தவள் தாலி அறுப்பாளா?
- இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன, கூட வந்த குரங்கு ஆண்டாலென்ன
- இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ்
- இறைக்கிற கிணறுதான் சுரக்கும்
- இருந்து கொடுத்ததை நடந்து வாங்கு
- இரவல் சோறு பஞ்சம் தீர்க்குமா?
- இலவம் காத்த கிளி
- இரும்படிக்கிற இடத்திலை ஈக்கு என்ன வேலை?
- இலவு காத்த கிளி போல.
- இரும்பு பிடித்தவன் கையும், சிரங்கு பிடித்தவன் கையும் சும்மா இருக்காது.
- இல்லாத ஊருக்கு வழிகாட்டியது போல.

- ஈரைப் பேனாக்கி, பேனை பெருமாளாக்கினான்
- ஈனர் சகவாசம் இறுதியில் தெரியும்.
- ஈக்கு விசம் தலையில், தேளுக்கு கொடுக்கில்
- ஈசலுக்கு இறக்கை முளைச்சால் சாவு பக்கத்திலை
- ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை

- உயிர் காப்பான் தோழன்
- உரலில் அகப்பட்டது உலக்கைக்கு தப்புமா?
- உரலுக்கேத்த உலக்கைதான் பலன் தரும்
- உலை வாயை முடினாலும் ஊர் வாயை முட முடியாது
- உரலுக்கை தலையைவிட்டுட்டு உலக்கை இடிக்கு பயப்படலாமா?
- உரலில் அகப்பட்டது உலக்கைக்கு தப்புமா?
- உலக்கை ஊர் சுற்றினால் சுற்றட்டும், கடைசியில் உரலில் வந்து விழுந்தால் போதும்
- உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை
- உண்ணிக்குத் தெரியுமா எருதின் வேதனை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உன்னை நான் இலட்சாதிபதியாக்குகிறேன் என்று கோடீஸ்வரனுக்கு ஆசைகாட்டுவது
- உடம்பெல்லாம் புண், மருந்தை எங்கே தடவுவது?
- உயிரோடிருந்த அப்பனுக்கு சோறும் துணியும் கொடுக்காதவன், இறந்தபின் 16 தானம் செய்தானாம்.
- உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை.
- உடம்பு போனால் போகிறது கை வந்தால் போதும்.
- உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா
- உடையவன் பாரா வேலை ஒரு முழங் கட்டை.
- உடைத்த சங்கு ஊத்துப் பறியுமா?
- உண்ட உடம்பிற்கு உறுதி, உழுத புலத்தில் நெல்லு.
- உட்கார்ந்தால் அல்லவா படுக்க வேண்டும்.
- உண்டு கொழுத்தால் நண்டு வலையில் இராது.
- உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
- உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
- உலோபிக்கு இரட்டை செலவு.
- உழுகிற நாளில் ஊருக்குப் போனால், அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை.
- உழுகிற நாளில் ஊரைவிட்டுப் போய்யிட்டு, அறுக்கிற நாளில் அரிவாள் எடுத்துட்டுப் போனானாம்
- உழுகிற நாளில் ஊருக்கு போனால் அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை
- உளவு இல்லாமல் களவு இல்லை.
- உள்ளது சொல்ல ஊரு மல்ல, நல்லது சொல்ல நாடுமல்ல
- உள்ளது போகாது இல்லது வாராது.
- உள்ளம் தீயெரிய உதடு பழஞ் சொரிய
- உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலைவானேன்
- உறவு போகாமல் கெட்டது, கடன் கேட்காமல் கெட்டது.
- உட்காரும் இடத்தை உழலாமா?
- உயரக் கொம்பில் இருக்கும் பூ கடவுளுக்கு சமர்ப்பணம்
- உதைக்கிற காலுக்கு முத்தம்
- உப்பைத் தின்றவன் தண்ணி குடிப்பான், தப்பை செய்தவன் தண்டனை கொள்வான்.
- உள்ளூர் மேளக்காரனுக்கு உள்ளூரில் மதிப்பில்லை
- உயிரோடு இருக்கும் எலி இறந்துபோன சிங்கத்தை விட பலமானது.
- உடையவன் இல்லையென்றால் ஒரு முழம் கட்டை
- உதியமரம் பெருத்து உத்திரத்திற்கா ஆகப் போகுது?
- உள்ளங்கை நெல்லிக் கனி போல.
- உலை வாயை மூடலாம், ஊர் வாயை மூட முடியுமா?
- உறங்குகிறவனை எழுப்பலாம், உறங்குவது போல் நடிப்பவனை எழுப்ப முடியுமா?
- உழுதவன் கணக்குப் பாத்தா ஒழக்கும் மிஞ்சாது
- உறவு போகாமல் கெட்டது கடன் கேட்காமல் கெட்டது
- உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.
- உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
- உறவு போல் இருந்து குளவி போல் கொட்டுவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது.
- உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
- உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார் ஆவார்.

- ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி
- ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
- ஊரான்வீட்டு பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்
- ஊருக்கு பஞ்சம் போருக்கு தானம்
- ஊரே தன்னுடையதென்று ஊர்க் குருவி சொல்லிச்சாம்
- ஊசி நுழையவில்லை கோடாரியை நுழைக்கிறானாம்
- ஊசி நுழையும் இடம் நூலும் நுழையும்
- ஊரிலே யாரும் மதிப்பதில்லை பெரிய மனிதனாம்
- ஊர் கூடினால்தான் தேர் இழுக்க முடியும்
- ஊரோடு ஒத்து வாழ்.
- ஊர்கூடித்தான் தேர் இழுக்க முடியும்
- ஊசி வாங்கப்போய் மண்வெட்டியைத் தொலைத்தானாம்.
- ஊரார் பண்டம் உமிபோல தன் பண்டம் தங்கம் போல
- ஊசியைக் காந்தம் இழுக்கும் உத்தமனைச் சிநேகம் இழுக்கும்.
- ஊணுக்கு முத்துவான் வேலைக்குப் பிந்துவான்.
- ஊன் அற்றபோது உடலற்றது.
- ஊமையாய் இருந்தால் செவிடும் உண்டு
- ஊர் உண்டு பிச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு.
- ஊர் வாயை மூட உலைமுடி இல்லை.

- எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா?
- எடுக்கிறது பிச்சை ஏறுகிறது பல்லாக்கு.
- எட்டி பழுத்தென்ன, ஈயார் வாழ்ந்தென்ன?
- எண் இல்லாதவர் கண் இல்லாதவர், எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர்.
- எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்.
- எண்ணிச் செய்கிறவன் செட்டி, எண்ணாமல் செய்கிறவன் மட்டி.
- எண்ணிச்செய்வது செட்டு, எண்ணாமல் செய்வது வேளாண்மை.
- எண்ணை முந்துதோ திரி முந்துதோ?
- எதார்த்தவாதி வெகுசன விரோதி.
- எதிர்த்தவன் ஏழை என்றால் கோபம் சண்டாளம்.
- எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்கவேண்டும்.
- எத்தனை புடம் போட்டாலும் இரும்பு பசும்பொன் ஆகுமா?
- எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்.
- எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
- எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.
- எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எருமை வாங்கும் முன்னே நெய் விலை கூறாதே.
- எருது நோய் காக்கைக்கு தெரியுமா?
- எலி அழுதால் பூனை விடுமா?
- எலி இருக்கிற இடத்தில் பாம்பு இருக்கும்.
- எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்
- எலி வளை யானாலும் தனி வலை வேண்டும்.
- எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா?
- எல்லோரும் பல்லக்கு ஏறினால் பல்லக்கைத் துக்குகிறவர் யார்?
- எழுதாக் கடனுக்கு அழுதால் தீருமா?
- எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கொடுத்தான்
- எழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்.
- எழுத்தறச் சொன்னாலும் பெண் புத்தி பின் புத்தி.
- எளியவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி.
- எளியாரை வலியார் அடித்தால் வலியாரை தெய்வம் அடிக்கும்
- எள்ளு என்கிறதற்கு முன்னே எண்ணெய் கொண்டு வருகிறான்.
- எள்ளுக்கு ஏழு உழவு, கொள்ளுக்கு ஓர் உழவு.
- எறும்புந் தன் கையால் எண் சாண்
- எலியைக் கொல்ல வீட்டைக் கொழுத்தினானம்
- எல்லோரும் உபவாசம் இருந்தால் நெய்வேத்தியத்தை சாப்பிடுவது யார்?
- எருமை மாட்டின் முதுகில் விழுந்த மழைத்துளிபோல்
- எறும்பூரக் கற் குழியும்
- எலிக்கு குரான் என்ன, புராணம் என்ன?
- எல்லாப் பறவையும்தான் மீன் தின்னும். மீன் கொத்திக்கு மட்டும் கெட்ட பெயர்.
- எலி முயல்வேசம் போட்டாலும் வால் காட்டிக் குடுத்திடுது
- எச்சில் கையால் காக்கா விரட்டாதவன்.
- எட்டாக் கனி புளிக்கும்.
- எரிகிற கொள்ளியில் எண்ணெயை ஊற்றினால் போல
- எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம்.
- எறும்பூரக் கல்லும் தேயும்.
- எண்ணெயை தடவிகிட்டு குப்பர விழுந்து புரண்டாலும் ஒட்டற மண்தான் ஒட்டும்.
- எறும்புக்கு பனித்துளியே வெள்ளமாகும்

- ஏறச் சொன்னால் எருது கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக்கு கோபம்.
- ஏழைகள் உணவைத் தேடுகிறார்கள். பணக்காரர்கள் பசியைத் தேடுகிறார்கள்.
- ஏழு கடல் கடந்து வந்து அப்பன் வீட்டுக் குளத்தில் மூழ்கிச் செத்தானாம்.
- ஏழுபேர் மருத்துவச்சி, பிள்ளை பிழைக்கவில்லை.
- ஏற்கனவே பாம்பு, சாம்பிறாணிப் புகை வேறை
- ஏரி உடைவதற்கு முன் அணை போட வேண்டும்
- ஏதென்று கேட்பாருமில்லை எடுத்துப் பிடிப்பாருமில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏரி நிறைந்தால் கரை கசியும்.
- ஏர் இழுக்கிறவன் இளப்பமானால், எருது மச்சான் முறை கொண்டாடும்.
- ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்கியம்.
- ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல், செய்கிறவனுக்குத் தலைச்சுமை
- ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.
- ஏழை என்றால் எவர்க்கும் எளிது
- ஏழைபேச்சு அம்பலம் ஏறாது
- எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு உண்டு.
- ஐயர் வருகிற அமாவாசை நிற்குமா?
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
- ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
- ஒற்றுமை பற்றி காகங்கள் பேசலாம், ஓநாய்கள் பேசலாமா?
- ஓட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டை தாழ்ப்பாள்.
- ஒரு காசு பேணின் இரு காசு தேறும்
- ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை
- ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா?
- ஒரு கை (அல்லது வெறுங்கை) முழம் போடுமா?
- ஒரு நன்றி செய்தவரை உள்ள அளவும் நினை
- ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைக்கவா?
- ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
- ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்
- ஒருமைப் பாடில்லாத குடி ஒருமிக்கக் கெடும்.
- ஒருவர் அறிந்தால் இரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம்.
- ஒருவனாய் பிறந்தால் தனிமை, இருவராய்ப் பிறந்தால் பகைமை.
- ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று.
- ஒளிக்கப் போயும் தலையாரி வீட்டிலா!
- ஒருமுறை தீச் சூடுபட்ட மாடு சிவப்பு மேகத்தைக் கண்டாலும் நடுங்கும்
- ஒருவன் திருடிவிட்டுத் தப்புவான், பார்க்கப்போனவன் பிடிபட்டான்
- ஒய்யாரக் கொண்டையாம், தாளம்பூவாம் உள்ளை இருக்குமாம் ஈரும் பேனும்
- ஒரு ஊருக்கு ஒரு வழி மட்டும்தானா இருக்கும்?
- ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
- ஒரு கை தட்டி ஓசை வருமா?
- ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி.
- ஓணான் ஓட்டம் எவ்வளவு தூரம்
- ஓடாத மானும் போராடாத இனமும் உயிர் வாழமுடியாது
- ஓநாய் செத்து தண்ணீரிலை மிதந்தாலும், காகம் சொல்லும் இது என்ன கபடமோ.
- ஓதிய மரம் தூணாமோ, ஓட்டாங் கிளிஞ்சல் காசாமோ?
- ஓசை பெறும் வெண்கலம் ஓசை பெறா மட்கலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இலேசு.
- ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி.
- ஓர் ஊருக்கு ஒரு வழியா? ஒன்பது வழி.
- ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் குரு, அகப்பட்டவனுக்கு அட்டமத்திலே சனி.
- ஓடும் புளியம்பழமும் போல் ஒட்டாமல் இருக்கும்.

- கஞ்சி குடிக்க வழியில்லை, குல்லாவில் சரிகைவேலை
- கடன்பட்டது பட்டாயிற்று, நெய்யும் கொஞ்சம் வாங்கிவிடு
- கடுகுக்குள்ளேயே பேய் இருந்தால் மந்திரவாதி என்ன செய்வான்?
- கட்கத்தில் கத்தி, வாயில் ராம நாமம்.
- கத்தி இல்லை கேடயம் இல்லை தளபதியாம்
- கத்தியை கூர் பார்க்க சரிகைத் துணியைக் கிழித்தானாம்
- கரியைக் கழுவினாலும் வெழுக்காது, இயற்கையின் குணம் மாறாது.
- கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா?
- கடலுக்குக் கரை போடுவார் உண்டா?
- கடலைத் தாண்ட ஆசையுண்டு கால்வாயைத் தாண்டக் கால் இல்லை.
- கடல் கொதித்தால் விளாவ நீர் ஏது?
- கடல் திடலாகும், திடல் கடலாகும்.
- கடல் மீனுக்கு நீந்தப் பழக்க வேண்டுமா?
- கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
- கடன் இல்லா கஞ்சி கால் வயிறு.
- கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் சந்நியாசி.
- கடித்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்மை.
- கடுகத்தனை நெருப்பானாலும் போரைக் கொளுத்திவிடும்.
- கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?
- கடுகு போன இடம் ஆராய்வார், பூசணிக்காய் போன இடம் தெரியாது.
- கடுங்காற்று மழை கூட்டும் கடுஞ் சிநேகம் பகை கூட்டும்.
- கடுஞ் சொல் தயவைக் கெடுக்கும்.
- கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறது.
- கட்டக் கரிய இல்லாமற் போனாலும் பேர் பொன்னம்மாள்.
- கட்டிக்கொடுத்த சோறும் கற்றுக்கொடுத்த சொல்லும் எத்தனை நாள் நிற்கும்.
- கட்டினவனுக்கு ஒரு வீடானால் கட்டாதவனுக்கு பல வீடு.
- கட்டின வீட்டுக்கு எட்டு வக்கனை.
- கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தான் அறியான்.
- கணக்கன் கணக்கைத் தின்னாவிடில், கணக்கனை கணக்கு தின்று விடும்.
- கணக்கைப் பார்த்தால் பிணக்கு வரும்.
- கண் கண்டது கை செய்யும்.
- கண் குருடு ஆனாலும் நித்திரையில் குறையுமா?
- கண்டதே காட்சி கொண்டதே கோலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விக்டோரியாக் கல்லூரியில் படித்த காலத்தில் கிரிக்கெட் போட்டிகளுக்காக தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு எம் தந்தை பலமுறை சென்று வந்திருக்கின்றார். கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய அந்த மகாஜனாக் கல்லூரி அவருக்கு மிகவும் பிடித்துப்போயிருந்தது. ஆனால் மகாஜனாக் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு எம் தந்தைக்கு கிடைக்கவில்லை. திருமணமாகி குழந்தைகள் பிறந்ததன் பின்னர், தன் பிள்ளைகளை என்றாலும் அப்பாடசாலையில் படிக்க வைக்கவேண்டும் என்று விரும்பினார். எல்லாப் பாடசாலைகளையும் போல மகாஜனாக் கல்லூரியில் அத்தனை இலகுவில் சேர்ந்துவிட முடியாது. மகாஜனாக் கல்லூரி நடத்தும் பரீட்சையில் தோற்றி, வெற்றி பெறுபவர்களே அங்கு புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். எத்தனையோ மைல் கடந்து சென்று படிக்கவேண்டிய நிலையிலும் தனது மூத்த இரண்டு பிள்ளைகளையும் அக் கல்லூரியில் சேர்த்து கல்விகற்க வைத்து மகிழ்வடைந்தார். காலமாற்றத்தில் அதே மகாஜனாக் கல்லூரியில் தன் பிள்ளையொன்றே ஆசிரியராகியது அவருக்கு இன்னும் மகிழ்ச்சியையும், பெருமையையும் சேர்த்திருக்கும். இப்போது அந்த மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்களே எம் தந்தைக்கு அஞ்சலி செலுத்தி அவரை மேலும் பெருமைப்படுத்தியிருக்கின்றார்கள் என்றே கருதுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கண்டது சொன்னால் கொண்டிடும் பகை.
- கண்டால் ஒரு பேச்சு, காணாவிட்டால் ஒரு பேச்சு.
- கண்ணிலே குத்தின விரலைக் கண்டிப்பார் உண்டோ?
- கண்ணிற் பட்டால் கரிக்குமா, புருவத்திற் பட்டால் கரிக்குமா?
- கண்ணிற் புண் வந்தால் கண்ணாடி பார்த்தல் ஆகாது.
- கதிரவன் சிலரை காயேன் என்குமோ?
- கப்பல் ஏறிப் பட்ட கடன் கொட்டை நூற்றா விடியும்.
- கப்பற்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி, கப்பல் உடைந்தால் பிச்சைக்காரி
- கப்பற்காரன் வாழ்வு காற்று அடித்தால் போச்சு.
- கரணம் தப்பினால் மரணம்.
- கரிவிற்ற பணம் கறுப்பாய் இருக்குமா?
- கருமத்தை முடிக்கிறவன் கட்டத்தைப் பாரான்.
- கரும்பு கசக்கிறது வாய்க் குற்றம்
- கரும்பு விரும்ப அது வேம்பாயிற்று.
- கரும்பு ருசி என்று வேரோடு பிடுங்கலாம்?
- கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்
- கல்லடிச் சித்தன் போனவழி, காடுமேடெல்லாம் தவிடுபொடி.
- கல்லாதவரே கண்ணில்லாதவர்.
- கல்லாதார் செல்வத்திலும் கற்றார் வறுமை நலம்.
- கல்வி அழகே அழகு.
- கல்வி இல்லாச் செல்வம் கற்பில்லா அழகு.
- கல்விக்கு இருவர், களவுக் கொருவர்.
- கவலை உடையோர்க்குக் கண்ணுறக்கம் வராது.
- களை பிடுங்காப் பயிர் காற்பயிர்.
- கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதைவிடக் கற்பூரம் விற்றுக் காற்பணம் சம்பாதிப்பது மேல்.
- கள்ள மனம் துள்ளும்.
- கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்று கூடினால் விடியு மட்டும் திருடலாம்.
- கள்ளிக்கு முள்வேலி இடுவானேன்!
- கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்லுவான்.
- கறையான் புற்று பாம்புக்கு உதவுகிறது.
- கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு.
- கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு.
- கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா?
- கனிந்த பழம் தானே விழும்.
- கற்கையில் கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு.
- கற்பில்லாத அழகு, வாசனை இல்லாத பூ.
- கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
- கண்களை விற்றுச் சித்திரம் வாங்குதல் போல்.
- கணக்கறிந்த பிள்ளையிருந்தால் வீட்டில் வழக்குக்குக் குறைவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
22
09
1944



மறைவு
08
04
2015

## எமது நண்பரும் யா/மகாஜனக் கல்லூரி ஆசிரியருமான திரு கி. ஜெய்ரமணன் அவர்களின் அன்புத் தந்தையார்

"கலைவாரிதி", "கலாபூஷணம்"

# அமரர். திரு. இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர், சங்கானை ப. நோ. கூ. சங்க மின்தறியாலை)

வேரோடி விழுதுவிட்ட விருட்சமாகி
கலையுலகின் நவரசநாயகன் என்று
பார்போற்ற, பல நாடுகள் சென்று நேசக்
கரங்களினை நீட்டிய உத்தமர்
ஊரார்க்காய் உழைக்கத் தந்த உத்தமர்கள்
நீறாகிப் போனாலும் நின்று மணங்கமழ்வார்.
ஆறாத் துயருறினும் அன்புறவால் ஏங்கிடுறோம்
மாறாத பெருஞ்சுமையிது மறப்பதற்கோ நியாயமில்லை
பெற்றெடுத்த மக்களொடு பேணிய நற்சுற்றமது
விட்டுப் போய் விண்ணுலகில் விருப்பிலுறைவேற்படைவார்.

அன்னார் இன்று எம் மத்தியில் இல்லையென்னும் போது மிகுந்த வேதனையடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர் ஆத்மா எல்லாம்வல்ல இறைவன் திருப்பாதங்களைச் சென்றடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
**ஆசிரிய நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
- கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?
- கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்.
- கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பது போல.
- கழுதை அறியுமா கற்பூர வாசனை?
- கண் கெட்டபின் சூரிய நமஸ்காரமா?
- கடல் வற்றினால் கருவாடு தின்னலாம் எண்டு உடல் வத்தி செத்திச்சாம் கொக்கு.
- கல்யாணவீட்டு வேலை, சும்மா சுற்றித் திரிந்தாலே நல்ல பெயர்
- கழுத்தில் காயம்பட்டவன் பிழைத்து விடுவேன் என்கிறான். காலில் காயம் பட்டவன் சாகப் போகிறேன் என்கிறான்
- கழுதைக்கு வாழ்க்கைப்பட்டால் உதைக்கு அஞ்சலாமா?
- கட்டுச் சோற்றில் எலியை வைத்துக் கட்டினதுபோல.
- கரும்பு தின்னவனுக்கு கரும்பு ருசி, வேம்பு தின்னவனுக்கு வேம்பு ருசி.
- கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தானாம்.
- கந்தை கட்டி கடன் கொடுக்கலாம். பட்டுக் கட்டித்தான் வசூலிக்க முடியும்.
- கன எலி கூடினால் மண்ணெடுக்காது
- கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல் எறியாதே.
- கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் மரம் ஏறிக் கைவிட்டவனும் ஒண்ணு
- கலைமான்களால் ஆமைகளுக்கு வேகத்தை கற்றுக் கொடுக்க முடியாது
- கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய்.
- காலம் பொன் போன்றது.
- காலத்தே பயிர் செய்
- காடு விளைந்தால் கேடு இல்லை.
- காலம் பொன் போன்றது.
- காலைச் சுத்தின பாம்பு கடிக்காமல் விடாது.
- காகம் எல்லா இறைச்சியையும் தின்னும், காகத்தின்ரை இறைச்சியை யாரும் உண்ணார்.
- கால் இடறினால் யானையும் கீழை விழும்
- காகக் கூட்டிலை இருந்து குயில் வரும், பாம்புப் புத்திலை இருந்து பசு வருமா?
- காலைச்சுத்தின பாம்பு கடிக்காமல் விடாது
- காய்த்த மரம்தான் கல்லடிபடும்.
- காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
- காக்காய் பிடித்தாவது காரியம் சாதித்துக்கொள்
- காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போல்.
- காகம் திட்டி மாடு சாகாது.
- காய்த்த மரம்தான் கல்லடிபடும்.
- காவோலை விழக் குருத்தோலை சிரிப்பது போல்.
- காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
- காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும் காற்றைப் போலப் பறக்கவும் வேண்டும்.
- காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா கலை மன்றத்தின்

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
22 - 09 - 1944

மறைவு
08 - 04 - 2015



கலாபூஷணம்

## இரத்தினசிங்கம் கிருஸ்ணதுரை

அவர்கள்

அமரர் இ. கிருஸ்ணதுரை அவர்கள் ஒரு தலைசிறந்த கலைஞர் ஆவார். இவர் "கண்ணன்" என்ற புனை பெயரில் பல நாடகங்கள் எழுதினார். அந்தவகையில் "அபராதவர்கள் யார்" என்னும் நாடகத்தை இயற்றி பல மேடைகளில் அரங்கேற்றி எமது விசுவத்தனை முருகன் ஆலயக் கேணியை திருத்துவதற்காக நிதி அன்பளிப்பு செய்து திருத்தியமைக்கப்பட்டது. அத்தோடு வழக்கம்பரை அம்பாள் நாடக மன்றம் ஒன்றினை இளைஞர்களுடன் சேர்ந்து ஆரம்பித்து "அரிச்சந்திரா", "பக்த நந்தனார்" போன்ற நாடகங்களையும் புராண நாடகங்களையும், சமூக நாடகங்களையும் தனது நடிப்பு ஆற்றலால் பல மேடைகள் ஏற்றி யுள்ளார். இதனால் இவரின் இசைத்துறைக்கு "கலாபூஷணம்" என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அமரர் அவர்கள் எமது ஊரிலுள்ள பொது அமைப்புக்கள் எல்லாவற்றிலும் நிர்வாகத்தில் அங்கம் வகித்ததோடு 1994ஆம் ஆண்டு எமது மன்றம் நடாத்திய வெள்ளி விழாவிலே எமது மன்றத்தினருடன் சேர்ந்து "இதுதான் முடிவா" எனும் சமூக நாடகத்தை எழுதி அரங்கேற்றினார். அவ்விழாவினிலே அமரர் அவர்களுக்கு இசைத்துறைக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது குல தெய்வம் விசுவத்தனை முருகனை வேண்டி அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அண்ணா கலை மன்ற நிர்வாகத்தினர்
பண்ணாகம், சுழிபுரம்.

08.04.2015

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- காட்டுக்கு எறித்த நிலாவும் கானலுக்குப் பெய்த மழையும்.
- காட்டு வாழை வந்தால் வீட்டு வாழ்வு போகும்.
- காட்டை வெட்டிச் சாய்த்தவனுக்குக் கம்பு பிடுங்கப் பயமா?
- காண ஒரு தரம் கும்பிட ஒரு தரமா?
- காணி ஆசை கோடி கேடு.
- காணிக்குச் சோம்பல் கோடிக்கு வருத்தம்
- காற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே.
- காப்பு சொல்லும் கை மெலிவை.
- காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்.
- காய்த்த மரம் கல் அடிபடும்.
- காய்ந்தும் கெடுத்தது பெய்தும் கெடுத்தது.
- காரியமாகும் வரையில் கழுதையையும் காலைப்பிடி.
- காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ?
- கார்த்திகை பின் மழையும் இல்லை, கர்ணனுக்குப்பின் கொடையும் இல்லை
- காலம் செய்கிறது ஞாலம் செய்யாது.
- காலம் போம் வார்த்தை நிற்கும், கப்பல் போம் துறை நிற்கும்
- காலுக்குதக்க செருப்பும், கூலிக்குத் தக்க உழைப்பும்.
- காலளவே ஆகுமாம் கப்பலின் ஓட்டம், நூலளவே ஆகுமாம் நுண்சீலை.
- காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்
- காற்றில்லாமல் தூசி பறக்குமா?
- காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்.
- காற்றுக்கு எதிர்லே துப்பினால் முகத்தில் விழும்.

- கிணற்றுக்குத் தப்பித் தீயிலே பாய்ந்தான்.
- கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?
- கிட்டாதாயின் வெட்டென மற.
- கிளி மாதிரி பொண்டாட்டி இருந்தாலும் கொரங்கு மாதிரி ஒரு வைப்பாட்டி இவனுக்கு.

- கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை.
- கீறி ஆற்றினால் புண் ஆறும்.

- குடத்துக் வெளியே ஊற்றின தண்ணீர்
- குருடனுக்கு குருடன் வழி காட்டின மாதிரி
- குளத்தில் தொலைத்து ஆற்றில் தேடினால்
- குங்குமம் சுமந்த கழுதை மணம் அறியுமா?
- குசவனுக்கு ஆறுமாதம் தடிகாரனுக்கு அரை நாழிகை.
- குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்.
- குடி, சூது, விபச்சாரம் குடியைக் கெடுக்கும்.
- குடி வைத்த வீட்டிலே கொள்ளி வைக்கலாமா?
- குடும்பத்தில் இளையவனும் கூத்தாடியில் கோமாளியும் ஆகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
22
09
1944



உதிர்வு
08
04
2015

## அமரர். இ.கிருஷ்ணதுரை

(கலாபூஷணம்)

**பண்ணாகத்தின் அண்ணாவியம் சாய்ந்ததேனோ?**

நாடறிந்த கலைஞனே – இசை
நாடகத்தின் நாயகனே
பொதுப்பணி பல நீர் செய்து
பார் போற்ற வாழ்ந்தீரே
உம் சிம்மக் குரலால் ஊரில் உள்ள
உறவுகளை ஈர்த்தவனே
விசவத்தனையில் திருப்பள்ளி எழுச்சியோடு
விடியும்வரை எட்டாம் திருவிழாவில் கூத்து வைத்தீர்
"அழாதவர்கள் யார்?" எனும் உம் பாடலினால் அன்று
அனைவரையும் அழவைத்தீரே
இன்று எம் அனைவரையும் நிரந்தரமாய் அழவைத்து
இறைவனடி சென்றதேனோ?

**உம் ஆத்மா சாந்தியடைய விசவத்தனை வேலவனை வேண்டுகின்றோம்.**

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

உம் பிரிவால் துயருறும்
பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்
பண்ணாகம்

09.04.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குட்டுப் பட்டாலும் மோதுகிற கையால் குட்டுப்படவேண்டும்.
- குணத்தை மாற்றக் குருவில்லை.
- குணம் இல்லா வித்தை எல்லாம் அவித்தை.
- குணம் பெரிதேயன்றிக் குலம் பெரியதன்று.
- குதிரை இருப்பு அறியும், கொண்ட பெண்டாட்டி குணம் அறிவாள்.
- குதிரை ஏறாமல் கெட்டது, கடன் கேளாமல் கெட்டது.
- குதிரை குணமறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொடுக்கவில்லை.
- குதிரை குப்புறவும் தள்ளி குழியும் பறிச்சுதாம்!
- குதிரைப் பந்தயத்தில் கழுதையை ஓடவிட்டு ஜெயிக்கும் முயற்சி
- குதிரையை ஆற்றுக்கு இட்டுச் செல்லலாம். ஆனால் தண்ணீர் குடிக்க வைக்க முடியாது.
- குந்தி இருந்து தின்றால் குன்றும் மாளும்.
- குப்பை உயரும் கோபுரம் தாழும்.
- குருட்டுக் கண்ணுக்குக் குறுணி மையிட்டுமென்ன?
- குரு மொழி மறந்தோன் திருவழிந்து அழிவான்.
- குரைக்கிற நாய் வேட்டை பிடிக்குமா?
- குலம் குப்பையிலே, பணம் பந்தியிலே
- குலவித்தை கற்றுப் பாதி கல்லாமற் பாதி.
- குல வழக்கம் இடை வழக்கும் கொஞ்சத்தில் தீராது.
- குறைகுடம் தளும்பும், நிறைகுடம் தளும்பாது.
- குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்றும், குறும்பியுள்ள காது தினவு கொள்ளும்
- குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
- குழந்தையும் தெய்வமும் கொண்டாடின இடத்திலே.
- குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி நிறம் போகுமா?
- கும்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்கு.
- குரங்கின் கைப் பூமாலை.
- குரங்குக்குப் புத்திசொல்லித் தூக்கணாங்குருவி கூண்டு இழந்தது.
- குடிகாரன் பேச்சு விடிஞ்சாலே போச்சு.
- குண்டுச் சட்டியில் குதிரை ஓடுவது போல்.
- குரங்குப் புண்ணுக்கு அருமை காட்டினால் கொப்பிலே கொப்பிலே தாவுமாம்.
- குரைக்கிற நாய் கடிக்காது.
- குளத்தையும் வெட்டி தவளையையும் கொண்டந்துவிட்டு
- குளம் வத்தும் வத்தும் எண்டு உடல்வத்தி செத்திச்சாம் கொக்கு.
- குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய கதையாக
- குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு.
- குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படணும்.
- குடத்தில் இட்ட விளக்குப் போல.
- குன்றில் இட்ட விளக்குப் போல.
- குரங்கிற்கு முடிவு காலம் வந்துவிட்டால் அது பாயும் கொப்பு எல்லாம் வழுக்கும்
- குலைக்கிற நாய் கடிக்காது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கத்தின்

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
22
09
1944



மறைவு
08
04
2015

"கலைவாரிதி", "கலாபூஷணம்"

## அமரர். திரு. இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர், சங்கானை ப. நோ. கூ. சங்க மின்குதியாலை)

எமது சங்கத்தின் நீண்டநாள் உறுப்பினரும் பொதுச் சேவையாளருமாகிய அமரர் இ. கிருஷ்ணதுரை அவர்கள் (அங். இல. 243) சங்கத்தின் பல நிர்வாக சபைகளில் அங்கம் வகித்து பொதுச் சேவையில் ஈடுபட்டார்.

அன்னார் பொதுச் சேவையுடன் இல்லாமல் கலை வாழ்வில் தமக்கு ஒரு தனி இடத்தை வகித்தார். அதில் நடிப்புத்துறை மட்டும் அல்லாமல் தம்மை ஒரு கதாசிரியராகவும் ஆக்கி பல சமூக நாடகங்களின் ஊடாக மக்கள் மனங்களில் தனது திறமையை பதிய வைத்தார். இவருடைய ஆற்றலை கண்டு இலங்கை அரசாங்கம் கலாபூஷணம் என்ற விருதை வழங்கி கௌரவித்தமை சாலச்சிறந்தது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, மக்கள், உற்றார் ,உறவினர்கள், நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இங்ஙனம்
பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குருவி தலையில் பனங்காய்
- குப்பையில் கிடந்தாலும் குன்றுமணி குன்றுமணிதான்.
- குப்பையிலே கிடந்தாலும் குண்டு மணி நிறம் மாறாது.
- குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை

- கூழானாலும் குளித்துக் குடி.
- கூத்தாடி கிழக்கே பார்பான், கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்.
- கூட்டத்திலே கோவிந்தா போடுவதா?
- கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
- கூட்டுற வெலக்குமாத்துக்குக் குஞ்சரம்னு பேராம்
- கூரைமேலே சோறு போட்டால் ஆயிரம் காகம்.
- கூலியைக் குறைக்காதே வேலையைக் கெடுக்காதே?
- கூழுக்கு மாங்காய் கொண்டாட்டம், குரங்குத் தேங்காய் கொண்டாட்டம்.
- கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை.

- கெடுக்கினும் கல்வி கேடுபடாது
- கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது
- கெடுவான் கேடு நினைப்பான்
- கெட்டாலும் செட்டியே, கிழிந்தாலும் பட்டு பட்டே.
- கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்.
- கெட்டும் பட்டணம் சேர்
- கெண்டையைப் போட்டு வராலை இழு.
- கெரடி கற்றவன் இடறி விழுந்தால் அதுவும் ஒரு வித்தை என்பான்.
- கெலிப்பும் தோற்பும் ஒருவர் பங்கல்ல.
- கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு.
- கெடுவான் கேடு நினைப்பான்.
- கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்
- கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு.
- கெஞ்சினால் மிஞ்சுவார், மிஞ்சினால் கெஞ்சுவார்

- கேட்கிறவன் கேனையனா இருந்தா கேப்பையில் நெய் வடியுதும்பாங்களாம்!
- கேடு வரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே
- கேட்டதெல்லாம் நம்பாதே, நம்பினதெல்லாம் சொல்லாதே.
- கேளும் கிளையுங் கெட்டோர்க்கு இல்லை.
- கேள்விப் பேச்சில் பாதிதான் நிசம்.

- கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.
- கைக்கோளனுக்குக் காற்புண்ணும் நாய்க்குத் தலைப்புண்ணும் ஆறா
- கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?
- கைப்புண்ணுக்கு கண்ணாடி எதுக்கு?
- கைப்பொருளற்றால் கட்டினவளும் பாராள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தின்

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
22
09
1944



மறைவு
08
04
2015

"கலைவாரிதி", "கலாபூஷணம்"

## அமரர். திரு. இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர், சங்கானை ப.நோ.கூ. சங்க மின்தறியாலை?)

எமது மன்றத்தின் உறுப்பினரும் சமூக சேவையாளருமாகிய அமரர் இ. கிருஷ்ணதுரை அவர்கள் எமது ஊரில் உள்ள பொது அமைப்புகள் பலவற்றில் அங்கம் வகித்துள்ளார்.

அன்னார் பொதுச் சேவையுடன் இல்லாமல் எமது மன்றத்துடன் இணைந்து பல நாடகங்களை மேடையேற்றி நடித்துள்ளார். கலை வாழ்வில் தமக்கு ஒரு தனி இடத்தை வகித்தார். அதுமட்டும் அல்லாது நகைச்சுவை கலந்த பேச்சால் மக்கள் மனங்களில் தனி இடம் பிடித்தார். இவருடைய ஆற்றலை கண்டு இலங்கை அரசாங்கம் கலாபூஷணம் என்ற விருதை வழங்கி கௌரவித்தமை சாலச்சிறந்தது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, மக்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

விசுவத்தனை முருகன் வீதி,
பண்ணாகம்.
09-04-2015

இங்ஙனம்
பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கையாளாத ஆயுதம் துருப்பிடிக்கும்
- கையிலே காசு வாயிலே தோசை
- கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம் பேர்.
- கையூன்றிக் கரணம் போடவேண்டும்.
- கையில் பிடிப்பது துளசி மாலை, கக்கத்தில் இடுக்குவது கன்னக்கோலம்
- கையைப்பிடித்து துக்கிவிடு பிணக்காடாக்கி காட்டுறன்
- கொலைக்கு அஞ்சாதவன் பழிக்கு அஞ்சுவானா?
- கொலைக்கு அஞ்சாதவன் பழிக்கு அஞ்சான்.
- கொழுக்கட்டை செய்ய எல்லாம் தயார், வெல்லமும் மாவுந்தான் இல்லை.
- கொசுவைக் கொல்லப் பீரங்கி எதற்கு?
- கொள்ளாதவன் வாயில் கொழுக்கட்டையைத் திணித்தானாம்.
- கொள்ளிக் கட்டையை எடுத்து தலையைச் சொறிஞ்சானாம்.
- கொடுத்துக் கொடுத்து கோடி வாங்கலாம்.
- கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்து கொக்கைப் பிடிப்பதுபோல
- கொல்லன் தெருவில் ஊசி விற்பதுபோல்.
- கொடிக்கு காய் கனமா?
- கொடுக்கிறவனைக் கண்டால் வாங்குகிறவனுக்கு இளக்காரம்.
- கொடுங்கோல் அரசு நெடுங்காலம் நில்லாது.
- கொடுத்தைக் கேட்டால் அடுத்த தாம் பகை.
- கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சியா?
- கொண்டானும் கொடுத்தானும் ஒன்று, கலியாணத்தைக் கூட்டி வைத்தவன் வேறு.
- கொல்லன் தெருவில் ஊசி விலைபோமா?
- கொல்லைக் காட்டு நரி சலசலப்புக் அஞ்சுமா?
- கொள்ளிக்கு எதிர்போனாலும், வெள்ளிக்கு எதிர்போகலாது.
- கொற்றவன் தன்னிலும் கற்றவன் மிக்கோன்.
- கொலையும் செய்வாள் பத்தினி
- கோலும் உடையக்கூடாது பாம்பும் சாக வேண்டும்.
- கோணிகோடி கொடுப்பதிலும் கோணாமற் காணி கொடுப்பது நல்லது.
- கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு, பாத்திரமறிந்து பிச்சையிடு.
- கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு.
- கோபம் சண்டாளம்.
- கோயிற் பூனை தேவர்க்கு அஞ்சுமா?
- கோழி மிதித்துக் குஞ்சு முடம் ஆகுமா?
- கோவேறு கழுதைக்கு ரொம்ப கர்வம். அதன் முன்னோர்கள் குதிரையாம்.
- கோடி ஒரு வெள்ளை, குமரி ஒரு பிள்ளை
- கோழியைக் கேட்டு குழம்பு வைக்கும் கலாச்சாரம்
- கோழி மிதித்துக் குஞ்சு சாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| பெற்றோர் மகிழ | உற்றார் கலங்க |
| --- | --- |
| 22 | 08 |
| 09 | 04 |
| 1944 | 2015 |







"கலைவாரிதி", "கலாபூஷணம்"

## அமரர். திரு. இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர், சங்கானை ப. நோ. கூ. சங்க மின்தறியாலை)

எமது கோவிலின் தர்மகர்த்தா சபை உறுப்பினராகிய அமரர் இ. கிருஷ்ணதுரை அவர்கள் நிர்வாக சபையில் பல பதவிகளை வகித்து முருகனின் தொண்டில் ஈடுபட்ட ஒரு பெருந்தகையாவார். அன்னார் தமது பொது வாழ்வின் ஊடாகவும் கலை வாழ்வின் ஊடாகவும் எமது ஊர்மக்களுக்கு நற்பணியாற்றிய ஒரு பெருந்தகையாவார்.

அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல விசவத்தனை வேலவனின் பாதங்களை சென்றடைய வேண்டுவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் தாய், சகோதரர்கள், மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடன் எமது துயரைப்பகிர்ந்து கொள்ளுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விசவத்தனை முருகன் வீதி
பண்ணாகம்.
09-04-2015

இங்ஙனம்
பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில்
பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் உள்ளப் பதிவுகளில் இருந்து சில...

**துன்பம்**

துன்பம் சிலருக்கு தாங்க இயலாது
துன்பம் சிலரால் தாங்க முடியம்
துன்பத்தையே உணர முடியாதவனுக்கு
தாங்க முடியாது
துன்பமே வாழ்வாக கொண்டவனுக்கு
தாங்க முடியும்.

✹ ✹ ✹ ✹

**பலன்**

பூக்கின்ற பூக்கள் எல்லாம்
பிஞ்சாவதில்லை
பிடிக்கும் பிஞ்சுகள் எல்லாம்
காயாவதில்லை
காய்க்கும் காய்கள் எல்லாம்
கனியாவதில்லை
கனியும் கனிகளெல்லாம்
விதையாவதில்லை
விதைக்கும் விதைகள் எல்லாம்
பயிராவதில்லை
பயிராகி விட்டதெல்லாம்
பலன் தருவதுமில்லை!

✹ ✹ ✹ ✹

**மரம் நடப் படும் விழா**

மரம் நாட்டு விழா
வருடா வருடம்
மரம் நாட்டு விழா
ஆனால் நடப்பெறும்
மரங்கள் எல்லாம்
வருடா வருடம் அந்த
ஒரே கிடங்கில் தான் நடப்பெறுகின்றன
நட.......... படுகின்றன

✹ ✹ ✹ ✹

**நான்**

நான் என்பது ஆணவம்
உண்மை
நான் என்பது என் கடமை
உண்மை
நான் என்பது தலைமை
உண்மை
நான் என்பது நாசம்
இது தெரியாத மனித இனம் அதுவும்
தமிழரினம் படும் பாட்டை பாரீர்
நாம் யார் என்பது தெரியாததால்
வந்த வினை இது
மன்னர் ஆட்சி ஒழிக
மக்கள் ஆட்சி மலர்க
பின்னர் வந்தது
மக்களாட்சியா அல்லது
படைக்க முடியாதவன் உயிரைப்
பறிக்கிறான்
படைத்தவன் பதைபதைப்பானா இல்லை
இவை எல்லாம் அவன் நாடகத்துள் சில
காட்சிகள்

✹ ✹ ✹ ✹

**முரண்பாடு**

வீட்டின் பெயரோ 'அன்னை இல்லம்'
அன்னையோ வயோதிபர் மடத்தில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணாகம்
## ஸ்ரீமுருகன் அன்னதான சபையின்
# கண்ணீர் அஞ்சலி

பெற்றோர் மகிழ
22
*
09
*
1944



உற்றோர் கலங்க
08
*
04
*
2015

"கலைவாரிதி", "கலாபூஷணம்"

# அமரர். திரு. இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர், சங்கானை ப. நோ. கூ. சங்க மின்தறியாலை)

நீர்குமிழி தோன்றியபின் நிலையின்றி தானழியும்
நற்கனிகள் சில நொடியில் நிலமதனில் வீழ்ந்துவிடும்
பார்க்கும் விழி ஒரு நாள் பார்வைதனை இழந்துவிடும்
மார்பொருநாள் துடிப்பிளந்து மண்ணோடு உடலழியும்
பார்தனிலே பிறப்பென்றால் பிரிவதும் விதியாகும்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, மக்கள், உற்றார் ,உறவினர்கள், நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஆத்மா சாந்தியடைய விசவத்தனை முருகனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விசவத்தனை முருகன் வீதி
பண்ணாகம்.
09-04-2015

இங்ஙனம்
பண்ணாகம் ஸ்ரீமுருகன் அன்னதான சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் உள்ளப் பதிவுகளில் இருந்து சில...

**உதாரணம்**

மற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதில்
முதன்மையானவராக இருங்கள்.
இதில் எனக்கு தெரிந்த 'சோம
திருச்செல்வம்' முதன்மையானவர்!

✹ ✹ ✹ ✹


**இவர்கள் தமிழர்கள்..?**

ஒன்றாக வாழத் தெரியாத,
ஒற்றுமையாய் இருக்க முடியாத, நான்கு
சுவர்களுக்குள் நடந்ததை நடு றோட்டில்
நின்று கத்தவும் தெரிந்தவன், பழைய
அரசர்களின் வீரம் விவேகம் போன்ற
கதையெல்லாம் சொல்லிச் சொல்லி
களிப்படைபவன், வீண் பெருமை பேசி
தானும் வாழாது தன்னினத்தையும்
சிந்திக்காது ஆண்டாண்டு காலமாய்
அன்னியனுக்கு அடிபணிந்து தன் இனிய
மொழியாம் தமிழ் மொழியை இன்னும்
ஒரு அரியணை ஏற்ற முடியாமல் வாய்
சவடால் அடித்துக்கொண்டிருக்கும்
இவர்கள் தமிழர்கள்.

✹ ✹ ✹ ✹

**இருப்பு**

நீ நீயாக இரு
அவன் அவனாக இருப்பான்
நாம் நாமாக இருப்போம்
நாடு எல்லாம் நமதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்தல்

பெற்றோர் மடியில்
22
09
1944



உற்றார் கலங்க
08
04
2015

எமது சங்கத்தின் மூத்த உறுப்பினரும்
முதலாவது கௌரவ செயலாளருமாகிய
**"கலைவாரிதி",**
**"கலாபூஷணம்"**

## அமரர். திரு. இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை

([illegible])

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள் நண்பர்கள் யாவருக்கும் மனஅமைதி கிடைக்க விசுவத்தனைப் பதியிலமர்ந்த வள்ளி தெய்வயானை சமேத முருகன் சேவடியை இரஞ்சுகின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பண்ணாகம்
சுழிபுரம்
09-04-2015

அன்னாரின் பிரிவால் துயருறும்
**பண்ணாகம் முதியோர் சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதை காட்டும் கடவுள்



பிறப்பு ஒன்றிருந்தால் இறப்பு ஒன்று நிச்சயம். பிறப்போடு இறப்பும் இணைந்து செல்கிறது. இந்த பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையே மனிதனின் மனதில் பல எண்ணங்கள் ஓடுகின்றன. அவற்றுள் சிலவற்றை செயலாக்கவும் பாடுபடுகிறான். இதற்காக மனிதன் பல பிரச்சிலனகளைச் சந்திக்கிறான். இந்த செயலே தோல்வியில் முடிவடைந்தால் மனம் தளராது அதையே வெற்றியின் முதற்படியாக எடுத்துக் கொண்டு மனதை பக்குவப்படுத்திக் கொள்கிறான். பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே நிறயை பாடங்களை கற்றுக் கொள்கிறான். அனுபவங்கள் மனிதனை பதப்படுத்துகிறது. தெளிவான சிந்தனையும் விவேகமாக செயலைச் செயல்படுத்துகிற மனிதன் இறைபதம் அடைகின்றான்.

மனிதன் எடுத்துக் கொண்ட காரியத்தை முழுமையாகச் செய்து முடிக்கும் தன்மையைக் கொள்ள வேண்டும். அரைகுறையான செயல் எவருக்கும் எந்த பலனையும் கொடுக்காது. ஒரு காரியத்தை முழுமையாகச் செய்து முடிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்பட வேண்டும். உருப்படியில்லாத செயலைச் செய்வதை விட செய்யாமலிருப்பது நல்லது. மனம் லயித்து திறமையாக செயல்படும் செயல் மனத்திருப்தியும் சந்தோசத்தையும் கொடுக்கும். முழுமனதோடு செயலில் ஈடுபடும் மனிதன் கடவுளை நாடுகிறான்.

ஒரு கருத்தை மனதில் பதியும்படி அச்சாணியாகவும், அமைதியாகவும் வெளிப்படுத்தும் மனிதன் எதிலும் வெற்றியை அடைகிறான் என்பதில் சந்தேகமில்லை. மனதில் ஒன்றும் வார்த்தையில் ஒன்றும் என்று பகடையாடுகிற மனிதன் பதட்டத்தோடு காண்கிறான். பளிச்சென உரைக்கும் கருத்தும் அதையே அன்பாகவும் சாந்தமாகவும் மக்களிடம் கொண்டு சேர்த்து வழி நடத்துபவன்தான் கடவுளோடு இணைகிறான்.

மனிதன் எந்தச் செயலையும் புத்தியால் செயல்படுத்துகிறான். புத்தியைப் பயன்படுத்தும் மனிதனுக்கு எது நல்லது? எது கெட்டது? என்று தெரிகிறது. மனிதன் தெளிவான சிந்தனையோடு சிந்தித்துச் செயல்படுகிறான்? பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்யும் மனிதன் வாழ்க்–கையின் உண்மையான சாரத்தை புரிந்து வாழ்கிறான். தன்னலத்தை கருதாமல் பொதுநலத்தைப் போற்றும் மனிதன் கடவுளை காண்கிறான். அவனோடு பேசுகிறான். அவனுடன் இணைகிறான் என்று கீதை சொல்லும் சாரம் ஒவ்வொன்றும் மனிதனுக்கு கிடைத்த பொக்கிசம். பிறப்பும் இறப்பும் இயற்கையானது. இதனிடையே மனிதன் கர்ம வழியையும் பக்தி வழியையும் அடைவதற்கு செயல்களை செயல்படுத்துகிறான். இவ்விரு வழியையும் முழுமையாக அடைந்த மனிதனின் முன்னால் கடவுள் தோன்றுகிறார். காட்சியும் தருகிறார். கடவுள் மனிதோடு கலக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
22
09
1944



உதிர்வு
08
04
2015

## அமரர். இ.கிருஷ்ணதுரை

(கலாபூஷணம்)

### பண்ணாகத்தின் அண்ணாவியம் சாய்ந்ததேனோ?

நடித்த கலைஞனே – இசை
நாடகத்தின் நாயகனே
பொதுப்பணி பல நீர் செய்து
பார் போற்ற வாழ்ந்தீரே
உம் சிம்மக் குரலால் ஊரில் உள்ள
உறவுகளை ஈர்த்தவனே
விசவத்தனையில் திருப்பள்ளி எழுச்சியோடு
விடியும்வரை எட்டாம் திருவிழாவில் கூத்து வைத்தீர்
"அழாதவர்கள் யார்?" எனும் உம் பாடலினால் அன்று
அனைவரையும் அழவைத்தீரே
இன்று எம் அனைவரையும் நிரந்தரமாய் அழவைத்து
இறைவனடி சென்றதேனோ?

**உம் ஆத்மா சாந்தியடைய விசவத்தனை வேலவனை வேண்டுகின்றோம்.**


ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

உம் பிரிவால் துயருறும்
பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்
பண்ணாகம்

09.04.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்குறள் –, அறத்துப்பால்

# நீத்தார் பெருமை

21 – ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

**ஒழுக்கத்தில் உறுதியான துறவிகளின் பெருமை, சான்றோர் நூலில் விருப்பமுடனும், உயர்வாகவும் இடம் பெறும்.**

22 – துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

**உலகில் இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கூற முடியுமா? அதுபோலத்தான் உண்மையாகவே பற்றுகளைத் துறந்த உத்தமர்களின் பெருமையையும் அளவிடவே முடியாது.**

23 – இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

**நன்மை எது, தீமை எது என்பதை ஆய்ந்தறிந்து நன்மைகளை மேற்கொள்பவர்களே உலகில் பெருமைக்குரியவர்களாவார்கள்.**

24 – உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

**உறுதியென்ற அங்குசம் கொண்டு, ஐம்பொறிகளையும் அடக்கிக் காப்பவன், துறவறம் எனும் நிலத்திற்கு ஏற்ற விதையாவான்.**

25 – ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

**புலன்களை அடக்க முடியாமல் வழிதவறிச் சென்றிடும் மனிதனுக்குச்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றாக இந்திரன் விளங்கி, ஐம்புலன்களால் ஏற்படும் ஆசைகளைக் கட்டுப்படுத்தியதால் வான்புகழ் கொண்டவர்களின் ஆற்றலை எடுத்துக் காட்டுகிறான்.

26 – செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

**பெருமை தரும் செயல்களைப் புரிவோரைப் பெரியோர் என்றும், சிறுமையான செயல்களையன்றிப் பெருமைக்குரிய செயல்களைச் செய்யாதவர்களைச் சிறியோர் என்றும் வரையறுத்துவிட முடியும்.**

27 – சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

**ஐம்புலன்களின் இயல்பை உணர்ந்து அவற்றை அடக்கியாளும் திறன் கொண்டவனையே உலகம் போற்றும்.**

28 – நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

**சான்றோர்களின் பெருமையை, இந்த உலகில் அழியாமல் நிலைத்து நிற்கும் அவர்களது அறவழி நூல்களே எடுத்துக் காட்டும்.**

29 – குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

**குணக்குன்றுகளான பெரியவர்கள் கோபம் கொண்டால் அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு கணம் கூட நிலைத்து நிற்காது.**

30 – அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

**அனைத்து உயிர்களிடத்திலும் அன்புகொண்டு அருள் பொழியும் சான்றோர் எவராயினும் அவர் அந்தணர் எனப்படுவார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனிப்பரியாரி குடும்பம்

**ஆச்சிமுத்து + பொன்னையா**

- சின்னம்மா
- இரத்தினசிங்கம்

**மாணிக்கம் + சின்னம்மா**

- தெய்வானைப்பிள்ளை

**இரத்தினசிங்கம் + சிவபாக்கியம்**

- கிருஷ்ணதுரை
- சிவகங்கை
- மதியாபரணம்
- பரமேஸ்வரன்
- கோகுலராசா
- சந்திரா
- கலாமணி

**கிருஷ்ணதுரை + தெய்வானைப்பிள்ளை**

- ஜெய்சிறிநிவாஸ் + ஜோதீஸ்வரி — ஆரணி
- ஜெய்சந்தர் + ஞானேஸ்வரி — விவேகன், விவேகா, கார்த்திகன்
- ஜெய்குமாரி (அமரர்)
- ஜெய்காந்தன் (அமரர்)
- ஜெய்சுகந்தன் + சர்மிளா
- ஜெய்ரமணன் + ரேணுகா — அஞ்சனா
- ஜெய்சக்தி — பாரதிகிருஷ்ணா, அபிராமி, குபேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

08.04.2015 அன்று எங்கள் குடும்பத்தில் நிகழ்ந்துவிட்ட பிரிவுத்துயர் கேட்டு எங்கள் இல்லம் நாடிவந்து சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், எம் உடனிருந்து அனுசரணை செய்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் நேரில் வந்து அஞ்சலி செய்தவர்களுக்கும், எங்கள் துயரம் கேட்டு உள்நாடுகள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி ஊடாக தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், சமூக வலைத்தளங்களில் தங்கள் துயர்களைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும்
மற்றும் சகல வழிகளிலும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய உள்ளங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள் , மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org